நல்ல போர்ச்சேவகர்க்காய்...

தேவராஜ்யம்

வழங்கும்

ஜீவகிரீடம்

மரணத்தைப்போல் வலிய
நேச வைராக்கியத்துடன்-தன்
ஜீவனையும் பாராது
பரலோகத்தையே...
பலவந்தப்படுத்துமளவில்-
சுவிஷேசப் போர்முனையில்
பாடுகளோடு முன்னேறும்
யுத்த வீரர்களுக்காய்
தேவராஜ்யம் வழங்கும்
ஜீவகிரீடம்

A. ரவி ஆபிரகாம்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

நல்ல போர்ச்சேவகர்க்காய்

தேவராஜ்யம்

வழங்கும்

ஜீவகிரீடம்



A. ரவி ஆபிரகாம்

ஸ்தாபகர்–இயக்குனர்
ரிஷியாமிஷன் – ஒரிசா

நல்ல போர்ச்சேவகர்க்காய்

தேவராஜ்யம்

வழங்கும்

ஜீவகிரீடம்

முதற்பதிப்பு – 2009

பதிப்புரிமை – ஆசிரியருக்கே

தொடர்புக்கு:
riziamission2001@gmail.com
Ph: 097779 95498, 094381 39439
04652-235039

வெளியிடுபவர்:
T.வில்ஸ் அமுதா, MSc. MEd, M.Phil.
ரிஷியா மிஷன்
அமுதா காட்டேஜ், 14A, ஞானாயி தெரு,
நாகர்கோவில்–629 001.
கன்னியாகுமரி மாவட்டம்
தமிழ்நாடு, இந்தியா
Ph:09994419101

நல்ல போர்ச்சேவகர்க்காய்

தேவராஜ்யம்

வழங்கும்

ஜீவகிரீடம்

மரணத்தைப்போல் வலிய
பாதாளத்தைப் போல் கொடிய
நேச வைராக்கியத்தினால்...
தன்னைத்தான் வெறுத்து
தன் ஜீவனையும் பாராது
சிலுவை சுமக்கும் நெஞ்சுறுதியோடு
பரலோக ராஜ்யத்தையே...
பலவந்தப்படுத்துமளவில்
சுவிஷேசப் போர்முனையில்
பாடுகளோடு முன்னேறும்
நல்ல யுத்த வீரர்களுக்காய்
தேவராஜ்யம் வழங்கும்

ஜீவகிரீடம்

A. ரவி ஆபிரகாம்

இதயத்திலிருந்து பேசுகிறேன்...

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே

நம் இரட்சகராம் இயேசுவின் நாமத்தில்—உங்களை
நெஞ்சம் நிறைந்து வாழ்த்துகிறேன்.
நம் ஆத்தும நேசரின் என் பின்னே வாருங்கள்
என்ற அழைப்பைப் பெற்றதுமே அவரது
சீஷர்கள் எல்லாவற்றையும் விட்டு – அவரை பின்பற்றி
மனிதரைப் பிடிக்கிறவர்களாய் மாறினர்.
நானும் கூட, எனது கவலையற்ற அரசுபணி, மிகவும்
நம்பியிருந்த அரசியல் வாழ்வு, நல்ல லாபம் தந்த தொழில்,
வழக்கறிஞர் பட்டமென்று ஒரே நேரத்தில்
அநேக கல்லரைகளைக் கட்டிக் காத்துக் கொண்டிருந்த
லேகியோன் போன்ற நான் – ஆத்தும நேசரின்
இரட்சிப்பைக் கண்டு குணப்பட்டதுமே
குணப்பட்ட லேகியோன் உடன் தானே தெக்கபோலி
என்னும் பத்துபட்டணங்களுக்கு சுவிசேஷம் சொல்லப்
புறப்பட்டது போல் – அடியேனும்
உலகபூர்வமான எல்லா வாய்ப்பு வசதிகளையும்
கிறிஸ்துவுக்காய் அற்பமும் குப்பையுமென்று
உதறி தள்ளிவிட்டு – ஒரிசா மாநிலம் நோக்கி
மிஷினரி பணி செய்வதற்காக புறப்பட்டேன்.
என் நேசமணாளன் மிகுதியாக ஆசீர்வதித்து தந்த
வீடு, மனைவி, மனைவியின் அரசுபணி, மகன், மகள்,
ஆஸ்தி, ஐசுவர்யம் என அனைத்தோடும்
அடியேனின் முழுவாழ்வையும் – நம் இரட்சகரின்
பாதபீடத்திலே சமர்ப்பித்தேன்.

எனக்கே ஆச்சரியம் இந்த லேகியோன் போன்ற
என்னால் இவைகளெல்லாம் எப்படி முடிந்ததென்று!

ஆம். தீவட்டியைப் போல் எரிந்த என் இரட்சிப்பை—என்னால்
அடக்கிக் கொண்டிருக்க முடியவில்லை. புறப்பட்டேன்.
பெலிஸ்தியரின் வெள்ளாண்மையை அழிப்பதற்காக
இரட்சிப்பாகிய தீப்பந்தத்தை கொழுத்தி விடப்பட்ட
எந்த நரியால் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்?
பொல்லாத கோலியாத்தாக கொக்கரிக்கும் தேசத்திலே
சுவிஷேச போர்முனை நோக்கி புறப்படாமலிருப்பதெப்படி?
தேவ ஜனங்களை அழிவிலிருந்து காக்க செத்தாலும் சாகிறேன்
எனப் புறப்படுகிறவளே... எஸ்தர்.
சீர் கெட்ட ஆகாப் தேசத்திலே... கர்மேலில் நின்று
வீரமுழக்கமிடாவிட்டால் ... எலியாவின் மேலிருந்த
அபிஷேகத்தால் என்ன பிரயோஜனம்?
அன்பு நெஞ்சங்களே வாருங்கள் நல்லப் போர்ச்சேவகராய்
கர்த்தருடைய யுத்தங்களை நடத்துவோம்.
இராஜாதி இராஜாவின் புத்திர சுவிகாரம் பெற்ற நமக்காக,
அலங்கரிக்கப்பட்ட புதுமணப் பெண்ணாளாக
தேவராஜ்யம் ஜீவகிரீடத்தோடு காத்திருக்கிறது.
மரணத்தை விஞ்சும் நேசவைராக்கியத்தினால்
பரலோகத்தையே பலவந்தப்படுத்தும் தீவிரத்தோடு
அணல் கொண்டு நாம் கிறிஸ்துவுக்காய்
ஆயத்தப்படுவோம், ஆயத்தப்படுத்துவோம்.
யுத்தத்தில் நில்லாது ஜெயமுமில்லை – ஜெயமின்றி
ஜீவகிரீடமுமில்லை, என்பதை உணர்ந்து ஜெயங்கொள்ளும்
சேனாபதியாம்... நம் நேசரோடிருப்போம் நாம்.
பாராக்குகளாக நியந்தனையோடு காத்திராமல்
தெபொராளாக விழித்தெழுந்து புறப்படுவோம்.
முடிவு பரியந்தம் நிலைத்திருந்து – நித்திய ராஜ்யத்தின்
சுதந்தரவாளிகளாய் ... நேசரோடு ஆளுகை செய்வோம்!

இயேசுவின் நாமமே மகிமைப்படட்டும்

A. ரவி ஆபிரகாம்

உள்ளே....

நல்ல போர்ச்சேவகர்க்காய்

தேவராஜ்யம்

வழங்கும்

ஜீவகிரீடம்

I. நாம் இளவரசர்கள், நமக்காக ஜீவகிரீடம்

1. இராஜாதி இராஜா நம் தந்தை
2. இராஜாவின் புத்திரரே இளவரசர்
3. போர்முனையா? பொக்கிஷ சாலையா?
4. வெற்றியா? தோல்வியா?
5. முழங்கிக் கொர்ச்சிக்கிற கர்த்தர்
6. உலக பந்தையங்களும்... அழிந்து போகும் கிரீடமும்
7. விலையேறப்பெற்ற ஜீவகிரீடம்

II. யுத்தத்தில் ஜெயங்கொள்ளும் சேனாபதியோடு நாம்...

1. எக்காள சத்தத்திற்கு செவிகொடுப்போம்
2. நீ எங்கேயிருக்கிறாய்?
3. பற்றி எரியும் ஒரிசா
4. பதுங்கு குழியிலிருந்து புறப்படுவோம்
5. ஆயுத சாலையை திறக்கும் கர்த்தர்
6. வெங்கல கதவுகள்... இருப்புத் தாழ்பாட்க்கள்
7. சிங்கமும்... பாலசிங்கமும்... போல்

III. யுத்தமின்றி ஜெயமுமில்லை... ஜெயமின்றி ஜீவகிரீடமுமில்லை..

1. ராஜாவும் படைபரிவாரமும்
2. இஸ்ரவேலை கலங்கப் பண்ணுகிறவன்
3. போராடுவோம் வாருங்கள்

4. சிங்கக்கெபியும் அக்கினிச் சூளையும் இல்லையேல்...
5. கர்த்தரே யுத்தம் செய்கிறவர்
6. நல்லப் போர்ச்சேவர்களாய்,,,
7. ஒருவரும் பூட்டமுடியாத திறந்த வாசல்கள்

IV. நேசவைராக்கியத்தினால் மரணத்தை விஞ்சும் வீரப்புறப்பாடு

1. வயல்வெளிக்குச் செல்லுவோம்
2. எருசலேம் குமாரத்திகளே
3. நம் நேசமணாளனுக்காய்...
4. எலும்புகளுக்குள் பற்றி எரியும் நேச அக்கினி
5. என் பிரியமே... எழுந்துவா
6. கெம்பீரத்தோடே அறுப்போம்
7. என் நேசரோடு ஓடிப்போகாமல் இருக்க முடியவில்லை.

V. பரலோக ராஜ்யத்தை பலவந்தப்படுத்தும் தீவிரம்

1. பலவந்தப்படுத்துவோர்
2. பெற்றுக்கொள்ளும் தீவிரவாதிகள்
3. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்
4. பரலோக உத்தரவுகள்
5. செம்மையாக்கப்பட வேண்டிய ராஜபாதை
6. வீறு கொண்டுப் புறப்படும் இளைஞர் படை

VI.. உலகத்தின் அதிபதியை வீழ்த்த சிலுவை சுமக்கும் நெஞ்சுறுதி

VII. நேசரோடு பாடுபடுவோம் அவரோடு ஆளுகை செய்வோம்

ஆமென் - அல்லேலூயா

நாம் இளவரசர்கள் : நமக்காக ஜீவகீரிடம் 1

வானும் மண்ணும் தோன்றுவதற்கு முன்னே பொன்னும் மணியும் மின்னும் பொற்றள வீதியுமான, நாம் யுகாயுகமாய் வாழ்ந்து சுகிக்கும் நித்திய ராஜ்யம் நமக்குச் சொந்தம் நமக்காக வாக்களிக்கப்பட்ட இந்த ஒப்பற்ற தேவராஜ்யத்திற்கு நம் நித்திய ராஜாவாம் தேவாதி தேவனின் புத்திர சிலாக்கியம் பெற்ற நாம் இளவரசர்களே!

'மேலும், எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்' 'நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே சாட்சிக் கொடுக்கிறார்' ரோமர் **8.14,16**

திரள்கோடி ஜனங்கள் வாழும் இந்தப் பூவுலகில் எவருக்குமே கிடைக்காத மேன்மைமிக்க சிலாக்கியங்களுக்கு சொந்தகாரர்கள் நாம் கிருபைகளிலெல்லாம் பெரிய கிருபை, கிறிஸ்து நம்மை தெரிந்துகொண்ட கிறிஸ்தவர்களாயிருப்பது. ஆம், நாம் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுவதால் தேவனுடைய புத்திரர்களாயிருக்கிறோம். தேவ ஆவியானவரே! நாம் தேவனுடைய பிள்ளைகளென்று சாட்சிக் கொடுப்பதை விட மேலான பாக்கியம் வேறொன்றுமில்லை.

நம் பரம தந்தையாம் முடிவில்லா ராஜ்யத்தின் ராஜாவோடு இருக்கிற இளவரசர்கள் நமக்கு நாம் நின்று நடத்த, வேண்டிய கர்த்தருடைய யுத்தங்கள் இருக்கிறது.நல்லப் போர்ச் சேவகராய், தேவனுடைய ஆவியினாலே நல்ல போராட்டத்தைப் போராடி– ஜெயங்கொள்கிற இளவரசர்களாம் தேவபிள்ளை களுக்காய், ஜீவகீரிடம் வழங்க தேவராஜ்யம் காத்திருக்கிறது.

1-1

ராஜாதி ராஜா: நம் தந்தை

கிழக்கிலே தோன்றிய அதிசய நட்சத்திரம் மூலமாக வழிநடத்தப்பட்டு இயேசுவின் பிறப்பை தரிசிக்க வந்த, பேர் பெற்ற சாஸ்த்திரிகள் மத்தேயு-2:2ல் சொல்லப்பட்டபடி, யூதருக்கு ராஜாவாக பிறந்திருக்கிறவர் எங்கே? எனத் தேடி புறப்படுகின்றனர்.

'தாவீதரசன் பாடும்போது, 'வாசல்களே! உங்கள் தலைகளை உயர்த்துங்கள், அநாதி கதவுகளே உயருங்கள், மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார். யார் இந்த மகிமையின் ராஜா? அவர் சேனைகளின் கர்த்தரானவர்; அவரே மகிமையின் ராஜா. சங்கீதம்-24:9,10

யுத்தத்தில் பராக்கிரமமுள்ள, சேனைகளின் கர்த்தராகிய மகிமையின் ராஜா, உட்பிரவேசிக்க- பூர்வகால முதல், தாழ்ந்து கூனிக்குறிகிப் போன வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள் என்றும், அநாதியாய் உயரமுடியாமலிருந்த கதவுகளே உயருங்கள், ராஜா உள்ளே பிரவேசிப்பாரென்பது மகிழ்ச்சியின் நற்செய்தி. காலகாலமாய் அடிமைப்பட்டு தாழ்ந்து, பாவங்களில் வீழ்ந்து, தலைகளை உயர்த்த முடியாதிருந்த ஜனங்களுக்கு விடுதலையைத் தந்து, மீட்டு இரட்சிக்க அவதரித்தவரே நம் அருள்நாதர் இயேசு. வனாந்திரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாக வந்த யோவான் ஸ்நானகன் அறைகூவல் விட்டது போல...

'பள்ளங்களெல்லாம் நிரப்பப்படும், சகல மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படும், கோணலானவைகள் செவ்வையாகும், கரடானவைகள் சமமாகும்'. லூக்கா: 3:4

என்ற பிரகடனங்களோடு பிறப்பெடுத்த- நம் இரட்சகரின் பிறப்பின் செய்தி கேட்டதுமே, தேசத்தின் தலைவர்களுக்கோ நடுக்கம், அதிபதிகள் ஆடிப்போயினர்

ஏரோது ராஜா இயேசுவின் பிறப்பைப் பற்றிக் கேட்ட போது, அவனும் அவனோடு கூட எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள். (மத்தேயு:2:3) யூதருக்கு ராஜாவாக பிறப்பெடுத்த இயேசு என்ற அந்த ஏழைக் குழந்தையின் பிறப்பு உலகெங்குமுள்ள தேசங்களையும், மக்கள் இனங்களையும், அதிகாரவர்க்கத்தையும், பள்ளங்களாய், கரடுகளாய், கோணலாய் காணப்பட்ட எல்லாவித ஆளுகின்ற வர்க்கத்தாரையும் நடு நடுங்கச் செய்து உலக வரலாற்றையே மாற்றியமைத்தது.

ஏனெனில், '...அவரே நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதி பதியும், ராஜாதிராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும்'. I தீமோ.6.15 என்றென்றும் ஆளுகிறவருமாயிருக்கிறார்.

'சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூறு: எருசலேம் குமாரத்தியே கெம்பீரி; இதோ உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும்... இரட்சிக்கிறவருமாயிருக்கிறார்' என்று சகரியா 9.9ல் தீர்க்கதரிசனமாய் சொல்லப்பட்டபடியே, அவரது பிறப்பே அற்புதம், ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தாவென்பது அவருடைய நாமம். ராஜாக்களைத் தள்ளி ராஜாக்களை ஏற்படுத்துகிற, பரமபிதாவின் பிள்ளைகளாயிருக்கிற நாம் பேருபெற்றவர்கள். நமது பரம தந்தையே, ராஜாதி ராஜாவாயிருப்பதால்... அவரது புத்திர சுவிகார ஆவியைப் பெற்ற நாம் இளவரசிகளும், இளவரசர்களுமாயிருக்கிறோம்.

நம்முடைய மகிமையின் கர்த்தராகிய இயேசு, கல்வாரி சிலுவையிலே நம்முடைய பாவங்களுக்காக தன்னையே ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்கும், விசாரனை வேளையிலே, மரண ஆக்கினையை அவர் மீது சுமத்திய மக்கள் நடுவே, தேசாதிபதியாகிய பிலாத்து, சிங்கம் போன்று நின்று, 'நீ யூதருடைய ராஜாவா?' என்று கேட்ட கேள்விக்கு, இயேசு, 'நீர் சொல்லுகிறபடி நான் ராஜா தான்,' என்று பதிலுரைத்து மகாப் பாடுகளின் போதும் யூத ராஜசிங்கமாகவே நின்றார்.

1-2
ராஜாவின் புத்திரரே இளவரசர்

'அப்பொழுது நான் உங்களை ஏற்றுக்கொண்டு உங்களுக்கு பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்கு குமாரரும், குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்.' 2 கொரி: 6:18

நம் ராஜாதிராஜாவாம் கிறிஸ்து இயேசுவின் கற்பனை களையும் கட்டளைகளையும் கைக்கொண்டு அசுத்தமானதைத் தொடாது, ஜீவனுள்ள தேவனின் ஆலயமாயிருக்கிற நாம் அவரது பிள்ளைகளாய் ஏற்றுகொள்ளப்படுகிறோம். இளவரசனும், இளவரசியுமாக புத்திர சிலாக்கியம் பெற்ற நாம் அனைவரும், அவரோடு ஆளுகை செய்யும் பாக்கியம் பெறுகின்றோம். சமூகத்தில் உயர்ந்தோர், தாழ்ந்தோர், கல்வி கற்றோர், கல்லாதோர், ஏழை, பணக்காரன் என்ற எவ்வித பாகுபாடுமின்றி உலகோர் அனைவருக்கும் கொடுக்கப்பட்ட மாபெரும் அழைப்பே- பரமபிதாவின் புத்திரசிலாக்கியம் பெறுவதுதான். நீதிமான்களையல்ல பாவிகளையே மீட்க மனிதனாய் அவதரித்த நம் இரட்சகர் இயேசு, நமது பாவமானது இரத்தாம்பர சிவப்பாய்த் தோன்றினாலும், அதைப் பஞ்சைப் போல் வெண்மையாக்கி நம்மை பரிசுத்தப்படுத்தி தம் புத்திரராய் ஏற்றுக்கொள்வதே தேவ திட்டம்.

பாவிகளில் பிரதான பாவியாய், பன்றிகளோடு பன்றியாய், பன்றி தின்னும் தவிட்டை தின்று வாழும் மனிதனானாலும் அவனை, மனதிறங்கி இரட்சித்து அள்ளி அணைத்துக் கொள்ளப் பரிவோடு காத்திருக்கிறார், கெட்டக் குமாரனின் பாசமிகு தந்தையாய் அருள் நாதர் இயேசு. ஏழையோ பாவியோ, கள்வனோ, அசுத்தனோ யாராக இருந்தாலும், இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படும் போது, இரட்சிப்பாகிய பெரும் பேற்றை பெற்றுக் கொள்கிறான்.

தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள், என்று– கேட்கிற எவனும் பெற்றுக் கொள்கிறான் என்ற மகா எளிமையான நற்செய்தியின் படி, மாம்சமான யாவர் மேலும் தேவ ஆவி ஊற்றப்படுகிறது. இந்த விலையேறப் பெற்ற பொக்கிஷமாகிய தேவ ஆவியை பெற்ற இளவரசர் அநேகர், இலவசமாகப் பெற்றதாலோ என்னவோ, இந்த பெரும் பாக்கியத்தை இழந்து, நம் சேனாபதியாம் சர்வ வல்லமையுள்ள கர்த்தரின் கற்பனைகளை கைவிட்டு, கெட்டுப்போன இளைய குமாரர்களாய் பரிதவிக்கின்றனர். இயேசு சொன்ன கெட்ட குமாரன் உவமையின் படி, நாம் எந்த சீர்கேடான சூழ்நிலையில் வாழ்ந்தாலும், வருந்தி, மனந்திரும்பி, கீழ்படியும் போது, நமக்கு மன்னிப்பும் மீட்பும் புத்திரசுவிகார பாக்கியமும் உண்டு. பேலியாளின் புத்திரரோ! யேசபேலின் பங்காளிகளோ!

நம் மகிமையான தேவராஜ்யத்தில் பங்கடைவதுமில்லை, ஜீவ கிரீடத்தைப் பெற்றுக்கொள்வதுமில்லை. சர்வவல்லமையுள்ளக் கர்த்தரின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவர் சித்தம் செய்கிற, மகிமையின் ராஜா கிறிஸ்துவின் புத்திரரே இளவரசராகுகின்றனர்.

நாம் ஒவ்வொருவரும், 'நான் சேனாபதியாம், சர்வ வல்லமையுள்ள கர்த்தரின் போர்படையிலே யுத்தவீரன் – இளவரசன்,' என்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சொல்லலாம். நமக்கு இராஜ்யம், ராஜா, சேனை இருப்பது போன்று, இன்னும் முடியாத யுத்தம் ஒன்று நடந்து கொண்டேயிருக்கிறது. ராஜ்யம் இல்லாமல் எவரும் ராஜாவாக இருப்பதில் அர்த்தம் இல்லாதது போல, போர் முனையில் நிற்கிற தந்தையாம் ராஜாவோடு, போர்முனையில் நில்லாத புத்திரர்கள் இளவரசராவதில்லை.

1-3
போர்முனையா? பொக்கிஷசாலையா?

இளவரசர்களாகிய நாம் பெற்று அனுபவிக்கக் கூடிய சகல பாக்கியங்களும், நம் ராஜாவின் மாளிகையில் உண்டு. இரட்சிக்கப்படுமுன் பல வாலிபர்களும், உலக மனிதர்களாகிய சுய இச்சையில் வாழ்வோரும், 'ஆவிக்குரிய வாழ்க்கையென்பது ஆண்டவரின் பிள்ளையாக வாழ்வதென்பது, எந்த சந்தோஷமும் இல்லாத வாழ்வு என நினைத்து மந்த புத்தியோடு வாழுகின்றனர்.

பொன்னும் வைரமுமாகிய உச்சிதமான ஆபரணங்களோடு, அலங்கார பொக்கிஷமாக தன்னருகே நிற்கும் மணவறை மணவாட்டியின் ரம்மியத்தை, கண் இல்லாத எவன் கண்டு கொள்ளமுடியும்? என் அன்புச் சகோதரனே! தோன்றி மறையுமுன்னே, வெறுப்பையும் வேதனையும் தருகின்ற, சிற்றின்பங்களாகிய களிம்பை நீக்கிவிட்டு உன் ஆவிக்குரிய கண்களைத் திறந்து பார். நீ நிற்பது இராஜாவின் மாளிகை என்பதை புரிந்துகொள்வாய்.

அதே அற்புத கண்களால், உன்னையே நீ பார்–நீ யார் என்பதும், நீ ஜெனிப்பிக்கப்பட்டது ஏன்? என்றும். நீ சாதிப்பதற்கு தெரிந்து கொள்ளப்பட்டவன் (ரிஷியா) என்பதும் தெரியும்.

ஆனால் உலகமோ, விக்கிர ஆராதனைக்கு, நவ நாகரீக இசையமைத்து, புதுப்புது தோரணங்களைக் கட்டி, மாய்மால பஞ்சுமெத்தைகளை விரித்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும் கண்டுகொள்ளாத, கர்மேல் பர்வதமாய் எழுந்து நிற்கும் போது, கர்த்தருக்காய் யுத்தம் செய்ய நீயும் அழைக்கப்பட்டவன், அழைக்கப்பட்டவள் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. அன்றொரு நாள் கர்மேல் பர்வதத்தில், நாற்பரிமானமாய் நானூறு பாகால் தீர்க்க தரிசிகளும், ஆளுகின்ற மன்னனோடு அரசவை பிரதானிகளும் எவரும் தட்டிக் கேட்க முடியாத அதிகார வெறிபிடித்த அதிகார வர்க்கத்தாரும், அக்கினிகுண்டமாய் கர்மேலில் அணிவகுத்து

நின்ற போது, சீறும் எரிமலை அக்கினி பிளம்பாக, தேவ அபிஷேகத்தோடு நிமிர்ந்து நின்று சவாலிட்ட, எலியாவின் இடத்தை நிரப்ப இறையரசு உன்னைத்தான் எதிர்பார்க்கிறது இளவரசனே!

எங்கு நோக்கினாலும் கர்மேலாக காட்சி தருகின்ற நம் பாரத தேசத்திலே, இன்னும் நூற்றுக்கு மூன்று சதவீதத்திலேயே இருக்கிற, நமக்கு 97சதவீத அழைப்பு இருக்கிறது. உலக சுவிஷேச களம் உன்னைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது

பசி, பட்டினியோடு போதிய வசதிகளில்லாதும் ஒரு கூட்டமாய் உன் சகோதரர்கள் தேசமெங்கிலும் நின்று ராஜா விரும்புகிற கோதுமை மணிகளை மீதியானியராகிய, சுவிசேஷ விரோதிகளின் கைக்கு தப்புவிப்பதற்காக, உடன் சகோதரர்களின் இரத்தம் ஒருபுறம் சிந்தப்பட்டுக் கொண்டேயிருந்தாலும்... ஓயாத பிரச்சனை, எதிர்ப்புகளூடே வீடு, மனைவி, மக்கள் என தம் ஜீவனையும் பாராது, ஆலைக்கு அருகிலேயே போரடித்து தீவிர சுவிஷேசப்பணி செய்துவருகின்றார்கள்.

யார் போவாரோ...! என வருந்திகேட்கிற மாபெரும் தேவையிருக்கிறது, சகோதரனே! ஆம் உலக சுவிசேஷ களம் உன்னைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

எழுந்து புறப்படு, காலாட்களோடு ஓடும் போதே யுத்த ரதங்களை விஞ்சும் உன் வீர ஓட்டம் தொடங்கட்டும். முதலில் உன் பிதாக்களின் தேவன் உனக்காக திறந்தே வைத்திருக்கும் ஆயுத சாலையைப் பார், இரத்தம் சிந்தாதபடிக்கு பட்டயத்தை அடக்கிவைக்காமல் உன்னை நடத்திய உன் அண்ணன்மார் பயன்படுத்திய இரத்தத்தில் தோய்ந்த உடுப்போடு சத்தியம் எண்ணும் கச்சையை அறையிலே கட்டிக்கொள்.

கொதிக்கும் நெஞ்சிலே... நீதியெனும் மார்கவசத்தைத் தரித்துக்கொள். தேவனுடைய சர்வாயுதவர்க்கமனைத்தையும் தரித்து, தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தைக் கையிலேந்தி புறப்படு.

ஆயுத சாலையை திறந்தே வைத்திருக்கிற இஸ்ரவேலின் இராணுவங்களின் தேவன், பொக்கிஷ சாலையின் திறவு கோல்களை உன் கரத்திலேயே தந்திருக்கிறார். திறந்து பார் பொக்கிஷசாலையை, பூலோக மேன்மை, பெருமை, இன்பமெல்லாவற்றையும் அற்பமாக எண்ண வைக்கும் மெய்யான– உண்மையான இன்பமும் ஞானமிக்க சமாதானக் காரணிகளும் நீ பயன்படுத்தி – பாதுகாக்கவேண்டியவை.

காணக்கூடியவற்றையும், காணகூடாதவற்றையும் கூட படைத்து உலகம் அனைத்தையும் பொக்கிஷமாக புதையலாக உன் கரத்திலேயே தந்திருக்கிற தேவாதி தேவனைப் பார். பொக்கிஷங்களை மட்டுமே சுற்றி செவிட்டு விரியனாய் உறங்கிகிடப்பவர்கள் கிடக்கட்டும். உன்னதருக்காக ஓயாது உழைத்திட இன்றே புறப்படு. உன்னைப் போன்று புறப்பட்ட சகோதரர்கள் எது பொக்கிஷசாலை? எது பொக்கிஷம்? எனத் தெரியாமல் வீழ்ந்துகிடக்கும் வழிகாட்டிகள் மற்றும் மாண்டுபோன வீரர்களின், நாற்றமெடுக்கும் மாமிசத்தால் நிறைந்திருக்கும் இந்த உலகமாகிய யுத்தகளம் கண்டு மருளாதே. முசுகட்டை செடிகளின் நுணிகளிலே செல்லுகின்ற இறைச்சல் கேட்டுக் கொண்டேயிருக்கிறது.

புறப்படு! யுத்தத்திற்கு தேவனாகிய கர்த்தர் உனக்கு முன்னே அங்கே நிற்பார். யுத்தம் உன்னுடையதல்ல, யுத்தம் கர்த்தருடையது, அவர் பார்த்துக் கொள்ளுவார்.

1-4

வெற்றியா.... தோல்வியா?

மூடத்தனம். இந்த மூடத்தனமான கேள்விகளுக்கு இடமே யில்லை. காயலான் பட்டறையில் ஹெலிகாப்டர் செய்யலாமா? என்ற பகற்கனவு சோம்பேறிகளின் கேள்விகளுக்கு இங்கே நிச்சயமாக இடமில்லை. ராஜா, ராஜ்யம், படை, பரிவாரம் நமக்கு உண்டு. ஆனால் அடி, அவமானம், கட்டு, காவல், சிறை, சிறைச் சேதம் எதுவும் வரலாம். கல்வாரி பாதை சென்று சிலுவை சுமக்க நேரிட்டாலும், வெற்றியென்பது விசுவாச போர் வீரர்களாகிய தேவபிள்ளைகளுக்குத்தான் என்பதில் எந்த சந்தேகமுமில்லை.

நிச்சயமாக போராட்டம் உண்டு. போராட்டம் இல்லாமல் கிறிஸ்தவ வாழ்க்கையில்லை. ஆனால் உலகத்திலுள்ள எல்லா போட்டி போராட்டங்களுக்கும், ஆவிக்குரிய போராட்டம் என்பதற்கும் மிகப்பெரிய வித்தியாசம் என்னவென்றால், இது வெற்றி யாருக்கென்று நிச்சயிக்கப்பட்ட போராட்டம். உத்தமத்தைக் காத்துக் கொண்ட தேவபிள்ளைகள் தோற்றுப் போனதாக சரித்திரமேயில்லை.
'...இந்த யுத்தம் உங்களுடையதல்ல; தேவனுடையது' IIநாளா.:20:15

யூதா ஜனங்களுக்கும் யோசபாத் ராஜாவுக்கும் விரோதமாக மோவாப்புத்திரரும், அம்மோன்புத்திரரும் வெகுதிரளாக வந்தபோது, மக்களோடு மன்னனும் தேவாதி தேவனை நோக்கி உபவாசித்து கதறியபோது, வந்த தேவனுடைய வார்த்தைகள் தான் இவை! இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது என்றும்–

'இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல, யூதாமனுஷரே, எருசலேம் ஜனங்களே, நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பை பாருங்கள். பயப்படாமலும், கலங்காமலும் இருங்கள். நாளைக்கு அவர்களுக்கு எதிராக புறப்படுங்கள், கர்த்தர் உங்களோட இருக்கிறார் என்றான்.'

II நாளாகமம்:20:17

ஆவிக்குரிய வாழ்க்கையிலே வருகின்ற போராட்டங்கள், சோதனைகள், வேதனைகள் இன்னல்கள் இடையூறுகளை நம்மால் மாத்திரம் ஒன்றும் செய்யமுடியாது. ஏனெனில் தேவபிள்ளைகளுக்கு வருகிற போராட்டங்களை–யுத்தங்களை நடத்த தேவாதி தேவனால் மாத்திரமே முடியும்.

நாம் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து, இந்த யுத்தத்தை பண்ணுகிறவர் நாம் அல்ல என விசுவாசித்து, தரித்து நின்று கர்த்தர் நமக்குச் செய்யும் இரட்சிப்பை நோக்கி வாஞ்சையாக தொடரும்போது ஜெயம் பெறுவோம்.

யோசபாத் அரசனும் யூத ஜனங்களும், நடு நடுங்க வைக்கும் ஆயுதம் அணிந்த மகா சேனையாம் எதிரிகளின் படைக்கு முன்பாக சென்று, 'கர்த்தரை துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது' என்று முழங்கி சத்தமிட்டு, தேவனை துதித்து பாடத்தொடங்கியதுமே... யூதாஜனங்களையும், யோசபாத்தையும் எதிர்த்து நிர்மூலமாக்க வந்த எதிரிகள் ஒருவர் பட்டயத்தை ஒருவருக்கு விரோதமாக ஓங்கி எதிரிகளை வெட்டுண்டு செத்து மடியச்செய்தார் நம் சேனாபதியாகிய கர்த்தர்.

கர்த்தருடைய சித்தத்தின் படி நாம் செயலாற்றும் போது, அவரது ஆத்தும தாகங்களை, அவரது இதய வாஞ்சைகளை முதலும் முடிவுமான அவரது பிரதான கட்டளைகளை, நாம் நிறைவேற்ற வாஞ்சையாக இருக்கும் போது சிலவேளைகளில் நாம் தோற்றுப் போவது போல் தோன்றலாம். ஆனால் தேவ ஜனமாகிய நாம் ஒரு நாளும் தோற்றுப் போவதில்லை.

நமக்காக யுத்தம் செய்ய, இஸ்ரவேலின் ராணுவங்களின் தேவன், யுத்த வீரனைப் போல் வைராக்கியமூண்டு முழங்கி கெர்ச்சித்து, நமக்கு முன்னே கடந்து சென்று, வாக்களிக்கப்பட்ட வெற்றிக்கு நம்மை சுதந்தரவாளியாக்குவார்.

1-5

முழங்கி கெர்ச்சிக்கிற ... கர்த்தர்

'...தேசத்தின் குடிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது. அதேனென்றால் தேசத்தில் உண்மையும் இல்லை, இரக்கமும் இல்லை. தேவனை பற்றிய அறிவும் இல்லை.' 'வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்...' ஓசியா:4:1 : ஏசாயா: 1.18.

தேசத்தின் குடிகளோடே வழக்கா? அகிலம் அனைத்தையும் படைத்து பராமரிக்கிற தேவனாகிய கர்த்தருக்கு வழக்கா? ஆமாம். தேவ வார்த்தையாகிய வசனத்தை கேளாதவர்கள், கேட்டும் கீழ்படியாதவர்கள், கீழ்ப்படிகிறேன் என்றும் செயல்படாதவர்கள், நேசிக்கிறோம் என்றும் நேசிக்காதவர்கள், கண்டும், கேட்டும், கவனித்தும், வசனித்தும், போதித்தும் கூட புத்திமயக்கத்தில் இருக்கிறவர்களோடே தான் வழக்குஇருக்கிறது.

'இதோ தீங்கை கட்டளையிட (கர்த்தராகிய) நான் என் நாமம் தரிக்கப்பட்ட நகரத்திலே துவங்கும் போது நீங்கள் தண்டனைக்கு தப்புவீர்களோ', எரேமி: 25.29

மாம்சமான யாவரோடும் நியாயத்திற்குள் பிரவேசிப்பேன், துன்மார்க்கரை பட்டயத்துக்கு ஒப்புக்கொடுப்பேன், என்று முழங்கி கெர்ச்சிக்கிற கர்த்தர் சொல்கிறார்.

'மேய்ப்பர்களே (போதகர்களே) அலருங்கள், மந்தையில் (சபையில்) பிரஸ்தாபமானவர்களே, சாம்பலில் புரண்டு கதறுங்கள், நீங்கள் வெட்டப்படவும், சிதரடிக்கப்படவும் உங்கள் நாட்கள் நிறைவேறின. உச்சிதமான பாத்திரம் போல் விழுந்து நொறுங்குவீர்கள்.

'மேய்ப்பர்கள் ஓடிப்போகிறதற்கும், மந்தையில் பிரஸ்தாபமானவர்கள் தப்பித்துக் கொள்ளுவதற்கும் இடமிராது'
'அவர் (தேவனாகிய கர்த்தர்) பதிவிருந்து புறப்படும் சிங்கத்தைப் போலிருப்பார்.' எரேமியா: 25:34,35,38

வழக்காடுவோம் வாருங்கள் என்று அறைகூவல் விடுகிற நம் நேசக்கர்த்தரின் இதய வாஞ்சையறிந்து, அவரின் முதலும் முடிவுமான பிரதான கட்டளைகளுக்கு கீழ்படிந்து செயல்படுவோம். கர்த்தர் பதிவிருந்து புறப்படுகிற சிங்கத்தைப் போலவும், பராக்கிரம சாலியைப் போன்று முழங்கி கெர்ச்சித்துப் புறப்படும் போது, தேவ திட்டத்திற்கு கீழ்படியாத மேய்ப்பர்களோ, மந்தையில் பிரஸ்தாபமானவர்களோ எவரும் தப்பித்துக் கொள்ள முடியாது.

'கர்த்தர் பராக்கிரம சாலியைப் போல் புறப்பட்டு, யுத்த வீரனைப் போல் வைராக்கியமூண்டு, முழங்கி கெர்ச்சித்து தம்முடைய சத்துருக்களை மேற்கொள்ளுவார்.' ஏசாயா: 42.13

சிங்கத்திற்கு பிறந்தவன்

ஆமாம். முழங்கி கெர்ச்சிக்கிற சேனாபதியாகிய நம் நேசகர்த்தரின் இதய வாஞ்சையறிந்து, அணல்கொண்டு புறப்படுவோம். உடமையெல்லாம் இழந்து, உடலெல்லாம் கிழிக்கப்பட்டாலும் உன்னதருக்காய் உறுதியாக நிற்போம். வெங்கொடுமை சாக்காடு வீரர்களின் விளையாட்டுக் கூடம் எனச் சொல்லுவார் உலகோர். சிறை, சிறைச்சேதம், சித்திரவதை என்பதெல்லாம், விசுவாச வேள்வியிலே நிற்கும் விடுதலை வீரர்களின் விருப்பப் பாடமேயென்பதில் சந்தேகமில்லை.

என் இனிய சகோதரனே! உன் நெஞ்சமெல்லாம் கொழுந்து விட்டு எரியவில்லையா? உன் எலும்புகளுக்குள் அடைபட்டிருக்கும் அபிஷேக அக்கினி அனல் கொண்டு எரிகிறதே! யுத்த வீரனின் வாளைப்போன்று பளபளக்கும் உன் ஆவிக்குரிய கண்களைத் திறந்து பார்! நீ நிற்கிற இடம் கர்மேல். ஆமாம் அதே கர்மேல் பர்வதம். கர்மேலிலே சிங்க நிகர் தீர்க்கதரிசி, எலியாவைக் கண்டதும், கிலிபிடித்து கதிகலங்கியது சாத்தானுக்கும் அவன் சேனைக்கும்தான். வெட்டி வீழ்த்தப்பட்ட பாகால் கூட்டமும், தொடை நடுங்கி சிதறி ஓடிய ஆகாப் அரசனின் அதிகார வர்க்கமும் கர்மேல் என்றாலே கதிகலக்கம் என்கிறது.,

கண்டாயா மனுபுத்திரனே... கண்டாயா மனுப்புத்திரனே! என்று தேசத்தின் சீர்கேடுகளை காண்பித்து எசேக்கியேல் தீர்க்கதரிசியோடு பேசிய தேவ ஆவியானவரின் உக்கிர கோபத்தை கேள், கவனித்து நோக்கிப்பார்.

நீ நெடுங்காலமாய் பதிவிருக்கிற உன் இடத்தை விட்டு, பதிவிருந்து புறப்படும் சிங்கத்தைப் போல் புறப்படு. சிறு நரிகளைப் பார்க்க வேண்டாம். பொருளாசை, சுகபோகம் என்ற சிலந்தி வலைக்குள் சிக்கிக் கொண்டிருக்கும், சிறுத்தைகளைப் பற்றி சிந்திக்காதே! சிங்கங்களுக்கு சிறுநரிகள் என்ன, சிறுத்தைகள் கூட பிறப்பதில்லை.. சகோதரா.. நீ சிங்கத்திற்கு – ஆமாம் யூதராஜ சிங்கத்துக்கு பிறந்தவன்.

அடையாளம் கண்டு... வெட்டு –சிங்கம் போல் புறப்படு

சிங்கம் போல் நீ புறப்படுவதைக் கண்டு,
கர்மேல் பர்வதம் கதிகலங்கிக் கொண்டிருக்கிறது. கல்வாரி
அன்பரின் இரட்சிப்பை ஜனங்களை ருசிக்கவிடாமல், கெடுத்து
கொக்கரிக்கிற கொரில்லா கூட்டங்கள், கொலை நடுங்கிப்போய்
கிடக்கின்றன. பராக்கிரமசாலியைப் போல் புறப்பட்டு, யுத்த
வீரனைப் போல் வைராக்கியமூண்டு, முழங்கி கெர்ச்சிக்கிற –
தேவனாகிய கர்த்தர் அபிஷேகித்து, இளவரசனாய், இளவரசியாய்
தந்த பட்டமும், பட்டயமும் போதும் வெட்டு.

வெளிப்படுத்தல்:19:15ல் சொல்லப்பட்டபடி புற ஜாதிகளை வெட்டும் படிக்கு அவருடைய வாயிலிருந்து புறப்படுகிற கூர்மையான பட்டயத்தால் வெட்டு. ஜீவ வார்த்தையாகிய பட்டயமே ஆயுதம் வெட்டு. கர்மேலின் மேடுகளை நீ மிதிக்கத் தொடங்கியதுமே... உன் நரம்புகளில் ஓடுகிற அபிஷேக இரத்தம், கர்த்தர் குலுங்கப் பண்ணுகிற சமுத்திரம் போல் குலுங்கட்டும். இந்த மாய உலகத்தில் தலைவிரித்தாடும் விக்கிரக ஆராதனை, வேசித்தனம், குறிசொல்லும் கபட ஆவிகள், பில்லிசூனியம் பேயென்றும், பிசாசென்றும்... நடக்கும் மாயவித்தைகளை

மாளச் செய்வதற்காக, சாத்தானின் சங்கிலே உன் காலை ஊன்றி, உன் கையிலிருக்கும் பட்டயத்தால் வெட்டியெறி சிரசை, அவன் சீரழிந்து சின்னாப் பின்னமாகட்டும். திரும்பிப்பார்! உன் சகோதரர்களாகிய, பலவான் கையிலுள்ள அம்புகளைப் போன்ற இளைஞர் கூட்டத்தை, சிறைபிடித்து வைத்திருக்கும், சினிமா, போதை வஸ்த்துக்கள், சிகரெட், காமவிகாரம் இன்னும் பிற பாவத்திற்கும், எல்லாவித விக்கிரக ஆராதனைக்கும் ஒத்துப் போகிற... நம்நேசரின் களங்கமில்லா கல்வாரி அன்பை விட்டுப் பிரிக்கிற, கபட வேடதாரிகளை அடையாளம் கண்டு வெட்டு.

வல்லமையைப் பெற்றுக்கொள்

சகல ஜாதிகளையும் கிறிஸ்துவின் சீஷராக்குங்கள், உலகமெங்கும் போய் சுவிஷேசத்தை அறிவியுங்கள், என்ற அருள் நாதரின் பிரதான கட்டளைக்கு எதிராக இருக்கிற திட்டங்கள், போராட்டங்கள். திசைமாற்று மூட உபதேசங்கள், வன்முறைகள் மடமையான மதக்கோட்பாடுகள் போன்ற அனைத்து விக்கிரகங்களையும் நிக்ரகம் செய்ய முழங்கி கெர்ச்சித்து சத்துருக்களோடு யுத்தம் செய்யும் தேவனாகிய கர்த்தரின் பாதம் அமர்ந்து, உன் சர்வாயுத வர்க்கங்களை தரித்துக் கொண்டு, ஆவியின் பட்டயத்தை எடுத்து நல்லப் போர்சேவகனாய் நீ யுத்தம் செய்யும் போது–

'தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடு இருக்கிறவர்களுக்கு தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும் படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது...' II நாளா 16.9

ஆமாம் சகோதரனே! கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது. யாரைத் தேடி, எதற்காக? அவருக்கு பயந்து, கர்த்தரின் சித்தப்படி செய்கிற பிள்ளைகளின் வாழ்வில் தம்முடைய வல்லமையை விளங்கச் செய்வதற்காக. ஆமென்.

1-6
உலக பந்தயங்களும் அழிந்துபோகும்... கிரீடமும்.

பந்தயத்திற்கு போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள், அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படி அப்படி செய்கிறோம். **I.கொரி: 9.25**

மனிதர்களாக பிறந்த ஒவ்வொருவருமே, ஏதாவது ஒரு இலக்கை நோக்கி ஓடிக் கொண்டேயிருக்கிறார்கள். இலக்கு, குறிக்கோள் என்பது அவரவரின், தகுதி, தாலந்துகள் சூழ்நிலைகளைப் பொறுத்து நபருக்கு நபர் வேறுபடுகின்றது. அடுத்த வேளை ஆகாரத்திற்காக ஓடுபவர்களும், சட்ட சபைத் தேர்தலிலே ஜெயித்து விட்டோம், இனி பாராளுமன்றத் தேர்தலில் எப்படி ஜெயிப்பது? என்று உலக மனிதர்கள் பலரும் விளையாட்டு முதலான பல்வேறு போட்டி, பந்தயங் களில் குறிக்கோளோடு ஓடிக் கொண்டேயிருக்கிறார்கள்.

இரண்டு வகையாக பந்தயங்களை பிரித்தால், விளையாட்டு, தொழில், அரசியல் போன்றவற்றில் சிறப்பான வெற்றிபெற வேண்டுமென ஓடுகிற மக்கள் ஒரு கூட்டமாகவும், இயேசுகிறிஸ்துவின் சுவிஷேசத்திற்காக ஓடி, ஜீவகிரீடமாகிய பந்தய பொருளை பெறுவதற்காக ஆசையாய் தொடருகிற ஒளியின் பிள்ளைகளாகிய நம்முடைய இன்னொரு கூட்டமும் உண்டு.

பவுல் அப்போஸ்தலன் சொல்லுவது போல, பந்தயத்துக்கு போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாக இருப்பார்கள். ஆம் இன்று வியைாட்டுப் போட்டிகள், முதலானவற்றில் கலந்துகொள்ளுகிற வீரர்களின் பிரயாசம், தீவிரபயிற்சிகள், இச்சையடக்கம், உறுதியான குறிக்கோள் போன்றவற்றை கவனித்தால் ஆச்சரியப்படுவோம். என்னுடைய இளமைப் பருவத்தில் இதுபோன்ற வீரர்களின் பிரயாசங்களை நானே பலமுறை நேரில் கண்டும், நானே பிரயாசப்பட்டும் ஆச்சரியப்பட்டிருக்கிறேன்.

நானும் கூட விளையாட்டு வீரனாக இருந்த காலங்களில் தமிழக அரசு பொங்கல்தோறும் நடத்தும் தமிழ்நாடு மாநில அளவிலான உயரம்

தாண்டுதல் போட்டியில் முதல்பரிசு வந்தபோதும், மதுரை பல்கலைகழக அளவில் முதலிடம் பெற்று அனைத்துக் கல்லுரிகளின் பல்கலைகழக அணித்தலைவனாக பஞ்சாப் மாநிலம் சென்று அங்கே அகில இந்திய பல்கலை கழகங்களுக்கு இடையேயான போட்டியில் மூன்றாம் இடம் பெற்ற காலங்களில் நானும் எனது உடன் நண்பர்களும் எடுத்துக் கொண்ட கடுமையான பயிற்சியும், முயற்சியும், பட்ட பாடுகளும் மிகக் கடுமையானவை.

ஆனாலும் இதுபோன்ற உலக பந்தயங்களுக்கு கிடைக்கும் மேன்மை எவ்விதத்திலும் நிரந்தரமற்றது. அழிந்து போகும் பெயருக்காகவும், புகழுக்காகவும், கிரீடத்திற்காகவும் உலக ஜனங்கள் இவ்வளவு கடுமையான பயிற்சியும் முயற்சியும் செய்து எல்லாவற்றிலும் இச்சையடக்கமாக இருந்து இவ்வளவு வைராக்கியமாய் போராடுகின்றார்கள்.

ஆனால் பரம அழைப்பைப் பெற்ற நாமோ, நமக்காக வைக்கப்பட்டிருக்கும் மகாமேன்மை பொருந்திய, நம்மை குதூகலமான ஆயிரவருட அரசாட்சிக்கு பங்குள்ளவர்களாக தகுதிப்படுத்துகிற அழிவில்லாத ஜீவகிரீடத்திற்காக எவ்வளவு வைராக்கியம் பாராட்டுகிறோம்?

உலகப்புகழைப் பெற வேண்டுமென்பதற்காக உலக புகழ்பெற்ற குத்துச் சண்டை வீரன் முகமது அலி என்பவன் ‘உலகம் தூங்கிக் கொண்டிருக்கும் போது மணல் மூட்டையோடு போராடி பயிற்சி செய்து கொண்டிருப்பானாம். இன்னும் பல விளையாட்டு வீரர்கள், உடலையும் உள்ளத்தையும் வருத்தி, மிகுதியான வேர்வை சிந்தி பயிற்சி செய்து பிரயாசப்படுவதைப் பார்த்தால் அவர்களின் வெற்றியின் இரகசியம், வருந்தி சிந்துகிற வியர்வையில் தான் இருக்கிறது. என்பது நன்கு தெரியும். வெற்றிக்காக ஓடுகிற எல்லாப் பிரிவினருமே இரவு, பகல் பாராமல் ஓடிக் கொண்டேயிருப்பதை நாம் கண்கூடாக காணுகிறோம்.

புதுபெலனடைவோம்!

விசுவாசத்தின் நல்லப் போராட்டத்தைப் போராடுகிற நாம், அஜாக்கிரதையாகயிராமல், எவ்வளவு ஜாக்கிரதையாக செயல்பட வேண்டும். உலகபொருளுக்காக, புகழுக்காக ஓடுகிறவர்களின் பிரயாசங்கள், தேச ராணுவங்களில் பணிசெய்வோரின் போர்காலத் தியாக துணிச்சல்கள், தேச, இன, மொழி வைராக்கியங்களுக்காக, உயிரையும் துச்சமென நினைத்துப் போராடும், சுவிசேஷ ஒளிபடாத தியாக புருசர்கள், இவர்களிடம் இருக்கும், நம்பிக்கை (விசுவாசம்) வீரம், வைராக்கியம், நெஞ்சுறுதி, தியாகம் போன்றவற்றை கவனமாக, பரம அழைப்பின் பந்தய பொருளுக்காய் ஓடுகிற நம்மோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இவை தேவராஜ்ய பணிக்கு வலுவூட்டும் என்பதில் சந்தேகமில்லை.

யாரோ சிலர் முனுமுனுப்பது நன்றாக கேட்கிறது சகோதரனே!
ஆனால்,
–கர்த்தருடைய வேலையை அசதியாய் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்.’
–இரத்தம் சிந்தாதபடிக்கு தன் பட்டயத்தை அடக்கி கொள்ளுகிறவன் சபிக்கப்பட்டவன். எரேமியா:48.10

இந்த கடுமையான எச்சரிப்புகளை கருத்தில் கொண்டு அசதியாயிருப்பவர்கள், ஜாக்கிரதையாயிருப்போம். எரேமியா 46.3ல் சொல்லப்பட்டபடி, “கேடகங்களையும், பரிசைகளையும் ஆயத்தம் பண்ணி யுத்தத்திற்கு வாருங்கள்’ என்ற தேவனாகிய கர்த்தரின் அறை கூவலை ஏற்றுக் கொண்டு புதிய வைராக்கியத்தின் சால்வையை அணிந்து கொள்வோம். சாரம் குறைந்த உப்பாயிருந்தாலும் சாரமற்றுப் போய் விடாதபடி, வார்த்தையாகிய மன்னாவால் நம்மில் நாமே சாரமேற்றிக் கொண்டு தேவ ஆவியின் அபிஷேகத்தோடு அனல் கொண்டு புது பெலனடைவோம்.

எங்கே நமது வைராக்கியம்?

இருளில் நடக்கிற ஜனங்களுக்கு பெரிய வெளிச்சமாகவும், மரண இருளின் தேசத்தின் மேல் பிரகாசிக்கிற ஒளியாகவும் பிறப்பெடுத்த அருள்நாதர் இயேசுவின்,

"என் பின்னே வாருங்கள். உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர் களாக்குவேன், (மத்தேயு. 4.19) என்ற அழைப்பைக் கேட்டதுமே, கலிலேயா கடலோரம் மீன்பிடிக்கிறவர்களாய் காணப்பட்டவர்கள், தங்கள் வலை, படகு, மீன், தந்தை, தாய், மனைவி, மக்கள் என எதையும் யோசிக்காமல், நேசரின் பின் சென்ற தியாக வைராக்கியங்கள் அன்றோ அவர்களை சீஷராக்கியது?

காவல், கட்டுப்பாடு, சட்டஒழுங்கு, நீதிமன்றம், விசாரனை என்று, எந்த நெறிமுறைகளும் முறையாக இல்லாத, நினைத்தாலே அடித்து சிறையிலாக்கி, கொன்று குவிக்கிற அதிகார வர்க்கத்தார் முன்னின்று, 'நீங்கள், ஜீவாதிபதியாம் எங்கள் இயேசுவைக் கொலைச் செய்தீர்கள், தேவன் அவரை உயிரோடேயெழுப்பினார். அதற்கு நாங்கள் சாட்சிகள்,'– என்று கெம்பீரமாய் கெர்ச்சித்த பேதுரு போன்ற சீஷத்துவம் எங்கே?

கல்லெறிந்து கொல்லப் போகிறார்கள் என்று நிச்சயமாய் அறிந்த பின்னும், நான்கு திசைகளிலும் சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் கொலைவெறியோடு நின்று கொக்கரித்தப் போதும், மரண ஒலம் நெஞ்சை அடைக்கும் கோர சூழ்நிலையிலும், மலர்ந்த – சிரித்த முகத்தோடு, 'முழங்கல்., படியிட்டு; ஆண்டவரே இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்', என்று மிகுந்த சத்தமிட்டுச் சொல்லி (அப்போ.7:60) சுவிஷேசத்திற்காக ஜீவனை விட்ட, ஸ்தேவானின் நெஞ்சுறுதிமிக்க சீஷர்களுக்கு இன்று அழைப்பேயில்லையா?

அத்திமரத்திலிருக்கும் போது இயேசுவின் அழைப்பைக் கேட்ட சகேயு, தான் ஐசுரியவானாய் ஆயக்காரனாய் இருந்த பின்னும், 'என் ஆஸ்தியில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன்' என்று கீழ்ப்படிந்து, தசமபாக விசுவாசிகளையும் கூட தலையிலே தட்டி குள்ளர்களாக்கி விட்டு, நிமிர்ந்து உயர்ந்து நிற்கிற சகேயு எங்கே? நாம் எங்கே?

பேர் பெற்ற கமாலியேலிடம் கற்ற ஞானம், சனகெரிப் சங்கத்தின் புகழ்பெற்ற பிரதிநிதித்துவம், மார்ஸ் மேடையிலே அஞ்ஞானிகளுக்கு சிம்ம சொப்பனமாய் பிரசங்கித்த சாதுர்யம், அரசாணைகளை பெற்று, நிறைவேற்றும் அதிகாரமிக்க பேர் புகழ் பாக்கியமெல்லம், இயேசுவே கிறிஸ்துவென்று அறிந்ததும், அனைத்தையும் நஷ்டமும், குப்பையுமென்று உதறித்தள்ளிய பக்தி வைராக்கியம் பவுலுக்கு மட்டுந்தானா? சிலவேளைகளில் பவுலாக மாறாமல் சவுலாகவேயிருப்பது சவுக்கியமாகத் தோன்றலாம் சகோதரனே! ஆனால்...

சீஷன் இழப்பதும்... பெற்றுக் கொள்வதும்:

ஆனால்.... நீங்கள் உலகமெங்கும் போய் சகல ஜாதியாரையும் சீஷராக்குங்கள் என்ற பிரதான கட்டளையை தெரிந்து, அறிந்து, போதிக்கப்பட்டிருக்கிற நாம் சீஷர்களாய் மாறி விட்டோமோ?

'தன் சிலுவையை சுமந்து கொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்கு சீஷனாயிருக்கமாட்டான்.' லூக்கா: 14.27

'யாதொருவன் என்னிடத்தில் வந்து தன் தகப்பனையும், தாயையும், மனைவியையும், பிள்ளைகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்கு சீஷனாயிருக்கமாட்டான்.' லூக்கா:14.26

'அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்து விடா விட்டால் அவன் எனக்கு சீஷனாயிருக்கமாட்டான்.' லூக்கா: 14.33

உலக பந்தய வாதிகளின் ஓட்டம் நிலையற்றது தான். ஆனால் அழிவில்லாத ஜீவகிரீடத்திற்காக ஓடுகிற நாம், இயேசுவின் பின்னே வந்து அவரை பின்பற்றி, சீஷனாக விரும்புபவர்களுக்கு, இயேசுவே சொன்ன கட்டளைகள்,

"தன்னைத்தான் வெறுக்காதவன், அனுதினமும் தன் சிலுவையை எடுத்துக் கொண்டு அவரை பின்பற்றாதவன், நித்திய நேச மணாளனான அவரைத்தவிர வேறு எந்த உலக உறவுகளுக்கும் பந்தயங்களுக்கும், செல்வங்களுக்கும் மகாமேன்மை கொடுக்காத படி தனக்கு உண்டானவைகளையெல்லாம் மட்டுமே, கல்லறைகளை கட்டிக்காத்துக் கொண்டிருந்த லேகியோன் போன்று காத்துக் கொண்டிராமல், இயேசுவையே முதன்மையாக வைத்து, முழு இருதயத்தோடும், முழுமனதோடும், முழுபெலத்தோடும் பரம அழைப்பின் பந்தய பொருளை நோக்கியே ஓடும் போது, மேலானவை அனைத்தும் தானாகவே வரும்

'...உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுவதற்கு முன்னமே உங்களுக்கு, இன்னது தேவையென்று பிதா அறிந்திருக்கிறார்.' மத்தேயு:6:8

'இவைகளையெல்லாம் உலகத்தார் நாடித்தேடுகிறார்கள் இவைகள் உங்களுக்கு வேண்டியவைகளென்று உங்கள் பிதாவானவர் அறிந்திருக்கிறார்' லூக்கா : 12.30

முதலாவது 'தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுவோம், அப்பொழுது இவைகளெல்லாம் நமக்கு கூட கொடுக்கப்படும், என்றறிந்து அழிந்து போகும் உலக பந்தயங்களுக்காக ஓடுவோரை போன்று நாம் அசதியாய், ஜாக்கிரதையின்றி நிர்விசாரமாய் ஓடாமல், அழியாத விலைமதிப்பற்ற நித்திய ஜீவகிரீடத்திற்காகவே ஓடுவோம்.

1-7

விலையேறப்பெற்ற ஜீவகிரீடம்

'நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்தில் அவரோடே கூட உட்கார்ந்தது போல், ஜெயங்கொள்ளுகிறவனெவனோ, அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடே கூட உட்காரும் படிக்கு அருள் செய்வேன். வெளி3:21

காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று பரிசுத்த ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதில், 'ஜெயங் கொள்ளுகிறவனெவனோ அவனும், என்னுடைய சிங்காசனத்தில், என்னோடே கூட உட்காரும் படி அருள் செய்வேன், என்றெழுதப்பட்டிருக்கிறது. ராஜாதிராஜாவாம் நம் நேசகர்த்தர் அமர்ந்திருக்கும் அந்த நித்தியமான சிங்காசனத்தில் அவரோடே கூட இளவரசர்களாய் அமர்ந்திருக்கும் பாக்கியத்திற்கு ஈடாக, உலகில் எந்த மனிதனும், எதையும் ஈடாக சொல்ல முடியாது.

ஒரு மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், அவற்றையெல்லாம் ஈடாகக் கொடுத்தாலும் இந்த ராஜரீக பரலோக சிம்மாசனத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. உலகத்தில் எவ்வளவு கற்றுத் தேர்ந்த ஞானியாகவோ, மாமன்ற தலைவர்களாகவோ, பிராந்திய பிரதிநிதிகளாகவோ, மாகாண அதிபதியாகவோ அல்லது வெள்ளை மாளிகை போன்ற பார்புகழும் பழிங்கு சாம்ராஜ்யங்களின் ஜனாதிபதிகளாகவோ இருந்தாலும், மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்று ஜெயங்கொள்ளாவிட்டால், தேவராஜ்ய, சிங்காசனம் என்பது, அவர்களுக்கு சிம்மசொப்பனமாகவேயிருக்கும். ஆனால் அக்கினியும், கந்தகமும் எரிகிற அக்கினி கடலிலே பங்கடைவது மாத்திரமே சாத்தியமாகும்.

இங்கே இரண்டு விதமான கூட்டத்தில் ஜனங்கள் இருக்கிறார்கள். தேவராஜ்ய சிங்காசனம் ஜீவகிரீடம் போன்ற பாக்கியங்களுக்கு பாத்திரவான்கள் ஒரு கூட்டமும், பாத்திரவான் அல்லாதோர் ஒரு கூட்டமாயும் இருக்கின்றார்கள்.

சபிக்கப்பட்டவர்களும்... ஆசீர்வதிக்கப்பட்டவர்களும்:

'அப்பொழுது ராஜா, தனது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து, என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.' மத்தேயு: 25:34

என்று ஒரு கூட்ட ஜனங்களை நேசத்தோடு வரவேற்று, தேவராஜ்யத்தை சுதந்தரிக்கும் பாக்கியத்தைக் கொடுக்கிறார். ஆனால் அதேச் சமயம் இடது பக்கத்திலே நின்று தங்களுக்கு அழைப்பு இல்லையே என்று திகைத்துப் போய் நின்றிருந்த இன்னொரு கூட்டத்தைப் பார்த்து,

'...சபிக்கப்பட்டவர்களே! என்னை விட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்.' மத்தேயு: 25:41

இப்படியாக ஒரு கூட்ட ஜனங்களை ஆசீர்வதித்து ஏற்றுக்கொள்ளுகிற ராஜாவானவர், இன்னொரு கூட்டத்தைப் பார்த்து, சபிக்கப்பட்டவர்களே... என்னை விட்டு அகன்று போங்கள் என்று துரத்தப்படும் போது! நிச்சயமாக ஒரு புலம்பல் சத்தம் கேட்கிறது.

"ஐயோ ஆண்டவரே! நாங்களும் கிறிஸ்தவரல்லவா?
"நாங்கள் பரம்பரை கிறிஸ்தவரல்லவா?
நான் தவறாமல் ஆலயத்திற்கு வந்தேனே!
ஆலயத்திலே சிறப்பான பதவிகளில் இருந்தேனே!
ஞானஸ்நானம், காணிக்கை, ஆராதனை போன்ற, சபை
ஒழுங்கெல்லாம் தவறாமல் கடைபிடித்தோமே...
என்ன குற்றம் செய்தோம். ஆண்டவரே.. எனப் புலம்பும் போது...

அக்கிரம சிந்தைகாரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று துரத்துகிற ராஜாவின் வார்த்தைகளைக் கேட்போம்.

'பசியாயிருந்தேன். நீங்கள் எனக்கு போஜனம்
கொடுக்கவில்லை, தாகமாயிருந்தேன்–
நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை.
அந்நியனாயிருந்தேன்–நீங்கள்
என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை.
வஸ்திரமில்லாதிருந்தேன்–நீங்கள் எனக்கு
வஸ்திரங்கொடுக்கவில்லை.
வியாதியாயிருந்தேன் என்னை விசாரிக்க வரவில்லை.
காவலிலிருந்தேன் என்னைப் பார்க்க வரவில்லை'.

மத்தேயு: **25:42:43**

'அப்பொழுது அவர்களும் அவருக்கு பிரதியுந்திரமாக, ஆண்டவரே!
உம்மை பசியுள்ளவராகவும்,
தாகமுள்ளவராகவும், அந்நியராகவும்,
வஸ்திரமில்லாதவராகவும், வியாதிப்பட்டவராகவும்
காவலில் அடைக்கப்பட்டவராகவும்
நாங்கள் எப்பொழுது கண்டு உமக்கு உதவி
செய்யாதிருந்தோம்' என்பார்கள். மத்தேயு: **25:44**

'அப்பொழுது அவர் அவர்களுக்கு பிரதியுத்தரமாக
மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள்
எதைச் செய்தீர்களோ... அதை எனக்கே செய்தீர்கள்' என்று
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மத்தேயு:25:45

'அந்தபடி, இவர்கள்
நித்திய ஆக்கினை அடையவும்,
நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும்
போவார்கள்' என்றார். மத்தேயு: **25:46**

விலைக்கிரையம்! செலுத்துவோம்:

இன்றைய சூழ்நிலை என்ன? நாம் சிறுமைபட்டவர்கள் மீது சிந்தையோடு இருக்கிறோமா? மிகவும் சிறியவராகிய எவரைக்கண்டாலும் நமக்கு உதவி செய்யத் தோன்றுகிறதா? விசுவாசியாக, சீஷனாக, அபிஷேகம் பெற்றவர்களாக வாழ்கிற நம்மால், தாகமாய், பசியாய், வியாதியாய், காவலில் இருப்போருக்கு இயன்ற உதவி செய்ய முடிகிறதா?

நம்மையே மிக நன்றாக நாமே ஆராய்ந்து பார்ப்போம். பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன், என்று நம்மிடமிருக்கும் இரக்க குணத்தை வாஞ்சிக்கிறார் தேவன்.

'அன்றியும் நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும், மறவாதிருங்கள். இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்.' எபிரேயர்: 13.16

'அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்: அதினாலே சிலர், அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு' எபிரேயர் : 13.2

தேவதூதரையும், தேவாதி தேவனையும் உபசரிக்கிற, உண்மையாய் அவருக்கு உதவுகிற, உண்மையாய் அவர் மீது அன்பு செலுத்துகிற வழிகள் நம்மிடமேயிருக்கிறது. விலையேறப் பெற்ற ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்ள நாம் செலுத்தும் விலைக்கிரயம் தான் இவை என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

முழுமனதோடும், முழுஇருதயத்தோடும், முழுபலத்தோடும் தேவனாகிய கர்த்தரை நேசிக்க வேண்டும் என்ற பிரதான கற்பனைக்கு ஈடாக, உன்னைப் போல் உன் அயலானையும் நேசி என்ற ராஜரீகப்பிரமாணம் முழுவதையும் கைக்கொள்ளுவதில் கருத்தோடு காணப்பட வேண்டும்.

ஆராதனை செய்தல், கருத்தோடு ஜெபித்தல், காணிக்கை தருதல் போன்றவற்றோடு, நம்மை அன்பிலும் விசுவாசத்திலும் பெருகச்செய்யும், இதுபோன்ற நற்கிரியைகளுக்கும் வாழ்வில் பிரதான இடம் தரவேண்டும்.

பந்தய பொருளுக்காய் ஒடுவது போலவே!... எளியோர் மீதும், ஒருவருக்கொருவர் உதவிகள்செய்து அன்பு செலுத்துவதிலும்.... ஒரு தீவிரம் இருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் கீழ்படிவதில், மரியாதை செலுத்துவதில் முந்திக் கொள்ள வேண்டும்.

‘கொர்னலேயுவின் தானதருமங்கள் பரலோகத்தை வந்து எட்டியது’ என்ற மிக அற்புதமான தேவ அறிக்கையை போன்று, நாம் செய்யும் தான தருமங்கள் மூலமாக, கிறிஸ்துவுக்குள் நமது நற்செயல்களில் ஒரு விசேஷித்த விரைவு இருக்க வேண்டும். இப்படியெல்லாம் நம் தேவாதிதேவனை நாம் மகிமை படுத்தும் போது நாம் தான் இளவரசர்–இளவரசி. நமக்காகத் தான் விலையேரப்பெற்ற ஜீவகிரீடம்.

உயிருள்ளவனென்று பெயர் கொண்டிருந்தும் செத்தவர்களாக காணப்படுகிறவர்களையோ, அனலுமின்றி, குளிருமின்றி வெதுவெதுப்பாய் காணப்படுவோரையோ அல்லது ஓடுகிற நீரில் எதிர் நீச்சலடிக்காது – நீரின் போக்கிலேயே செத்தமீன்களாய் சுகபவனி செல்லுபவர்களையோ தேவராஜ்யம் ஏற்றுக்கொள்ளுவதில்லை.

வேண்டிய விலைக்கிரையம் செலுத்தி, உன்னதரின் இதய வாஞ்சையறிந்து.. யுத்தத்தில் ஜெயங்கொள்ளும் சேனாபதியாம் நம் நேசக் கர்த்தரோடு நின்று வெஞ்சமர் புரிகிற நல்ல போர்ச்சேவகரான, ஜெயங்கொள்கிற இளவரசர்களையே, தேவராஜ்யம்.... ஜீவகிரீடத்திற்காய்... தேடிக்கொண்டிருக்கிறது.

யுத்தத்தில் ஜெயங்கொள்ளும் சேனாபதியோடு, நாம்... 2

ஆவிக்குரிய கிறிஸ்தவ வாழ்க்கையிலே அனுதின போராட்டம் – யுத்தமாகவே விசுவாச வீரர்களின் வாழ்வில், நடைபெற்று வருகிறது. சோதனை காரனாகிய சாத்தானானவன் எப்படியெல்லாம் தேவபிள்ளைகளை வஞ்சிக்கலாம், வீழ்த்தலாம், செயல்படாமற்போகச் செய்யலாம் என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான். எனவே

'நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு, எதிர்த்து நிற்கத், திராணியுள்ளவர்களாகும் படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்.'

'ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங் களோடும், அதிகாரங்களோடும், இப்பிர பஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.'
எபிரேயர் : 6:11,12

அந்தகார லோகாதிபதியாகிய சாத்தானின் தந்திரங்களை, அடையாளம் கண்டுகொள்ளத் தெரியாமலும், யார் சொன்னாலும் அதை ஏற்றுப்புரிந்தும் கொள்ளாத ஒரு பெருங் கூட்டத்தினர் இன்று கிறிஸ்தவர்களுக்குள்ளே இருக்கிறார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை.

நானும் கிறிஸ்தவன்தான், எனக்குத் தெரியாதா? என்று, சொல்லுகிற ஜனங்களே பெருத்துவிட்டார்கள். ஆனால் கிறிஸ்து அவர்களோடு இருக்கின்றாரா? அல்லது அவர்கள் கிறிஸ்துவோடு இருக்கின்றார்களா? என்பது மிகப்பெரிய கேள்வி. சாத்தானோடு நடைபெறுகிற விசுவாச போராட்டத்திலே, நாம் ஜெயங்கொள்ள வேண்டுமானால் தேவனுடைய சர்வாயுத வர்க்கங்களை தரித்துக்கொண்டு, அவருடைய மெல்லிய சத்தத்திற்கு செவிகொடுத்து கீழ்ப்படிந்து, நம் சேனாபதியாம் கர்த்தரோடிருந்தால் மாத்திரமே நாம் ஜெயங்கொள்ளுபவர்களாய் வாழ முடியும்.

2-1
எக்காள சத்தத்திற்கு செவி கொடுப்போம்

மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்லாத, துரைத்தனங்கள், அதிகாரங்கள், அந்தகார லோகாதிபதி, மற்றும் வான மண்டலத்திலுள்ள பொல்லாத ஆவியோடும் நமக்குப் போராட்டம் இருக்கிறது. எந்தவகையிலான போராட்டமானாலும் சாத்தானின் மிகப்பெரிய திட்டமே, கிறிஸ்துவாகிய நம், இரட்சகரின் சுவிஷேசத்தை பரப்ப விடாமலும், சுவிஷேசம் பரப்பினாலும்; ஜனங்களை கேட்க விடாமலும் போராடுவதே யாகும். அதிலும் விசேஷமாக, தன் அயலகத்தாரிடமோ, பக்கத்து கிராமங்களிலோ அல்லது தூர இடங்களிலோ எப்படியாகிலும் ஒவ்வொரு விசுவாசியும் சுவிஷேசப் பணி செய்ய புறப்பட வேண்டும் என்ற தேவதிட்டத்திற்கு வேதத்தின் வாயிலாக கேட்கும் எக்காள சத்தத்திற்கு தேவபிள்ளைகளை செவி கொடாமல் போகச்செய்வதே அவனது சதித்திட்டம்

'அவர்கள் எக்காளம் ஊதி எல்லாவற்றையும் ஆயத்தம் பண்ணியும் யுத்தத்திற்கு போகிறவனில்லை...' எசேக்கியேல்: 7:14
'நான் (கர்த்தர்) உங்கள் மீது காவலாளரையும் வைத்து, எக்காள சத்தத்திற்கு செவி கொடுங்கள் என்றும் சொன்னேன், அவர்களோ, நாங்கள் கேட்கமாட்டோம் என்கிறார்கள்...' எரேமியா : 6:17

நம் தேவனாகிய கர்த்தர், உணர்வில்லாது வாழ்ந்து கொண்டிருந்த இஸ்ரவேல் ஜனங்களுக்குள் இருந்த கீழப் படியாமையை தீர்க்கதரிசிகள் மூலமாக சுட்டிக்காட்டுகிறார். எக்காளம் ஊதி, எல்லாவற்றையும் ஆயத்தம் பண்ணியும் யுத்தத்திற்கு போகிறவனில்லை, எக்காள சத்தத்திற்கு செவி கொடுங்கள் என்றால், கேட்கமாட்டோம் என்கிறார்கள். அன்று எசேக்கியேல், எரேமியா தீர்க்கதரிசிகள் மூலமாக பேசிய ஆண்டவர், இன்றும் கூட உன்னோடும், என்னோடும் இதே வார்த்தைகளை வாஞ்சையோடு பேசுகிறார்.சகோதரனே! கவனித்துக் கேட்போம்.

"நீங்கள் எக்காள சத்தத்திற்கு செவி கொடுங்கள்" என்று, யுத்தகாலத்தின் முழக்கத்தை விஞ்சி முழங்குகிறார் கர்த்தர். தேசத்திலே எக்காளம் ஊதப்பட்டுக் கொண்டிருக்கிறது. தனக்கு கொஞ்ச காலம் மாத்திரமே உண்டு என அறிந்துகொண்ட சத்துருவானவன்,

தேசத்தின் ஜனங்களை, குறிப்பாக தேவ பிள்ளைகளை யாரை விழுங்கலாமோவென்று, வகை தேடி கெர்ச்சிக்கிற சிங்கம் போல் சீரித்திரிகிறான். உலகத்தின் அதிபதி என வருணிக்கப்பட்ட அவனால் தேசத்தில் இருள் சூழ்ந்து வருகிறது.

சத்தியத்தை அறியாத ஜனங்கள் சீர்கெட்டுப் போகிறார்கள். சத்தியத்திற்கும்–பாவ உலகத்திற்கும் ஒரு மாபெரும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இலட்சோப லட்ச ஜனங்கள் வேதத்தை, அறியாது சாகின்றார்கள்.

விபச்சாரம், வேசித்தனம் இன்னும் சகலவிதமான விக்கிரக ஆராதனைகளாலும், மனிதனுக்கு விரோதமாக மனிதன் செய்கிற ஈவிரக்கமற்ற பாதகங்களாலும் தேசத்திலே பாவ இருள் சூழ்ந்து காணப்படுகிறது. ஒளியின் பிள்ளைகளாய் அழைக்கப்பட்டு – இன்று பெயர் கிறிஸ்தவர்களாய், வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு பெருங் கூட்ட ஜனங்கள், சங்கம், சாவடிகளுக்கு செல்லுவது போல் சபைகளுக்கும், சம்பிரதாயச் சடங்குகளாய் ஆராதனையையும் ஆசரித்து இன்று அனலுமின்றி–குளிருமின்றி, வாந்திப்பண்ணிப் போடப் படுகிற பரிதாப சூழலிலே சிக்கியுள்ளனர். இங்கும் அநேகர் மேற்கூறிய பாவங்களுக்கு பங்குதாரராக வாழுகின்றது பரிதாபச் சூழ்நிலைதான்.

ஆனாலும் நாம் வாழுகின்ற இந்த காலகட்டத்தில் சத்தியத்தின் புத்திரர்களாய், காரிருளை கிழித்துயெழும் யுவன ஜனமாய்–தேவ ஜனங்கள் எழும்பி சாத்தானுக்கும் அவன் சேனைக்கும் சாவு மணியடிக்க வேண்டிய நிர்பந்தம்

நமக்கிருக்கிறது. எக்காள சத்தம் கேட்க வில்லை.. அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை, என்று சாக்குபோக்கு கூறி எவரும் சர்வலோகத்தின் நியாயாதிபதி முன்னிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.

பீகார், ஒரிஸா, குஜராத், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் என்று அனைத்து மாநிலங்களிலும், சுவிஷேச ஒளிபடாத அனைத்து பிராந்தியங்களிலுமிருந்து.. கேட்கும் போர்க்கால முழக்கங்கள் யாருக்கு கேட்காமலிருக்கும்?

தேசமெங்கிலுமுள்ள மிஷினரி இயக்கத் தலைவர்களும், இயக்கங்களும், தேவசித்தமறிந்து அறைகூவல் விடுவதெல்லாம், எனக்கு கேட்கவில்லை என யார் சொல்லக்கூடும்?

என் இனிய சகோதரனே!

யுத்தம் நடைபெற்றுக் கொண்டேதானிருக்கிறது. சத்தியத்திற்கும் அதற்கு எதிரான அந்தகாரலோகாதிபதியாகிய சாத்தானுக்கும் அவன் சேனைக்கும்தான் யுத்தம். தேசமெங்கிலும் எக்காளசத்தம் தொனித்துக் கொண்டேயிருக்கிறது. யுவன ஜனமாய் ஒரு கூட்ட தேவஜனங்கள், யுத்தத்தில் ஜெயங்கொள்ளும் சேனாபதியாகிய, நம் தேவனாகிய கர்த்தரோடு உடன் நின்று சுவிஷேசத்தை கூறி அறிவித்துக் கொண்டிருக் கிறார்கள். ஆனால்.. ஆனால் சகோதரனே! நீ எங்கேயிருக்கிறாய்?.

2-2
நீ எங்கேயிருக்கிறாய்?

அவர்கள் எக்காளம் ஊதி
எல்லாவற்றையும் ஆயத்தம் பண்ணியும்,
யுத்தத்திற்கு போகிறவனில்லை
சுவிஷேசத்தை கேட்டு மனந்திரும்பி
இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்று
அன்னிய பாஷை வரங்களோடு–தேவ ஆவியின்
அபிஷேகத்தையும் பெற்றுக்கொண்ட சகோதரனே! சகோதரியே!
நீ எங்கேயிருக்கிறாய்?

'... சேனைகளின் கர்த்தர் யுத்த ராணுவத்தை
இலக்கம் பார்க்கிறார்.' ஏசாயா : 13:4
தமது சேனையில் இருக்கும் உன்னையும், என்னையும்
எண்ணத் தொடங்கி விட்டார்.
தேசமெங்கிலும் சுவிஷேசம் எக்காளமாய்
ஊதப்பட்டுக் கொண்டிருக்கிறது.
நீ இரட்சிக்கப்பட்டது தொடங்கி....
எல்லா ஒழுங்குகளும் ஆயத்தம் பண்ணியும்
யுத்தத்திற்கு போகிறவனில்லை' என்ற
மகாராஜாவாம் நம் சேனாபதியின் அறை கூவல்
பெருமழையின் இரைச்சல் போல் கேட்டுக் கொண்டேயிருக்கிறது:
–நிழலாட்டமான இந்த எச்சரிப்புகளுக்கு செவிகொடுக்காமல் இருந்துவிட்டால்....!
மரணம் நம்மை மேற்கொண்டு மயானயாத்திரைச்
செல்லும் போது.....
'உச்சித மோட்ச பட்டணம் செல்ல ஓடி நடப்போமே'
என்று ஒய்யாரமாய் ஊரார் பாடலாமேயொழிய
போவது எங்கே?
மயானயாத்திரையில் நாயினூர் விதவையின் மகனை
மீட்டுக் கொடுத்த அற்புதத்தின் தேவன் இப்போதே
உன்னை மீட்டெடுக்க விருமபுகிறார்.

ஆமாம் சகோதரனே, சகோதரியே, சேனைகளின் கர்த்தர் யுத்த ராணுவத்தை இலக்கம் பார்க்கிறார். இது ராஜா இலக்கம் பார்க்கிற நேரம், வருவோரும் போவோரும், சந்தியிலும், சாலையிலும், வேலியருகிலும் இருப்போரெல்லாம் பங்கடையும் போது, இளவரசனாய், இளவரசியாய் புத்திர சுவீகாரம் பெற்ற நானும், நீயும் தப்பிவிடாமல் நம் சேனாபதியோடு நிற்போம்.

'அந்த காரத்தின் கிரியைகளை நாம் தள்ளி விட்டு ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்வோம்.' ரோமர் 13:12

இருக்கவே இருக்கிறது, நாம் தரித்துக் கொள்ள வேண்டிய விலையேரப்பெற்ற வல்லமையான ஆயுதங்கள். தேசமெங்கிலும் சுவிஷேசம் செல்ல விடாமல், தடை செய்கிற எல்லா காரிருளையும் உன்னில் நிலை கொண்டிருக்கிற அபிஷேகமாகிய ஒளியின் ஆயுதம் கிழித்தெறியட்டும்.

போர்கால அடிப்படையில், அதிதீவிரமாக, இயேசுவே ஆண்டவர், இயேசுவே இரட்சகர் என்கிற நற்செய்தி உலகெங்கிலும் பரவட்டும். தரித்திரருக்கு சுவிஷேசம் அறிவிக்கப்படட்டும்.

மேலான வரங்களாகிய தீர்க்கதரிசன வரங்களும், சுகமாக்கும் வரங்களும், தெற்கத்தி வெள்ளங்களைத் திருப்புவது போல, தேசத்தின் ஜனங்களின் பாவ சிறையிருப்பைத் திருப்பட்டும். கட்டுகள் அவிழட்டும், பாவ சாபத்தால் ஜனங்களை கட்டி வைத்திருக்கும் எல்லா சாத்தானின் சங்கிலிகளும் தெரிக்கட்டும். உலகமெங்கிலும் சென்று, சர்வ சிருஷ்டியையும், சர்வ வல்லவராம் இயேசுவின் சீஷராக்குவோம்.

மொழி, இனம், மதம், மாநிலம் என்று
காடுகளுக்குள்ளும், மலைகள் சேரிகளுக்குள்ளும்
சிக்கிக் கிடக்கும் ஆத்துமாக்களை கண்டுபிடிப்போம்.
கட்டப்பட்ட கழுதைகளாய் சிக்குண்டு கிடக்கிற– அந்த
சிறுமைப்பட்ட ஜனங்களின் கட்டுகளை அவிழ்ப்போம்.

எவனும் கேட்காமலிருக்க மாட்டான்! கேட்பான்!
எவன் கேட்டாலும் – இது
இராஜாவுக்கு வேண்டும், மஹாராஜா உத்தரவென்போம்,
குடியிருக்க வீடும், குடிக்க அரை வயிற்று கஞ்சிக்கும்
வழி தெரியாமல் விழி பிதுங்கி நிற்கும் ஜனங்கள்
ஓரிஸா, பீகார் போன்ற வடமாநிலங்க்ளில்
லட்சோப லட்சம் பேர் பரிதவிக்கின்றனர்.
பெருங்கூட்டமாய் காணப்படும் – இந்த
ஆதிவாசிகள் மற்றும் மலைவாழ் மக்களுக்கு–இங்கே
நாகரீகத்தைச் சொல்லிக் கொடுக்கவோ– நாதியில்லை.
ஆனால்–அந்த வாயில்லா ஜீவன்கள் போன்ற
ஏழை மக்களை தெண்டி பிழைப்போரும்
எத்தி ஏமாற்றி வாழ்வோரும்–
உல்லாச புரியின் உயர் குடிகளாய்... கொக்கரித்து
கொழுத்து சளுக்குப் பண்ணுகிறார்கள்.
வேடிக்கை மனிதர்களாய் வாழும்–அந்த
பரிதாப ஜீவன்களுக்கு – நம் இரட்சகராம்
இயேசுவின் சுவிஷேசத்தை நற்செய்தியோடு–
வாழ வழி சொல்லிக் கொடுக்கச் செல்லும்
நம் மிஷினரி சுவிஷேசகர்களை–கெட்ட நாயினும் கொடுமையாகத்
துரத்துகிறார்கள். எவர் தடுத்தாலும்,
எவர் அனைத்தாலும் தேசமெங்கிலும் மட்டுமல்ல–
சர்வலோக மெங்கிலும் சுவிஷேசத்தீ பற்றியெரிந்து
கொண்டிருக்கிறது என்பது உண்மை.

2-3
பற்றி எரியும் ஒரிசா

எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் கிறிஸ்மஸ் நன்னாளை கடந்த 2007 டிசம்பர் 24ம் தேதியன்று, ஏழை ஒரிசா கிறிஸ்தவர்களும் கொண்டாடிக் கொண்டிருந்தனர். அந்தப்பகுதியில் சிறு கூட்டமாக இருந்த இந்த ஜனங்கள் (சுமார் 10,000 பேர்) குறுகிய காலத்தில் பெருங்கூட்டமாய் பெருகி விட்டார்கள். (சுமார் ஒரு லட்சம்) எப்படியோ ஒரு காரணம் கிடைத்து, கலவரம் காட்டுத் தீப்போல் பரவியது.

கிறிஸ்தவ ஆலயங்களும், ஆராதனைக் கூடங்களும், அடித்து நொறுக்கப்பட்டன. குளிருக்கும் வெயிலுக்கும் மறைந்து கொள்ள, ஏழை மக்கள் கட்டியிருந்த குடிசைகள் கொழுத்தப்பட்டன. உலகமே ஒருமுறை திரும்பிப்பார்த்தது ஒரிசாவை, கண்ணீரின் பிரார்த்தனையோடு.

இந்த நேரத்தில் தான் தேவாதி தேவன், அடிமையாகிய என் மீது வைத்த மிஷினரி பாரத்தை உறுதிப் படுத்தி, கொலைக்களமேயானாலும், கொடுவாளுக்கும் கொடுஞ்சிறைக்கும் அஞ்சாது புறப்படு ஒரிசாவிற்கு, என தேவாதி தேவன் ஆணையிட்ட போது அழுதேன், நினைத்து

நினைத்து, கண்ணீரால் கண்கள் குளமாக பலமுறை அழுதேன். யாருக்குத் தெரியும் என் நேச மனைவியோடு குடும்பமே அழுதது. அப்பா போகத்தான் வேண்டுமா? என் நெஞ்சமெல்லாம் அக்கினி கனலாய் தகித்துக் கொண்டிருந்த ஆத்தும நேசரின், நேசத்தைப் புரிந்து கொண்டேன். நெஞ்சுறுதியும் வீரமும், தேசப்பற்றுமிக்க, போர்வீரர்கள் யுத்த நேரத்தில் புறப்படுவது போன்று என்னால் புறப்படாமலிருக்க முடியவில்லை. அதிலும் ஒரு பெரிய சந்தோஷம், அரசுவேலை, வருமானமிக்க சுயதொழில், நம்பிக்கையான அரசியல் வாழ்வு, வழக்கறிஞர் பட்டம் போன்ற எல்லாவித அம்சங்களோடும் சீரோடும், சிறப்போடும் செல்வ செழிப்போடும், நான் இருக்கும் போது அனைத்தையும் நஷ்டமும் குப்பையென்று உதறிவிட்டு வா! என என்னை அழைத்த நேசரின் நேசத்தை என்னவென்று சொல்லுவது? மனித புத்திக்கு எட்டாத நேசம்.

ஒரிசாவில் சில மாதங்கள் அமைதியாக கழிந்தன. மீண்டும் 2008 ஆகஸ்ட் இறுதியில் கலவரம் தொடங்கிவிட்டது.

தேசம் இதுவரைக் கீண்டிராத பெரிய மதக்கலவரம். நான் இந்த புத்தகத்தை எழுதிக் கொண்டிருக்கும் இதே வேளையில் கூட, நாங்கள் இருக்கிற எங்கள் ஒரிசா–ரிஷியா மிஷின், மாணவ மிஷினரிகளும், சுவிஷேச அன்பர்களும் சொல்லுகிற கலவர கொலைவெறிச் செய்திகளைக் கேட்கும் போது நெஞ்சடைக்கிறது.

பல மாவட்டங்களில் சேர்ந்து பலநூறு நம் கிறிஸ்தவ தேவாலயங்கள் அடித்து நொறுக்கி, தீயிடப்பட்டன. ஏறத்தாழ ஆயிரம் கிறிஸ்தவ விசுவாசிகளின் வீடுகள், உடைத்து, இடித்து தீயிடப்பட்டன. சுமார் 24,000 விசுவாசப்பிள்ளைகள், குழந்தை குட்டிகளோடு, வீடு வாசல், தட்டுமுட்டு ஜாமான்களை, விட்டு அடித்து விரட்டப்பட்டு, உயிர்தப்பி காடு, மேடு மலைகளில் ஓடி ஒழிந்துள்ளனர்.

தகப்பனை பறிகொடுத்தப் பிள்ளைகளும்–அன்பு கணவனை இழந்து நிற்கும் எக்கதியுமற்ற மனைவிளும், பெற்ற மகனை இழந்து நேசத்தால் கதருகிற தாய்மாறுமாக–வைக்கும் அழுகையின் கூக்குரல் அகில உலகமெங்கும் கேட்கிறது.

ஏழை எளியோருக்கு சேவை செய்து கொண்டிருந்த ஏழை பெண் முதற்கொண்டு, இயேசுதான் இரட்சகர் என்று ஏற்றுக் கொண்டு வாழ்பவர்களாக காணப்பட்ட ஒரே காரணத்தினால் நூற்றுக்கும் மேற்பட்டோர், அடித்துக் கொல்லப்பட்டும், நெருப்பினால் சுட்டெரிக்கப்பட்டதாகவும் கேட்ட கண்ணீரின் செய்திகள் இமைகளை அசைக்கிறது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கையில் அகப்பட்ட போதுகூட இயேசு தான் எனது இரட்சகர் என்று அறிக்கையிட்டதற்காக கட்டிய மனைவி, பெற்றோர், பெற்றெடுத்த பிள்ளைகள் முன்பாக துண்டு துண்டாக வெட்டிப் போடப்பட்ட விசுவாச வீரர்களும் கிறிஸ்துவின் மிஷினரிகள், கிறிஸ்தவர்கள் என்பதற்காக

தங்கள் பொன்னுடலை கிழிக்கக் கொடுத்தோருமாக ஒரிசா மாநில ஏழை விசுவாசிகள் கதிகலங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தினசரி ஒரு மிரட்டல் செய்தி, தீவிர உறுதிமொழி எடுத்தல், திட்டம் தீட்டுதல், சட்டம் போடுதல் என்று, நொந்து வெந்துப்போன புண்ணிலே வேலை பாய்சுவதால்... இன்னும் கலவரத்தின் வேகம் அதிகரித்துக் கொண்டே போகிறது.

ஏழு எட்டு நாட்களாக சாப்பிடாமல் காடுகளிலே தங்கி தலைசாய்க்க இடமில்லாதிருப்போர் எண்ணற்றோர். அநேகம் மலைகளால் சூழப்பட்ட கலவரப்பகுதி மக்கள், வீடு, உடை, உடமை, காசு பணமெல்லாம் இழந்து, என்ன விலை கொடுத்தாலும் கிடைக்காத அரிய பொக்கிஷமாகிய இயேசு நேச மணாளனை மட்டுமே, தங்கள் பரிதாப ஏழை நெஞ்சுகளில் சுமந்து கொண்டே... பல மலைகளைத் தாண்டி, ஜீவன் தப்ப ஓடி, 200க்கும் அதிக மைல் தூரம் பிரயாணப் பட்டு, பல நகரங்களில் தங்கியிருப்போர் எண்ணற்றோர்.

எப்போது யாரை அடித்து தீயிட்டுக் கொழுத்துவார்கள் என்ற மாபெரும் அச்சத்தில் மக்கள் கேள்விக்குறியாய் சுருண்டு போயுள்ளனர். ஆனால் எப்போதோ சிந்தப்பட்ட மிஷினரி மார்களின் இரத்தமும், வேர்வையும், கண்ணீரும், நேசரின் கல்வாரி அன்பும், இந்த ஜனங்களின் கடைசி சொட்டு நம்பிக்கையிலும், இவர்கள் கிறிஸ்துவுக்குள் வேரூன்றி நிற்பதும் அதிசயமாகவே யிருக்கிறது.

இதே கலவர பூமியாகிய ஒரிசாவில்
இருந்துகொண்டே நான் கேட்கிறேன்.
சகோதரனே..! சகோதரியே..! நீ எங்கேயிருக்கிறாய்?
நீங்கள் யாராக இருந்தாலும் போக்குச் சொல்ல
இடமில்லை என்கிறது வேதம்.
என் அன்புச் சகோதரர்கள் அனைவருமே ஒரிசாவிற்கு
ஓடி வந்துவிட வேண்டுமென்றுச் சொல்லவில்லை.
தேசமெங்கிலும் வயல்நிலங்கள் அறுப்புக்கு

ஆயத்தமாய் விளைந்திருக்கிறது.

நம் நேசரின் திராட்சைத் தோட்டமெல்லாம்

சிறுநரிகளின் கண்களுக்குத் தப்பி

மதுரமாய் பழுத்துக் கனிந்திருக்கிறது.

அழைக்கப்பட்டவராய் அநேகர் இருந்தாலும்—அவர்கள்

விருந்துக்கு வரவில்லையே... என ராஜா யோசிக்கிறார்...

சுவிஷேச எதிர்ப்பும் அடிதடி ஆரவாரமும் ஒருபுறமும்

ஏழை மிஷினரிகளின் எழுச்சி மிக ஊடுருவல் மறுபுறமும்

தீவைப்பு அடி வெட்டு சிறை இரத்தம் சிந்துதல் ஒரு புறமும்

இரத்தம் சிந்த சிந்த இயேசுவே இரட்சகர், இயேசுவே ஆண்டவர் என்ற மகா

சத்தத்தோடே, ஜீவனையும் பாராது

தேசமெங்கிலும் நேசரின் சேனை முன்னேறிக் கொண்டிருக்கிறது.

நம் தளகர்த்தராம் சர்வ வல்லமையுள்ள கர்த்தர்

சேனாபதியாய் போர்க்கள முனையிலிருந்து

ஏறெடுத்துப் பார்க்கிறார்... நீயும் நானும் எங்கேயிருக்கிறோமென்று?

ஆயத்தப்படுத்துவோம்! ஆயத்தமாவோம் ராஜாவின்சேனைக்கு, சுயநலம்,

சுகபோகமெல்லாம் சுட்டெரிப்போம்.

உலக ஆசைகளை உதறிவிட்டு

எந்த கொம்பனாலும் தடுத்து நிறுத்த முடியாத

சுவிஷேச போர்முனை நோக்கி – பின்னே இழுக்கப்பார்க்கிற

பதுங்கு குழியிலிருந்து புறப்படுவோம்.

2-4
பதுங்கு குழியிலிருந்து புறப்படுவோம்

போர்க்காலங்களில் போர் தீவிரமாய் நடக்கும் போது
யுத்த வீரர்கள் சில வேளைகளில் – பதுங்கி
பதுங்கு குழியிலிருந்து கொண்டு தாக்குவார்கள்.
பின் பதுங்கு குழியிலிருந்து மீண்டும் புறப்பட்டு முன்னேறி போர்முனையை நெருங்குவார்கள்.
வெகு சில வேளைகளில் சோம்பேறி வீரர்கள்
பதுங்கு குழியிலேயே பதுங்கிவிடுவர்.
அதுபோலவே ஆண்டவருக்காய் வாழ வேண்டும்
இனி பரிசுத்தமாக வாழ வேண்டும் – நான்
இரட்சிக்கப்பட்டு விட்டேன் – இனி முழுமனதோடும்
முழு இருதயத்தோடும் ஆண்டவரை பின்பற்றுவேன்.
இயேசுவின் பின்னே நான் செல்வேன். திரும்பிப் பார்க்க மாட்டேன் எனப்
போராடி ஜெபித்து அபிஷேகமும் பெற்ற – அநேகர்
முன்னேறி செல்லாமல் சில வேளைகளில்
பதுங்கு குழியிலேயே பதுங்கி விடுகின்றனர்... சுகமாய்.
பாவத்திலிருந்து விடுதலை, விசுவாசம், இரட்சிப்பு
அதன் பயனாய் தேவபிரசன்னம், அபிஷேகம், தேவவல்லமை நவமான பாஷை முதலான வரங்கள்
ஒரு மனிதனின் வாழ்விலே வருமானால்... தொடர்ந்து
அந்த மேலான அபிஷேகமானது –ஒருவனில் தங்கியிருக்குமானால் அவன் எப்படியிருப்பான்? என்ன பேசுவான்?
எப்படி நடப்பான்? அவனால் எப்படியிருக்க முடியும்?
இயேசு வானவர் சொல்லியபடி ..யார் சீஷன்,சீஷன் என்ன செய்வான்?
என்பவற்றிற்கு கீழ்படியாவிட்டால் – அந்த சோம்பேறி
மனிதன் வாழ்வில் அபிஷேகம் எப்படி நிலை பெற்றிருக்கும்?
இவற்றையெல்லாம் நாம் கைக்கொண்டு வைராக்கியமாக ஆண்டவருக்காக புறப்பட துடிக்கும் வேளையில்தான்
சாத்தானும் மிகவும் துடிப்போடு – தன் கைதேர்ந்த
வேலைகளை காட்டுவதை நாம் உணர்ந்தே ஆக வேண்டும்.

வேதத்தின் மூலம், போதகர்கள் போதனைகள் மூலம்
இன்னும் பிற சுவிஷேச புத்தகங்களை, நண்பர்களை
சந்தித்து கேட்ட சுவிஷேச சாட்சிகள் மூலம்
நாம் வெகுவாய் தூண்டப்பட்டு – நன்றி பெருக்கோடு
நெஞ்சமெல்லாம் நிறைந்து – பரிசுத்த
ஆவியானவரின் வழி நடத்துதல்களால்
நம்மையும் நமக்குள்ள புகழ், மேன்மை யாவற்றையும்
அர்ப்பணிக்க துடித்து.
அபிஷேக நிலையிலிருக்கும் போது தான்...
கெர்ச்சிக்கிற சிங்கம் போன்று சுற்றி திரிகிற
சாத்தானானவன் விரைந்து செயல்படுகிறான்.
நம்முடைய உறவினர்கள், நண்பர்கள்,
ஏன் ஆவிக்குரிய நபர்கள் மூலமாகக் கூட...
நமக்கு நன்மைகளைச் சொல்லுவதுபோல்...
பதுங்கு குழிகளை வெட்டி – இப்படியிருந்தால் போதும்
அப்படியிருந்தாலும் ஊழியம் தான்,
கொடுத்துக் கொண்டேயிரு.. தந்து கொண்டேயிருப்பார்
நன்றாக பாடு, ஆடு, ஜெபி
இருக்கவேயிருக்கிறது பதுங்கு குழி படுத்துக் கொள்!
சுகமாய் இருந்து கனி கொடு, என்று பக்குவமாக
உனக்குள் அனல் கொண்டிருக்கும் அபிஷேகத்தையும்
பற்றியெரியும் நேச வைராக்கியத்தையும்
ஃபயர் சர்வீஸ் வருமுன்னே அணைத்து – மிச்ச சொச்சமாய்
எரியும் விளக்கையும் மரக்காலுள்ளே மறைத்துவிட்டு,
மரியாதை மிக்க மனித குரங்காய் மறைந்திருப்பான் சாத்தான்.
இப்படி நம்மில் அபிஷேகம் பெற்ற அநேகரை – இன்று அனலுமின்றி
குளிருமின்றி அபிஷேகமுமின்றி தெருப்பொம்மைகளாய் மாற்றி மதிமயக்கி
வைத்திருக்கிறார்கள் சாத்தானின் பிரதிநிதிகள்.

மீண்டும் எக்காள சத்தம்!

கவலைப்படாதே சகோதரா கேள்!
நன்றாகக் கேள்!! மீண்டும் எக்காளச் சத்தம்
ஏழு நட்சத்திரங்களை தம்முடைய வலது கரத்தில்
ஏந்திக் கொண்டு, ஏழு பொன் குத்துவிளக்குகளின்
மத்தியிலே உலாவிக் கொண்டிருக்கிறவர் சொல்லுகிறதாவது:
'உன் கிரியையும், உன் பிரயாசத்தையும், உன்
பொறுமையையும், நீ பொல்லாதவர்களை
சகிக்கக் கூடாமலிருக்கிறதையும்–அப்போஸ்தரல்லாதவர்கள் தங்களை
அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை–நீ சோதித்து அவர்களை
பொய்யரென்று கண்டறிந்ததையும்'
'நீ சகித்துக் கொண்டிருக்கிறதையும், பொறுமையாயிருக்கிறதையும்
என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல்,
பிரயாசப் பட்டதையும் அறிந்திருக்கிறேன்.'
'ஆனாலும் நீ, ஆதியில் கொண்டிருந்த அன்பைவிட்டாய்.' என்று உன்
பேரில் எனக்கு குறைவுண்டு.'
'ஆகையால் நீ என்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை
நினைத்து, மனந்திருந்தி, ஆதியில் செய்த கிரியைகளை செய்வாயாக..
இல்லாவிட்டால் – நான் சீக்கிரமாய்
உன்னிடத்தில் வந்து – நீ மனந்திரும்பாத பட்சத்தில் – உன் விளக்குத்
தண்டை அதினிடத்தினின்று நீக்கி விடுவேன்.'

வெளிப்படுத்துதல்: 2: 2,3,4,5

ஆமாம் சகோதரனே! ஆதியில் இருந்த அனல்மிக்க அபிஷேகத்தை சற்றே குளிரவிட்ட எபேசு சபையாரை நோக்கி தேவ ஆவியானவர் சொல்லுவது – நமக்குந்தான்.

தொடக்கத்தில் நீங்கள் ஆண்டவருக்காக காட்டிய பிரயாசம், பொறுமை, சகிக்கக்கூடாதிருந்தது, சோதித்து அறிந்தது இளைப்படையாமல் பிரயாசப்பட்டது –எல்லாம் சரி, ஆதியில் இருந்த அன்பை விட்டு இப்போது – எந்த பதுங்கு குழியில் கிடக்கிறீர்கள். விழுந்த நிலையிலிருந்து எழும்பச் சொல்லி மீண்டும் எக்காளச் சத்தம் ஊதப்படுவதை கவனியுங்கள்!

–என்ன நிலைமையில், எங்கேயிருக்கிறீர்கள் என்று
நன்றாக சிந்தித்துப் பாருங்கள்.
தற்போது பற்றியெரிகிற ஒரிசா போன்று
பாரத தேசமெங்கிலும் சுவிஷேசத் தீ
அனல்கொண்டு பற்றி எரிந்து கொண்டிருக்கிறது.
–யுத்தத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களும், யுத்தத்திற்கு
சென்றிருந்த அண்ணன்மாருக்கு,
பால்கட்டிகளை சுமந்து சென்று சுகம் விசாரிக்கச் சென்ற
தாவீது போன்று ஆடுமேய்த்துக் கொண்டிருந்தவர்களும்,
–கல்லறைகளை கட்டிக்காத்து கொண்டிருந்து–
காணசகிக்கா காட்சியாய் காணப்பட்ட லேகியோன் போன்றோரும், –முந்தைய
காலமெல்லாம் வேசியாய் வாழ்ந்து விட்டு
தேவை வரும்போது தேவ ஜனங்களுக்கு கைகொடுத்த
ராகாப் போன்றவர்களும் – ஏன் முன்பொருகாலத்தில்
தேவ ஜனங்களை துன்புறுத்தியவர்கள் கூட...
சுவிஷேச களத்தில் அணிவகுத்து நிற்க – தேசமெங்கும்
சுவிஷேசத் தீ பற்றி பரவுகிறது என்பதில் சந்தேகமில்லை.

–ஆனால் – இரட்சிக்கப்பட்டு – அபிஷேகம் பெற்று
மரணத்தை விஞ்சும் அவரது நேச வைராக்கியத்தினால் தொடப்பட்ட நீ –
என்ன நிலையிலிருந்து விழுந்தாலும் சரி – நீ எங்கேயிருந்தாலும் சரி
மீண்டும் எக்காள சத்தம் தொனிக்கிறது!
பதுங்கு குழிகள் வேண்டாம் புறப்படு...
மிச்சமீதியிருக்கின்ற ஆகாபின் சந்ததியை கருவருக்க
தனித்தாள் (நபருக்கு நபர்)சுவிஷேச ஊழியமாவது செய்யலாம்.
இயன்ற ஊழியமானாலும் உண்மையாய் உறுதியாய் செய்ய வெறுங்கையாய்
செல்ல முடியாது! வா!
நம் தந்தையாம் இராஜாதி ராஜா
நம்மோடிருக்கும் சேனாபதியாம், கர்த்தாதி கர்த்தரின்
ஆயுத சாலைக்குச் செல்லுவோம்.

2-5
ஆயுத சாலையைத் திறக்கும் கர்த்தர்

'நீங்கள் எல்லோரும் பாபிலோனுக்கு விரோதமாய்
சுற்றிலும் அணிவகுத்து நின்று வில்லை நாணேற்றி
அதின் மேல் அம்புகளை எய்யுங்கள்,
அம்புச்செலவைப் பாராதேயுங்கள்;
அது கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்தது'
'பாபிலோனே!... நீ கர்த்தரோடே யுத்தங்கலந்தாயே...'
'கர்த்தர் தமது ஆயுத சாலையைத் திறந்து
தம்முடைய சினத்தின் அஸ்திராயுதங்களை
எடுத்துக் கொண்டு வந்தார்..' எரேமியா: **50:14,24,25.**

மகா பாபிலோன் என்று பேர் பெற்று – அகந்தையிலும், பெருமையிலும், பாவத்திலும் மூழ்கிக்கிடந்த, பாபிலோன், கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்தது. கர்த்தரோடே யுத்தம் கலந்த மகா பாபிலோனுக்கு விரோதமாக கர்த்தர் தமது ஆயுத சாலையைத் திறந்து – தமது சினத்தின் அஸ்திராயுதங்களை எடுத்துக் கொண்டு வந்து யுத்தத்தை திட்டம் பண்ணும் போது–

'பாபிலோன் பிடிபட்டதின் சத்தத்தினால் பூமி அதிரும் அதின்
கூப்பிடுதல் ஜாதிகளுக்குள்ளே கேட்கப்படும்.' எரேமியா : **50:46**

பாவத்தினாலும், பெருமையினாலும், சுகபோகத்தினாலும், மிதமிஞ்சி கர்த்தரோடே யுத்தங்கலந்த மகா பாபிலோன் பட்டணம், வர வர இடிந்து, சீரழிந்து தரைமட்டமாகியது. பாபிலோன் பிடிபட்டதின் சத்தம், பூமியதிரும்படியாகவும் அதன் கூக்குரல் ஜாதிகளுக்குள்ளே கேட்கப்படுமென்றபடியே நடந்தது.

இப்போதும் பூமி அதிரும்படியான சத்தம் கேட்கப்படுகிற யுத்தமொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது... சகோதரனே! கர்த்தருக்கு விரோதமாக பாவஞ் செய்து கர்த்தரோடே யுத்தம் கலக்கிற–ஒரு மாபெரும் சுவிஷேச விரோத கூட்டம் – வெகு திரளாய் தேசமெங்கிலும் நின்று போர் புரிகிறது – சாத்தானும் முழுவீச்சிலே நின்று – அவனது ஆட்கள் மூலமாக சுவிஷேசத்திற்கு விரோதமாக சினந்து சீறுகிறான்.

ஆனாலும் – ஆ...னா...லும்!
சுவிஷேசத்திற்கு இரும்பு திரை என்று வருணிக்கப்பட்ட
சுவிஷேசத்திற்காக யாரும் நுழைய முடியாத
இருப்பு தாழ்ப்பாழ்களைக் கொண்ட சீன தேசத்திலே...
இன்று பல கோடி பேர்! பல... கோடி... பேர்!!
ஜீவனுள்ள தேவனை ஆராதிக்கிற
மாபெரும் சேனையாக உருவெடுத்துள்ளனர்.
–கிறிஸ்தவத்துக்கு எதிராக கொக்கரித்த கொரியா தேசம்
நமது முன்னனி சுவிஷேச வீரர்களால்
ஆர்ப்பரிப்போடு முற்றுகையிடப்பட்டிருக்கிறது.
உலகத்திற்கே மாதிரியான முன்னனி சபைகள்
கொரியா தேசத்திலே தோன்றி வருவதால்
சாத்தான் அங்கே– குறவனிடம் மாட்டிக் கொண்ட
குரங்காகக் குழம்பிப் போயிருக்கிறான்.
–இருண்ட கண்டம் என்று வருணிக்கப்பட்டதோடு
சுவிஷேசத்திற்கும் இருண்ட கண்டமாகவேயிருந்த
பழமை வாதிகளின் ஆப்பிரிக்கக் கண்டத்திலே...
துணிவோடு புறப்பட்ட பன்னாட்டு மிஷினரிகள்,
கொடுமைக்கும், கொடுவாளுக்கும் அஞ்சாது.
கிச்சிலி மரங்களுக்கும், லீலிபுஷ்பங்களுக்கு மிடையே
இருந்து பரிவோடு பார்க்கிற பாசமுள்ள நேசருக்கு–
உத்தம மணவாட்டிகளாவதற்காக –
இரத்தத்தையும் எலும்பையும் மட்டுமல்ல..
கழுத்தையே... கொடுவாளுக்குமுன் கொடுக்கத் துணிந்து
அதிர்வேட்டுகளாய் புறப்பட்டதால்...
ஆப்பிரிக்கக் கண்டமே சுவிஷேசத்தால் ஆடிப்போயிருக்கிறது.
இருள் தேசத்தை நீதியின் சூரியன் வியாப்பித்து வருகிறது.
–இன்னும் பல தேசங்கள், இன்னும் ஏராளமான பட்டணங்கள் இன்னும் திரள் கூட்டஜனங்கள், பலஜாதி, பலமொழி பேசுவோர் தங்கள் பாவ அந்தகார கட்டுகளிலிருந்து விடுதலை பெற்று இயேசுவே இரட்சகர், இயேசுவே ஆண்டவர் என்று கண்டுகொள்ளும் வரை
நதியளவு இரத்தம் சிந்தினாலும்
சாத்தானோடு நம் போராட்டம் தீருவதில்லை.

அம்புச் செலவைப் பாராதேயுங்கள்

பாபிலேனே! நீ கர்த்தரேடே யுத்தங்கலந்தாயே!.. கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தாயே – என்று அருள் நாதர் இயேசுவின் சுவிஷேசத்திற்கெதிராக கொக்கரிக்கிற இவ்வுலகமாகிய பாபிலோனுக்கு விரோதமாய்... சுற்றிலும் அணிவகுத்து நின்று – வில்லை நாணேற்றி அதின்மேல் அம்புகளை எய்யுங்கள். அம்புச் செலவைப் பாராதேயுங்கள், என்று சொல்லப்பட்டபடி,

அன்புச் சகோதரனே! உன் வாயாகிய வில்லிலே வார்த்தையாகிய அம்பை நானேற்று.. சாட்சியாக, பிரசங்கமாக, சுவிஷேச ஊழியமாக சுற்றிலுமிருக்கும் ஜனங்களிடமாவது, பேசு சகோதரனே பேசு.. நீ எய்துவிடுகிற சுவிஷேச வார்த்தையாகிய அம்புகள் புறஜாதி எதிரிகளையும் கலங்கடித்து, கல்வாரியண்டை சேர்க்கட்டும்.

உன் ஆவிக்குரிய வாழ்வும், ஊழியமும், பலவான் கையிலுள்ள அம்மைப் போல் தொடர்ந்து இரத்தம் சிந்தி.. கோடானுகோடி ஆத்துமாக்களை உறுவ குத்தி மனந்திரும்பச் செய்யட்டும். இந்த சீரிய வேலைக்காக உன் சக்தி, புத்தி, சமயம் – எது செலவானாலும், கவலைப்படாமல் உன் அம்புகள் புறப் படத் துவங்கட்டும். அனுதினம் ஜெபத்திலும், ஆராதனை வேளைகளிலும் வல்லமை வேண்டும், அபிஷேகம் வேண்டும், வரங்கள் வேண்டும் என்று. தினசரி மறுபடி மறுபடி கேட்கிற சகோதரனே! சகோதரியே!! அறிவிக்க வேண்டிய இடங்களில், ஏன் அது உன்னோடு பணி செய்பவராகவோ! உடன் படிப்பவராகவோ அல்லது பக்கத்து வீட்டு பிறமதத்தவராகவோ இருக்கலாம். பரவாயில்லை அவர்களை பரிவோடு நேசித்து, முதலில் நம் நேசகர்த்தரின் கல்வாரி அன்பை – உன் கனிவான செயல்கள் மூலம் வெளிப்படுத்தி கேதுரு மரங்களை முறிக்கும், வனாந்திரங்களை அதிர பண்ணும் வல்லமைமிக்க தேவ வார்த்தைகளை சொல்லிப்பார்.

அசையாத வனாந்தரம் போன்ற மனிதர்கள் உன்னால் சொல்லப்பட்ட தேவ வார்த்தைகளால் அதிர்ந்து குலுங்குவார்கள். வலிமை மிக்க கேதுரு மரம் போன்றவர்களின் இதயங்கள் சடசடவென முறியும். தேவ வல்லமை, அபிஷேகமாய் உன்னில் தங்குவதை நீயே உணர்ந்து கொள்ளுவாய்.

தேவ வல்லமை அபிஷேகம் என்பதெல்லாம்–முறையாக பயன்படுத்துவதற்கேயன்றி – படம் காட்டுவதற்கல்ல. பெற்றுக் கொண்ட தாலந்துகளை, அபிஷேகத்தை, வரங்களை தேவ திட்டப்படி முறையாக பயன்படுத்தாததினால் தானும் கனி கொடுக்காமல் – தான் நிற்கும் நிலத்திற்கும், சபைக்கும் கேடாகயிருப்போர் அநேகர்.
அதையும் தாண்டி செத்த ஈக்களாய் மாறிய அநேகர்

'தைலக்காரனுடைய தைலக்குப்பியையும் கெட்டுப்போகச் செய்து கொண்டிருப்பது'...வேதனை பிரசங்கி–10:1

'செத்த சிங்கத்தைப் பார்க்கிலும் உயிருள்ள நாயே வாசி'
பிரசங்கி–9:4

'இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று. ஆகையால் அந்தக் காரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு ஒளியின் ஆயுதங்களை நாம் தரித்துக் கொள்ளக் கடவோம்' ரோமர் . 13:12

சோர்ந்து போகாதே சகோதரா!
எழும்பு, தூசியை உதறிவிட்டு எழும்பு – சுற்றிலும் பார். இப்போது நீ நிற்கிற இடம் நம் பரம தந்தையாம் சேனைகளின் கர்த்தரின் ஆயுதசாலை. ஆயுத சாலையென்றாலே வீரனுக்கு இரத்தமெல்லாம் சூடேறி எலும்புகளுக்குள் அக்கினி அனல் கொள்ளுகிற இடம். நமது போராயுதங்கள் மாம்சத்திற் கேற்றவைகளாயிராமல் அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது.

ராஜாக்கள் வருவார்கள்

–மகா வல்லமையான ஆயுதமாகிய தேவ பிரசன்னத்தோடு புறப்படுகிற உன் கண்முன்னே
பர்வதங்கள் போன்றத் தீர்க்க முடியா பிரச்சனைகளும் மெழுகுபோல் உருகியோடுவதைக் காண்பாய்.
கருத்தான ஜெபத்தோடு நீ சத்திய வசனமாகிய
வார்த்தைகளை கனிவோடு நீ பேசும் போது – இவன்
இவள் கேட்கவே மாட்டாள் என்று நீ நினைத்தவர்கள்
முறிந்து விழுந்து – சுவிஷேசத்திற்காய் செவியையும்
இதயத்தையும் திறந்து மண்டியிடுவதைக் காணலாம்.
–ஓ... கோடி விஞ்ஞானியும் தேடிக் காணமுடியாத அணுக்குண்டுகளையும் விஞ்சும் ஆயுதமாகிய
உன்னிலுள்ள அபிஷேகத்தை நீ – முறையாக பயன்படுத்தி தேவதிட்டங்களை அவர் சித்தமறிந்து செயல்படுத்தும்போது–நீ இருக்கும் திசை தேடி ராஜாக்கள் வருவார்கள்.
–தேவ வல்லமையால் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களால் அந்நாட்களில் இராஜ்யங்களும், ராஜாக்களும்,
கதிகலங்கி, சரணடைந்தார்கள் தேவ பிள்ளைகளிடம்.
இஸ்ரவேலருக்கு இரதமும் குதிரை வீரருமாய் இருந்தவரே
என்று எலியா போன்ற தீர்க்க தரிசிகளின்
பாதம் அமர்ந்து பரிகாரம் கேட்டது எத்தனை ராஜாக்கள்?
–அரசு உத்தரவோடு, தீர்க்க தரிசியை பிடித்து விடலாமென்று புறப்பட்டு நெருப்பிலே பொசுங்கி போனவர்கள் எத்தனைபேர்?
ஒரு தீர்க்கதரிசியை காப்பதற்காக – எண்ணிறைந்த எதிர்போர்வீரர்கள் மத்தியில் – மலை முழுவதும்
இரதங்களையும் குதிரை வீரரையும் கொண்டு நிறுத்தியதுயார்?
'பிடியுங்கள் அவனை' என்று தீர்க்கதரிசியை
பிடிக்கச்சொன்ன ராஜாவின் நீட்டிய கையை–
மடக்கமுடியாமல்போகச்செய்து தீர்க்கதரிசியை காப்பாற்றியது யார்?
நமக்காகவே ஆயுதசாலையைத் திறக்கிற கர்த்தரே! ஆமென்.

ராஜாக்களைக் கேளுங்கள்!

தேவ வார்த்தைகளை அஞ்சாமல் சொன்னத்
தீர்க்கதரிசிகளால் அழிந்து – நாசமாய்ப் போன ராஜாக்கள்
ராஜ்யங்கள் எத்தனை? ராஜ்யங்களை மீட்டெடுத்து
இராஜாக்களாக இருந்தவர்கள் எத்தனை பேர்?

விக்கிரக ஆராதனைக்கும் வேசித்தனத்திற்கும்
இராஜாங்க அங்கீகாரம் கொடுத்து
கர்த்தரின் தீர்க்கதரிசிகளை வெட்டி வீழ்த்திய
அடங்காபிடாரி யேசபேலின் கணவன் ஆகாப் ராஜாவிடம்
கேட்டுப் பாருங்கள் – கர்மேலில் கர்ஜித்த சிங்கம்
எலியா எப்படிப்பட்டவன் – எலியா மேலிருந்த
தேவ அபிஷேகம் எப்படிப்பட்டதென்று சொல்லுவான்!

தேசமெங்கும் தவளை, ஊரெல்லாம் வெட்டுக் கிளிகள்
நதியெல்லாம் இரத்தம், புழுதியெல்லாம் பேன்கள் –வண்டுகள்
மிருக ஜீவன்கள் நாசம் – தேசத்தின் எல்லா
தலைப்பிள்ளைகளும் சங்காரம் என்ற எண்ணற்ற
அற்புதங்களைக் கண்டு கதிகலங்கியும் கீழ்படியாது
தங்கள் எல்லா குதிரை வீரரோடும், முழூராணுவத்தோடும்
செங்கடலில் சிக்கிச் செத்துச் சீரழிந்தானே ...
எகிப்து சாம்ராஜ்யத்தின் பார்வோன் மன்னன்!
அவனிடம் கேட்டால் சொல்லுவான் – மோசே கையிலிருந்த
கோலாகிய தேவ வல்லமை எப்படிப்பட்ட தென்றும்...
மோசே உடன் இருந்த சேனாபதியே சர்வ வல்லவர் என்றும்!

ஆயுதம் ஏந்திய எதிரிபடை வீரர்களுக்கு முன்பாக
தப்பித்துக் கொள்ள எந்த வழியுமில்லாத போதும்..
பாடகர் குழுக்களை வைத்தே படை நடுங்கச் செய்த
யோசபாத் ராஜாவைக் கேட்டால் – சொல்லுவார்.
தேவனால் எல்லாமே கூடும் நம்மால் ஒன்றும் செய்யமுடியாதென்று!

ஆமாம். சகோதரனே, சகோதரியே...
தேவனாலே எல்லாம் கூடும். கூடாதது ஒன்றுமில்லை.
'கர்த்தரே யுத்தத்தில் வல்லவர்.
கர்த்தர் என்பது அவருடைய நாமம்.' யாத்திரா : 15:3
கர்த்தரால் மாத்திரமே – அவர் தரும் வல்லமையான
ஆயுதங்களான அபிஷேகம், கிருபா வரங்களால் மாத்திரமே
நாம் இந்த மாயப்பிசாசின் லோகத்தை ஜெயங்கொள்ள முடியும்.

நம்முடைய பலத்தினாலுமல்ல பலாக்கிரமத்தினாலும் அல்ல தேவனுடைய ஆவியினாலே ஆகும்.
என்ற அதி உன்னதமான திருவார்த்தையின்படி
சர்வதேச மிஷினரி களமானாலும் சரி, வடமாநில
மிஷினரி களமானாலும், வேறெந்த உத்தம ஊழியமானாலும் ஒவ்வொன்றும் போராட்ட களமே! என்பதில் சந்தேகமில்லை. போராடினால்தான் வெற்றி என்பதை நெஞ்சில் நிறுத்தி
உனக்காக ஆயுதசாலையை திறக்கிற கர்த்தரிடம்
கருத்தோடு ஜெபி – உணர்வு மிகுந்த உபவாசத்தோடு
கண்ணீரோடு நீ ஜெபிக்கும் போது ...
உலக வரலாறே திரும்பிப் பார்க்கும் – தேவ வல்லமையை
தேவ அபிஷேகத்தோடு உன் மேல் வைப்பார்.

உன் கண்முன்னே எரிகோ போன்ற எஃகு கோட்டைகள்
இடிந்து – இருந்த இடம் தெரியாமல் போவதையும்..
கரை புரண்டு பிரவாகித்தாலும் யோர்தானைப் போன்று
பொங்கிவரும்சோதனைகள் உன்னைக்கண்டு பின்னோக்கி
ஓடுவதையும் நீயே உன் கண்களால் காண்பாய்.

'யார் அங்கே! என்ன சேதி?
'வெங்கலக்கதவுகளும், இருப்புத் தாழ்பாட்களும்'
'ஓகோ! அதிகாலையில் தேவபிரசன்னத்தோடு புறப்படுவோம்!
வெங்கலக்கதவுகளை உடைத்து–
இருப்புத் தாழ்பாட்களை முறிப்போம்.

2-6
வெங்கலக் கதவுகள் இருப்பு தாழ்ப்பாள்கள்

'கர்த்தராகிய நான் அபிஷேகம் பண்ணின கோரேசுக்கு முன்பாக ஜாதிகளைக் கீழ்ப்படுத்தி, இராஜாக்களின் இடைக் கட்டுகளை அவிழ்க்கும் படிக்கும், அவனுக்கு முன்பாக வாசல்கள் பூட்டப்படாதிருக்க, கதவுகளைத் திறந்து வைக்கும் படிக்கும், அவனைப்பார்த்து அவனது வலது கையை பிடித்து அவனுக்குச் சொல்லுகிறதாவது'
'நான் உனக்கு முன்னே போய்
கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்.'

'உன்னை பெயர் சொல்லி அழைக்கிற இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் நானே என்று நீ அறியும்படிக்கு, வெங்கலக்கதவுகளை உடைத்து, இருப்பு தாழ்ப்பாள்களை முறித்து – அந்தக்காரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும் ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குத்தருவேன்'. ஏசாயா: 45:1,2,3,4

ஆகா, எவ்வளவு மேன்மையான வாக்குத்தத்தங்கள். யார் இந்த கோரேஸ்? ஏசாயா : 44:28ல் கோரேசைக் குறித்து கர்த்தரே சொல்கிறார்.

'...அவன் (கோரேஸ்) என் மேய்ப்பன், அவன் எருசலேமை நோக்கி, நீ கட்டப்படு என்றும், தேவாலயத்தை நோக்கி நீ அஸ்திபாரப்படு என்றும் சொல்லி எனக்கு பிரியமானதை யெல்லாம் நிறைவேற்றுவான் என்று சொல்லுகிறவர் நான்.'

கோரேஸ் என்ன செய்வான்?
'அவன் என் நகரத்தைக் கட்டி, சிறைப்பட்டுப் போன என்னுடையவர்களைக் கிரயமில்லாமலும், பரிதானமில்லாமலும் விடுதலையாக்குவானென்று, சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்'. ஏசாயா: 45:13
கோரேஸைக்குறித்த முழு சாட்சியும் கர்த்தரே சொல்லுவது எவ்வளவு சிலாக்கியம் பாருங்கள்

தம்மை நோக்கி வேண்டிக் கொள்ளுகிற யாவருக்கும் தம்முடைய அளவற்ற இரக்கத்தின் படியே– அவர்கள் வேண்டிக் கொள்ளுவதை – பெற்றுக் கொள்ளுவோம், என்ற விசுவாசத்துடனே கேட்பதால் அதை நிறைவேற்றி கொடுக்கிற தேவனாகிய கர்த்தர், கோரேஸ் மீது வைத்த அதே அற்புதமான அபிஷேகத்தை, இதை வாசிக்கிற, ஒவ்வொரு தேவப்பிள்ளைகள் மீதும் அளவில்லாமல் நிரப்புவாராக. ஆமென்.

யார் கோரேஸ்? ஒருவன் கோரேஸாக இருந்தால் என்ன செய்வான்? தேவன் ஏன் கோரேஸை எழுப்பினார்? இனி நாம் செய்ய வேண்டியது என்ன?

கர்த்தருடைய ஜனங்கள் சிதறடிக்கப்பட்டு, சிறைப்பட்டு, குருட்டாட்டமாக முரட்டாட்டம் செய்து, விக்கிரக ஆராதனை பில்லி சூனியம், வேசித்தனம் முதலான பாவங்களில் வீழ்ந்து சங்காரமாகிப் போகும் போதெல்லாம்...
தேசத்தின் ஜனங்களை – தாம் நேசிக்கிற ஜனங்களை மீட்க தேவன் தமக்கு பிரியமான தாசர்களை எழுப்புகிறார்.

கோரேஸாக இருக்கிறவன் ஆண்டவருடைய ராஜ்யத்தை கட்டுவான், உலக ஜனங்களை மீட்கவே நம் இரட்சகர் தோன்றி பாடுபட்டு மரித்து உயிர்த்தது போல தேசத்தில் பாவத்தில் மூழ்கிக் கிடக்கும் லட்சோப லட்ச ஜனங்களை, இரட்சிப்புக்குள் நடத்தி விடுவிப்பான், மேலோட்டமாக, ஒப்புக்காக, கடமைக்காக ஆண்டவரைத் தேடாமல், உண்மையாகவே ஆண்டவருக்கு பிரியமானதைச் செய்வான்.

சிலுவையின் கடைசி மணித்துளிகளில் கூட, தன்னை வேண்டிக் கொண்ட கள்ளனுக்கும் பரதீசை பரிசளித்தத் தேவன், இமைப்பொழுதில் அனைத்தையும் மறு ரூபமாக்க வல்லவர், இப்போதே கோரேஸ் மீதிருந்த அதே அற்புதமான அபிஷேகத்தை உன் மீதும் வைக்கிறார்.

கோரேஸின் அபிஷேகத்தைப் பெற்ற நீ
லட்சோபலட்சமாய் தொலைந்து கிடக்கும் என் ஆடுகளை மேய்ப்பாயா? பரம
எருசலேமாகிய தேவராஜ்யம்
அறியப்படாது –கட்டப் படாதிருக்கிற பகுதிகளில்
அதைக்கட்டுவாயா?
தேவனுடைய ஆலயமாக மாற வேண்டிய எண்ணற்றோர்
விக்கிரகக் கோயிலாக இருக்கிறார்களே
அவர்களை என் ஆலயமாகக் கட்டி
அவர்கள் இருதயத்தை, நான் (கர்த்தர்)
குடியிருக்கும் ஆலயமாக மாற்றுவாயா?
அல்லது உனக்கிருக்கும் ஆள்பலம், அதிகார பலம் பணபெலம் போன்றவற்றால்..
கோரேசைப் போன்று அஸ்திபாரப்படு.. கட்டப்படு வென்று சொல்லூவாயா? நீ
அறிந்து கொண்ட படி எனக்கு பிரியமானவற்றையெல்லாம் நீ நிறைவேற்றுவாயா?

'ஆம். கர்த்தராகிய ஆண்டவரே... பாவ இருளில் இருக்கும்
தேசத்தின் ஜனங்களை விடுவிப்பேன், மேய்ப்பேன்
கட்டுவேன்! உம் விருப்பத்தை நிறைவேற்றுவேன்',
என்கிற உன் உணர்வுமிக்க சத்தத்தை கேட்கிற
ஆண்டவர், உன்னை மார்போடு அணைத்து
'என் நேசக்குமாரனே' என்று...
தம் பரிசுத்த முத்தங்களால் உன்னை மகிழ்வித்து
சொல்லும்... அற்புத வார்த்தைகளைக் கேள்...

'என்மகனே
நான் அபிஷேகம் பண்ணின உனக்கு முன்பாக
ஜாதிகளைக் கீழ்ப்படுத்துவேன்
இராஜாக்களின் இடைக்கட்டுகளை, நீ அவிழ்ப்பாய்.
உனக்கு முன்பாக வாசல்கள் பூட்டப்படாதிருக்க
உனக்காக கதவுகள் திறந்தே வைக்கப்பட்டிருக்கும்!.

உன் வலது கையைப் பிடித்திருக்கிற—நான் உனக்கு முன்னே
போய்... கோணலானவைகளை செம்மையாக்குவேன்.
உன்னைப் பெயர் சொல்லி அழைக்கிற
உன் தேவனாகிய கர்த்தர் நானே என்று நீ அறியும் படிக்கு –
உனக்காக வெங்கல கதவுகளை உடைத்து
இரும்புத் தாழ்ப்பாள்களைமுறித்து—
அந்த காரத்தில் இருக்கும் பொக்கிஷங்களையும்
ஒளிப்பிடத்திலேயிருக்கிற, புதையல்களையும் உனக்குக்
கொடுப்பேன் என்று சொல்கிற
நம் தேவனாகிய கர்த்தரின் ராஜரீக உடன்படிக்கையை
விசுவாசிக்கிற நீயும் நானும்.. யாவரும் பெற்றுக் கொள்வோம்.
பட்சபாதமேயில்லாத தேவன் கோரேஸைப் போல், உன்னையும்
மேலே சொன்ன தேவ வார்த்தைகளால் ஆசீர்வதிப்பாராக!
தேவபிள்ளைகள் அவர் சித்தப்படியே வாழும் போது
அவர்களுடைய ஜீவியத்திலும், ஊழியத்திலும்
தடையாகயிருக்கும் எல்லா வெங்கல கதவுகளும் உடைக்கப்படும்.
எழும்பி பிரகாசிக்க முடியாதபடி எதிரே வரும் எல்லா இருப்புத்
தாழ்பாள்களும் முறிக்கப்படும்.
உடைப்பவரும்... முறிப்பவரும்..
சிங்கமும் பால சிங்கமும் போல் முழங்கி கெர்ச்சித்து
புறப்படுகிற.. யூத ராஜசிங்கமாகிய கர்த்தரே... அல்லேலூயா!.

2-7
சிங்கமும் பாலசிங்கமும் இரையை பிடித்திருப்பது... போல்!

'சகாயமடையும்படி இஸ்ரவேலுடைய பரிசுத்தரை நோக்காமலும் கர்த்தரை தேடாமலும் எகிப்துக்கு போய் குதிரைகள் மேல் நம்பிக்கை வைத்து இரதங்கள் அநேகமாயிருப்பதனால், அவைகளை நாடி குதிரை வீரர்கள் பெலசாலி களாயிருப்பதனால், அவர்களை நம்பிக் கொண்டிருக் கிறவர்களுக்கு ஐயோ' ஏசாயா 31 :1

என்று ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக ஜனங்களை தேவன் எச்சரிக்கிற அதே போன்று, நெகேமியா ஜனங்களைப் பார்த்து

'நீங்கள் எவ்விடத்திலே எக்காளச் சத்தத்தைக் கேட்கிறீர்களோ! அவ்விடத்திலே வந்து, எங்களோடே கூடுங்கள், நம்முடைய தேவன் நமக்காக யுத்தம் பண்ணுவார்.' நெகேமியா:4:20

இங்கே இரண்டு வகையான நம்பிக்கை கொண்ட ஜனங்களைப் பார்க்கிறோம். முதலாவதாக சகாயமடையும் படிக்கு இஸ்ரவேலின் பரிசுத்தரை நோக்காமல் மாம்சீகத்தை நம்பி நாங்கள் எகிப்துக்குப் போவோம், அங்கே வேகமான குதிரைகள், விரைவான ரதங்கள் மற்றும் பெலசாலிகளான குதிரை வீரர்கள் இருக்கிறார்கள். அதனால் நாங்கள் தப்பித்துக் கொள்ளுவோம் என்கிறார்கள்.

ஆனால் இங்கே, யாத்திராகமம் 14:14ல் காண்கிறபடி 'கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார். நீங்கள் சும்மாயிருப்பீர்கள்' என்று மோசே ஜனங்களை உற்சாகப் படுத்தியது போலே... அலங்கத்தைக் கட்டிக் கொண்டிருந்த நெகேமியா ஜனங்களைப் பார்த்துச் சொல்கிறார்...

நீங்கள் எவ்விடத்திலே எக்காளச் சத்தத்தைக்கேட்கிறீர்களோ அவ்விடத்திலே வந்து எங்களோடே கூடுங்கள், நம்முடைய தேவன் நமக்காக யுத்தம் பண்ணுவார், என்ற நெகேமியாவின் மூலமாக தேவசித்தத்தை அறிந்து செயல்பட்ட ஜனங்கள் முடிவில் வெற்றியைக் கண்டார்கள். முதல் கட்ட ஜனங்களாய் பார்த்த உலக மனிதர்கள் தேவனாகிய கர்த்தரை நம்பாமல்... இரதங்களையும், குதிரை வீரரையும் மாம்ச பெலத்தையும் நம்பி மிகப்பெரிய அழிவைக் கண்டார்கள்.

அன்புமிக்க சகோதரனே, சகோதரியே.. நீங்கள் எந்த இடத்தில் ஜீவ வார்த்தையாம் அவருடைய சத்தத்தைக் கேட்கிறீர்களோ! உடனே கீழ்படிந்து சர்வ வல்லவரோடே கூடும் போது... தேவாதி தேவன் நமக்காக யுத்தம் பண்ணுவார்.

பிள்ளைகளின் படிப்பு, திருமண காரியங்கள், கடன் பாரங்கள், குடும்ப பிரச்சனைகள், தொழில் மற்றும் வேலை செய்யும் இடங்களில் உள்ள எப்படிப்பட்ட பிரச்சனைகளானாலும் சரி, நாம் தேவ சித்தப்படி வாழும் போது – நமது பிரச்சனைகளுக்காக கர்த்தரே யுத்தம் பண்ணுவதைக் காணலாம்.

தனது பிள்ளைகளுக்காக தேவன் எப்படி யுத்தம் பண்ணுவார் என்பதை ஏசாயா 31:4ல் பட விளக்கம் போல் சொல்லப்பட்டதை கவனிப்போம்.

‘சிங்கமும் பாலசிங்கமும் தங்கள் இரையை பிடித்திருக்கும் போது கெர்ச்சித்து, தங்களுக்கு விரோதமாய் கூப்பிடுகிற திரளான மேய்ப்பரின் சத்தத்தினால் கலங்காமலும் – அவர்கள் அமளியினாலே பணியாமலும் இருக்கிறது போல சேனைகளின் கர்த்தர்... யுத்தம் பண்ண இறங்குவார்.’ சிங்கமும் பாலசிங்கமும் தங்கள் உணவுக்காக அடங்காத் துணிவுடன் பாய்ந்து சென்று இரையைப் பிடித்திருக்கும் போது எவருக்கும்...

அஞ்சாதிருந்து, கெர்ச்சிக்கிறது போலவே தேவன் நமக்காக நம் சத்துருக்களோடே யுத்தம் செய்கிறார்.

இதே தேவ வல்லமையும் வைராக்கியமும் தான் நமது ஆவிக்குரிய வாழ்க்கையில் ஏற்படுகிற சொந்த வாழ்க்கையில்

வருகிற எல்லா பலவீனம், தடுமாற்றம் போராட்டம், சோதனை, வேதனைகளில் வெற்றி கொள்ளச் செய்கிறது. வெள்ளம் போல சத்துரு வரும்போது தேவ ஆவியானவர் நமக்காக கொடியேற்றுவார்.

நம்மை தொந்தரவு செய்யும் துர்சக்தி களெல்லாம் கர்த்தர் நமக்காக யுத்தம் செய்ய புறப்படும் போது சிங்கத்தின் பிடியில் அகப்பட்ட குறும்புக்கார குரங்காய் பீரிப் போடப்படுவதில் சந்தேகமில்லை.

நாம் யாராக இருந்தாலும் சுயபலத்தை நம்பி போரிட்டு ஜெயங்கொள்ள முடியாது. அனுதினமும் நமது இரட்சிப்பை, அபிஷேகத்தை காத்துக் கொள்வது– பாவத்துக்கு விரோதமாக போராடுவது, சுய மாம்சீக இச்சைகளை வேறற்றுப் போகும் வண்ணமாகவெட்டி எரிவது... எதுவும் நம்மால் மாத்திரம்

முடிவதில்லை. பெலவானான பிசாசை எந்த மனிதனும் ஜெயங் கொண்டது இல்லை. ஆனால் தேவ ஆவியின் வல்லமையோடு காணப்படும் எந்த மனிதனையும் பிசாசு ஜெயங்கொண்டதாக சரித்திரமேயில்லை... சகோதரா!

'தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள், பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்'. யாக்கோபு 4:7

தேவனோடிராத சிலர் பிசாசுகளை துரத்த சென்ற போது பிசாசுகள், 'பவுலையும் தெரியும், இயேசுவையும் தெரியும், நீங்கள் யாரடா? என விரட்டியடித்த சம்பவத்தை நாம் வேதத்திலே காண்கிறோம்.

கெர்ச்சித்துப் புறப்படு...

ஆதலினால் நாம் தேவ ஆவியைக் காத்துக் கொண்டு தேவனோடிருந்து யுத்தங்களை நடத்துவோம். யோவேல் 3:9,10ல் சொல்லப்பட்டபடி...

யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணுங்கள். பராக்கிரம சாலிகளை எழுப்புங்கள், யுத்தவீரர் எல்லோரும் சேர்ந்து ஏறிவரக்கடவர்கள்.
'உங்கள் மண்வெட்டிகளை பட்டயங்களாகவும், உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடியுங்கள். பலவீனனும் தன்னை பலவான் என்றுச் சொல்வானாக,'
'பயிர் முதிர்ந்தது அரிவாளை நீட்டி அறுங்கள்' யோவேல் : 3:13.

நியாயத் தீர்ப்பின் பள்ளத்தாக்கிலே ஜனங்கள், திரள் திரளாய் இருக்கிறார்கள். கர்த்தரின் நாள் சமீபித்திருக்கிறது. ஆதலால் அறுவடையின் யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணுவோம். பராக்கிரமசாலிகளை எழுப்பி – யுத்த வீரர் எல்லோரும் சேர்ந்து ஏறிச் செல்லுவோம்.

உலக வேலைக்காக நாம் வைத்திருக்கும் மண்வெட்டி அரிவாள் போன்றவற்றை மாற்றி ஆவிக்குரிய ஆயுதமாக, பட்டயமாக அடிப்போம். அறுப்பு மிகுதி ஆட்களே கொஞ்சம் என ஏங்கி நிற்கும் எஜமானின் நோக்கமறிந்து புறப்படுவோம்

சிங்கமும் பாலசிங்கமும் இறையை பிடிப்பதற்காய் புறப்படுவது போல் வீறுகொண்டு புறப்படுவோம் –இப்போது உன் முன்னே சிங்கம் போன்று சத்துரு வந்தாலும் சத்துருவை, சீரி சிதறடிக்கும் வல்லமை உனக்கிருக்கிறது கெர்ச்சித்து புறப்படுகிற, உன் முன்னே வரும் கரடியையும், சிங்கத்தையும் ஒரு ஆட்டைப் போல் கிழித்தெறியும் அபிஷேகம் உனக்குள் இருக்கிறது.

ஓ... என்ன ஒரு தேவ வல்லமை!
உனக்குள் இருக்கும் அந்த அவியாத அனலைக்
குன்றிப் போகச் செய்ய... யாருக்கும் அனுமதி கொடுக்காதே!
ஒரு ஆட்டுக் குட்டியைப் கிழித்துப் போடுவது போல் கெர்ச்சிக்கிற
பாலசிங்கத்தை கிழித்து போட்ட
சிம்சோனின் பலமான தேவ அபிஷேகம் உனக்குள்ளிருக்கிறது.

கழுதையின் தாடையெலும்பால்
ஆயிரம் பேரை கொன்று குவிக்கிற
மாபெரும் இரட்சிப்பு உன்னையும் அழைக்கிறது.
சுவிஷேசத்திற்கு விரோதமாக தேசத்திலே
முளைத்திருக்கிற – எல்லா பெலிஸ்த்தியரின்
வெள்ளாண்மையாகிய களைகளை சுட்டெறிக்க
முன்னூறு நரிகளைப் பிடித்து – வாலோடு வாலையும்
இரட்சிப்பாகிய தீப்பந்தத்தையும் கெட்டிவிடு – அவை எல்லா
சுவிஷேச விரோத களைகளையும் சுட்டெரிக்கட்டும்.

கண்களைத் திறந்து பார் –
வானம் எனக்கு சிங்காசனம் பூமி எனக்கு பாதப்படியென்று
உன் அருகிலேயே நிற்கும்
ஜெயங்கொள்ளும் சேனாபதியைப் பார்,
இளவரசனாக உனக்கு புத்திர சுவிகாரம் தந்து
தமது ஆயுத சாலையைத் திறந்து – உனக்கு
வேண்டிய ஆயுதமெல்லாம் தந்த சேனாபதியைப் பார்.
யூத ராஜ சிங்கத்துக்கு பிறந்த – நீ
பாலசிங்கம் போன்று முழங்கி கெர்ச்சித்து புறப்படு
சுவிஷேச போர்க்களம்! உன்னைத்தான் அழைக்கிறது.
யுத்தம் செய்யாத யாரும் ஜெயங்கொண்டதில்லை
ஜெயங்கொள்ளாத எவரும்–
ஜீவகிரீடத்தைப் பெறப்போவதில்லை.

யுத்தமின்றி ஜெயமில்லை! ஜெயமின்றி ஜீவகிரீடமில்லை! 3

'ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன். ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்குத் தேவனுடைய பரதீசின்மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன் என்றெழுது. வெளி : 2:7

'ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன்...' வெளி: 3:21F
'ஜெயங்கொள்கிறனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோட கூட உட்காரும்படி அருள்செய்வேன்.' வெளி 3:12

தேவனுடைய பரதீசின் கனி, ஆலயத்திலே தூணாக்குதல் மகிமையின் சிங்காசனத்தில் ராஜாவோடே அமரும் பாக்கியம், இந்த மேன்மையெல்லால் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு மட்டுமே எனத் தெளிவாக தேவ ஆவியானவர், எபேசு, பிலதெல்பியா, லவோதிக்கேயா போன்ற சபைகளுக்கும், புதிய உடன்படிக்கையின் புத்திரர்களாகிய நமக்கும்,– காது உள்ளவன் கேட்கக் கடவனென்று, தெளிவாக சுட்டிக் காட்டியுள்ளார். ஜெயங்கொள்ளுகிறவன்! என்றால்? எங்கே ஜெயம் பெறுவது? போட்டியோ! போராட்டமோ! யுத்தமோ, இல்லையென்றால் ஜெயம் எங்கேயிருந்து வரும்? சரி, யுத்தமிருக்கிறது – யுத்தம், பேராட்டத்தில் நிற்கவேண்டுமே! அப்படியே நிற்காவிட்டால், ஜெயமேது ஜீவகிரீடமேது?
எது ஜெயங்கொள்ளவேண்டிய போராட்டம்?
சாப்பிட்ட சாப்பாடு சரியா ஜீரணமாகவில்லை, சாப்பிட்டபின் சரியாக தூக்கம் வருவதில்லை. சுகர் அதிகமாகிவிட்டது, கொழுப்பு கூடிவிட்டது, வீடுகட்டமுடியவில்லை, திருமணம் தடைபடுகிறது என்பவை தான், பிரதான போராட்டமென்று படுத்துக் கொண்டே ஜெயிக்க நினைக்கும் சிலர் பகல் கனவு கண்டு கொண்டிருக்கின்றனர்.

3-1

ராஜாவும்: படை பரிவாரமும்

'நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்!'
என்று கொடூரமான கோரச்சிலுவை மரணத்துக்குத் தன்னை,
ஒப்புக் கொடுக்கிற வேளையிலும்..
ஜீவாதிபதியாம்... நம் நேசக்கர்த்தர்
தன்னை ராஜாவென்றே அறிமுகப்படுத்துகிறார்.
சிலுவையின் மீது வைக்கப்பட்ட விபர பலகையிலும்
'யூதருடைய ராஜா' வென்றே எழுதப்பட்டிருந்தது.

–மத்தேயு 12:26, லூக்கா 11:18 வசனங்களில் சாத்தானுக்கும் ஒரு ராஜ்யம் இருப்பதாக இயேசுவே குறிப்பிடுகின்றார் – உலகத்தின் அதிபதி, ஆகாய மண்டல பிரபு என்றெல்லாம் அவனும் வர்ணிக்கப்பட்டுள்ளான்.

இங்கே இரண்டு ராஜ்யங்கள், இரண்டு ராஜ்யத்திற்கும்
இராஜாவும், சேனையும் பரிவாரமும் தனித்தனி தூதர் கூட்டமும் இருக்கின்றது. இரட்சகராம் இயேசுவின் நாமத்தை தரித்துக் கொண்டவர்கள் ஒரு கூட்டமாகவும், அந்த மேலான நாமத்தை முழுமையாய் ஏற்றுக் கொள்ளாதவர்கள் ஒரு கூட்டமுமாகவும் ஓயாத யுத்தம் நடைபெற்றுக் கொண்டே தானிருக்கிறது.
–முடிவு பரியந்தம் வரைத் தொடருகிற இப்போராட்டத்திலே ஜெயங் கொள்ளவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். நம் கர்த்தராகிய கிறிஸ்துவானவரும், நம்மை மீட்கும் பொருளாக தன்னையே ஒப்புக் கொடுத்து மகாபாடுகளின் வழியே சிலுவையிலே வெற்றி சிறந்தார்.

நாமும் அனுதினமும் நம் சிலுவையை எடுத்துக் கொண்டு அவரைப் பின்பற்றுபவர்களாக வாழ்ந்து – இந்த உலகத்தின் அதிபதியோடு நமக்கிருக்கிற யுத்தங்களில் ஜெயங்கொண்டு... ஜீவ கிரீடத்தை பெற்றுக் கொள்ளுவோம்.

3-2
இஸ்ரவேலைக் கலங்கப் பண்ணுகிறவன்

இஸ்ரவேலின் ஏழாவது ராஜாவான ஆகாப் ராஜா, தன் பெயரிலேயே பெண்ணுக்கேற்ற எந்த குணநலனுமில்லாத ஏத்பாகாலின் குமாரத்தி யேசபேலை விவாகம் செய்கிறான். தனக்கு முன்னிருந்த எல்லா ராஜாக்களைப் பார்க்கிலும் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதையே செய்து வருகிறான். மனைவியாகிய யேசபேலின் தூண்டுதலால் சமாரியாவிலே பாகாலுக்கு கோவில், பலி பீடம் என்று தேசத்தையே விக்கிரக தோப்பாக மாற்றி விடுகிறான்.

தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக விக்கிரக ஆராதனை, வேசித்தனம், பில்லி, சூனியம் என்று ஆகாபும், யேசபேலும் காட்டாட்சி நடத்துகிறார்கள். தேசம் சீர்கெட்டுக் கிடக்கிறது. கர்த்தரின் தீர்க்க தரிசிகளை கொன்று தீர்த்துவிட்டு 400 பாகால் தீர்க்க தரிசிகளுக்கு – யேசபேல் தன் பந்தியிலே ராஜ உபச்சார விருந்து செய்கிறாள். கர்த்தரின் பலிபீடங்களோ செப்பனிட ஆளில்லாதிருக்கும் போது பாகாலின் கோவிலிலே ஆடல் பாடல் தேர் திருவிழாவென்று மக்கள் குடித்து.. கும்மாளமிட்டிருப்பார்கள்.

கொஞ்சம் குறைய இருந்த உணர்வுள்ள தேவஜனங்களோ கண்ணீரோடும், கதரலோடும் ஜெபித்திருப்பார்கள். தட்டிக் கேட்க ஆளே இல்லாத சூழ்நிலையிலே – தேசத்தை பொல்லாத பிசாசின் கோட்டையாக மாற்றிவிட்டார்கள். அப்போதுதான் யாருமே எண்ணிப்பார்க்காத ஆகாப் அரசனோ, அடங்கா ராணி யேசபேலோ எண்ணிப்பார்த்திராத ஆகாப், யேசபேல் சரித்திரத்திலே... ராஜ அரண்மனை இதுவரை கண்டிராத காட்சி அரங்கேருகிறது.

போலியான தெய்வங்களைத் தோற்றுவித்து–
ஜீவனற்ற அந்த ஜடங்களின் மானத்தை மறைக்க–
அவற்றிற்கு பட்டாடை கட்டி –
பாகாலுக்கே பந்தி வைக்கிற...
மஹாராஜா ஆகாப் முன்னால் – அவனையும்
அவன் தேசத்தையும் சபிக்க – வந்து

சிங்கமென நிற்கிறான் எலியா.
–கோட்டை காவலாளிகளின் விசாரணை,
படை பரிவாரங்களின் அனுமதி,
ராஜ பிரதானிகளின் உத்தரவு, –
ராஜசபை மெய்க்காப்பாளர்கள் எதையும் கண்டுகொள்ளாமல்....
விசை அழுத்தப்பட்ட துப்பாக்கியிலிருந்து புறப்படும்
குண்டுகளைப் போல் – தேவ வார்த்தையோடு
புறப்பட்டு – வந்து நிற்கிறான் எலியா.

–ராஜ தர்பார் படை பரிவாரம் எதற்கும் அஞ்சாது
ஆகாப் ராஜாவே கேளும், உமக்கும் உம் தேசத்திற்கும்
நடக்கப் போவதை நான் சொல்லுவேன்' என்று ...
'....என்வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே
பனியும் மழையும் பெய்யாதிருக்கும்' என்று இஸ்ரவேலின் தேவனாகிய
கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான்
அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் – என்று

1 ராஜாக்கள்: 17:11

–எலியா தீர்க்கதரிசி தேவ வார்த்தைகளைச் சொன்னதும்– உச்சந்தலையிலே
விழுந்த சம்மட்டி அடியைப் போல்
ராஜ அரண்மனையே அதிர்ந்தது – ராஜதர்பார்
மண்டபம் மயான அமைதி போல் நிசப்தமாயிற்று –
சர்வலோக ஏக சக்ராதிபதி தேவாதி தேவனைப் பற்றி நிர்விசாரமாயிருந்த
ஆகாபின் கூட்டம்
மகா அதிர்ச்சியிலிருந்து மீளுமுன் –

சற்றும் குறையாத ராஜமிடுக்கோடு திரும்பிய எலியா,
தனது வைராக்கியத்தின் சால்வையை சுழற்றி
தோளில் போட்டபடியே ... சடுதியாய் வந்த எலியா
சடுதியாய் சென்று விட்டான்.
தேவ ஆவியின் உந்துதலினாலே புறப்பட்டு வந்த
எலியாவை எவன் பிடிக்க முடியும்.

வார்த்தையோடு புறப்படுவாயா?

எலியா சொன்னபடியே மழையும் பனியுமின்றி– சமாரியாவை
கொடிய பஞ்சம் பேயாகப் பிடித்துக்கொண்டது–இங்கே
தேவ வார்த்தைகளைப் பெற்றுக்கொண்ட எலியா
நம்மைப் போல பாடுள்ள மனிதனாக இருந்தபோதிலும்......
தேசத்திலேயிருந்த அஞ்சத் தகுந்த சூழ்நிலையைப் பார்க்கவில்லை
கர்த்தரின் பலிபீடங்கள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன.
கர்த்தரின் தீர்க்கதரிசிகள் வெட்டி வீழ்த்தப்படுகிறார்கள்.
கர்த்தரின் ஜனங்கள் என்று சொல்லவே அஞ்சுகிற
பேயாட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த மகா மோசமான சூழ்நிலையில்–நம்மை போன்ற
எலியாவின் நிலைமையை நாம் சிந்திக்க வேண்டும்.
இங்கேதான் ச்கோதரனே!,
எலியாவின் வீரவரலாறு தொடங்குகிறது.
தேவ ஜனங்களாகிய நம்மில் எத்தனைபேர்
எலியாவைப் போல், நம்மிடம் இருக்கும் தேவவார்த்தையோடு
புறப்பட தயாராக இருக்கின்றோம்.

'அறுப்புமிகுதி வேலையாட்களோ கொஞ்சம்
அறுப்புக்கு–தமது அறுப்புக்கு ஆட்களை அனுப்பும்படி
எஜமானை வேண்டிக்கொள்ளுங்கள்' என்ற
ஆத்தும பாரமிக்க ஜீவசத்தம் கேட்டுக் கொண்டேயிருக்கிறது.
தேவ வார்த்தையாகிய நற்செய்தியை சுமந்துச் செல்ல வேண்டிய
தேவபிள்ளையாகிய நம்மை பார்த்துதான்

'யாரை நான் அனுப்புவேன், யார் எனது காரியமாய் போவான்' என்று
இன்றும் கல்வாரி சிலுவையிலிருந்து புறப்படுகிற– ஒரு மனதுருக்கத்தின்
தொனி, தொனித்துக் கொண்டேயிருக்கிறது.
மறுக்க முடியாத இந்த மாட்சிமை பொருந்திய
தேவ அழைப்புக்கு நாம் கீழ்படிந்தே ஆகவேண்டும்

நம்மிடம் இருக்கும் தேவ வார்த்தையாகிய
நற்செய்தியை நாம் சுமந்துச் செல்லும் போது – தேவ
அபிஷேகம், வல்லமையும் கூடவே வருகிறது.
ராஜாக்களின் இடைக்கட்டுகளை அவிழ்க்கிற
தேவ வல்லமை நம் கரங்களில் தங்கும்.
எவ்வளவு நெடிய கோலியாத்தாக இருந்தாலும் – அந்தப்
பொல்லாத பெலிஸ்தியனை வீழ்த்துகின்ற
பொங்கியெழும் அபிஷேகமும் நம்மிடமிருந்து புறப்படும்.
தேவன் நமக்காக திறக்கும் திறந்த வாசல்களை
ஆகாப் என்ன ஆகாஸ்வேறு ராஜாவானலும்
எவரும் பூட்ட முடியாது.

தேசத்தையே குலுக்கும் வல்லமை மிக்க
இயேசுவின் சுவிஷேசத்தை நீ சுமந்து செல்லும்போது
அவரே உன்னை தாங்கி, தப்புவித்து, ஏந்தி சுமப்பார்.
ஆறுகள் உன்மேல் புரளுவதில்லை
அக்கினி உன் பேரில் பற்றாது. ஏழு மடங்கு அக்கினியோ
சிங்கக் கெபியோ, உன்னை சேதப்படுத்துவதில்லை.
நீ புறப்படுவாயா... சகோதரனே! சகோதரியே!

சிங்கமென புறப்பட்ட எலியா?

இங்கே மீண்டும் தேவனுடைய வார்த்தை எலியாவுக்கு,
கோபத்தால் எரிமலை போல் குமுறிக் கொண்டிருக்கிற
ஆகாப் மன்னனிடமே மீண்டும் செல்ல வேண்டும்.
எலியா ஏற்கனவே சொன்ன வார்த்தைகளால்
மூன்றாம் வருஷம் வரைக்கும் கொடிய பஞ்சத்தால்
தேசம் சிக்கிச் சீரழிந்து கிடக்கிறது.
பஞ்சத்தால் சாகுமுன் குதிரைகளையும்—கோவேறு
கழுதைகளையுமாவது உயிரோடே காப்பதற்காக
ஆகாப் ராஜா தேசம் முழுவதும் – தம் பரிவாரங்களோடு
பச்சைப்புல் அகப்படுமா எனத் தேடித் திரிந்து—
கோபத்தால் எலியாவை தேடாத ஜாதியும்

ராஜ்யமும் இல்லை என்கிற அளவிற்கு வெறிகொண்டிருக்கும்
ஆகாப்ராஜா முன்னால் மறுபடியும்...
தேவனுடைய வார்த்தையைச் சொல்ல வேண்டும்.
செல்லும் வழியில் கண்ட ஒபதியாவின் கலக்கம் தரும்
வார்த்தைகளால் எலியா சற்றும் கலங்கவில்லை.

சாதாரணப்பட்ட உலக மனிதர்கள் சிந்தித்தேப்
பார்க்கமுடியாத மகா உக்கிரமான சூழ்நிலையில்–
எலியா தீர்க்கதரிசியும் – ஆகாப் ராஜாவும்:
பார்த்தாலே பற்றியெறியும் கண்களால் இருவரும்
நேருக்கு நேர் பார்க்கின்றனர்.
என்ன மாயவித்தைக் காட்டினாலும் – தேசத்தின்
பஞ்சத்தைப் போக்க முடியாத ஆகாப் ராஜா–
மகா உக்கிரத்தோடே நரி போன்று சீறிப்பார்க்கும் போது
தேவ ஆவியினால் அனல்கொண்டு –சிங்கமென நிற்கிறான் எலியா,

–உடனே ஆகாப் எலியாவை பார்த்து மகா கோபத்தோடே...
'இஸ்ரவேலைக் கலங்கப் பண்ணுகிறவன் நீயல்லவா' என்றான்.
அதற்கு எலியா, 'இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன்
நான் அல்ல, கர்த்தரின் கட்டளைகளை விட்டு, பாகால்களைப்
பின்பற்றினதினால் நீரும் உம்முடைய தகப்பன் வீட்டாருமே
இஸ்ரவேலரைக் கலங்கப்பண்ணுகிறவர்கள்,' 1 ராஜாக்கள்:18:17,18

என்ற எலியாவின் வைராக்கியமான பதிலைக் கேட்டதும்...
ஏற்கனவே மழையும் பனியும் பெய்யாது என எலியாச் சொன்ன வார்த்தைகளால் தேசமே கலங்கிக் கிடக்கிறது தெரிந்த ஆகாப், எலியா சொன்னபடியே... நானூற்றைம்பது பாகால் தீர்க்கதரிசி களையும் தேசமெங்கிலுமிருந்து கர்மேல் பர்வதத்திற்கு வரவழைத்தான். ஆனால், ஆகாப் முதற்கொண்டு, பாகால் தீர்க்க தரிசிகள் மற்றும் ஜனங்களில் ஏராளமானோர், 'இன்றோடு எலியாவின் கதை முடிந்தது' என மனக்கணக்கு போட்டிருப்பர்.

தேசத்தை ஆளுகின்ற அதிகார வர்க்கத்தாரின் விரோதத்தில், நானூற்று ஐம்பது பாகால் தீர்க்கதரிசிகளுக்கு மத்தியில் தனியாக தேவ கிருபையோடு நின்ற எலியா ஜனங்களைப் பார்த்து யாருமே எதிர்பாராத அக்கினி போன்ற வார்த்தைகளால்

'நீங்கள் எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பீர்கள், கர்த்தர் தெய்வமானால், கர்த்தரைப் பின்பற்றுங்கள்...' பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள்...' என்று ஓங்கிச் சவால் விட்டு பலிபீடத்தின் மேலே கர்த்தரிடமிருந்து இறங்கிய அக்கினி மூலமாக, கர்த்தரே தெய்வம் என்பதை நிரூபித்து பாகால் தீர்க்கதரிசி ஒருவனையும் தப்பவிடாமல் கீசோன் ஆற்றங்கரையிலே வைத்து அனைவரையும் வெட்டிப் போட்டான் எலியா.

கலங்கி நின்றிருந்த மன்னன் ஆகாபைப் பார்த்து –எலியா, இனி பஞ்சமில்லை, 'பெருமழையின் இரைச்சல் கேட்கிறது, சமுத்திரத்தில் இருந்து கையளவு மேகம் எழும்பலாயிற்று. ஆகாபே நீர் போஜன பானம் பண்ணி விட்டு மழைக்கு முன்னே வீடு போய் சேரும், என கெம்பீரத்தோடு சொன்ன எலியாவின் வார்த்தையை ஏற்று–ராஜா, ரதத்தை பூட்டிவிரைந்து செல்லுகின்றான். இரதத்திற்கு முன்னே இரதத்தை விட வேகமாக ஓடுகிறான் எலியா. இங்கே கர்த்தரின் கரம் எலியாவுடனே இருந்தது.

வைராக்கியத்தின் சால்வை வேண்டும்

1 ராஜாக்கள் 18:36,37ல் எலியா தேவனை நோக்கி

'...கர்த்தாவே இஸ்ரவேலிலே நீர் தேவனென்றும்.......... உம்முடைய வார்த்தையின்படியே செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப் பண்ணும்... இந்த ஜனங்கள் அறியும்படி என்னைக் கேட்டருளும்' என்ற தனது வைராக்கியமான ஜெபத்தின் மூலம், வானும் மண்ணும் உருத்தெரியாமல் போனாலும், அழிந்து போகாத வல்லமையான வரலாற்றை உருவாக்கி– உலக திருச்சபைகளுக்கு

சவால் நிறைந்த ஒரு எடுத்துக் காட்டாக விளங்கிய, எலியாவின் வைராக்கியத்தின் சால்வையை, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் மூலம் நாமும் பெற்று சுவிஷேசப் பணியின் மூலம் தேசத்தை உறுவ நடப்போம். சீர்கெட்டுப் போகும் தேசத்தின் ஜனங்களுக்கும், தொலைந்து போன இஸ்ரவேல் வீட்டாரானாலும் சரி, ஸ்தாபன தலைவர்கள், போதகர்கள், ராஜாக்களானாலும் சரி, சொல்ல வேண்டிய எச்சரிப்பின் செய்திகளையும் தவறாமல் சொல்லி வைப்போம். கையிலே இருக்கின்ற கடிதங்களாகிய தேவ செய்திகளை கொண்டு சேர்க்க வேண்டிய இடத்தில் கொண்டு சேர்ப்பது நமது பிரதான கடமை.

சில கடிதங்களை கொடுத்தோம் சிலவற்றை கொடுக்கவில்லை என்று சமாதானம் சொல்லி தப்பிக்கமுடியாது. எச்சரிப்பின் செய்திகளே அதிகமாக தேவைப்படுகிற மிகவும் மோசமாய் போய்க்கொண்டிருக்கும். இந்த கடைசி காலத்திலே...

எலியாவைப் போன்ற வைராக்கியமுள்ள ஆவிக்குரிய நெஞ்சுரம் மிக்க வீர இளைஞர்கள் புறப்பட வேண்டும். உங்கள் அனல் தெரிக்கின்ற செய்திகளால்... பட்டணங்கள் குலுங்கட்டும்... இருதயங்களை உறுவ குத்துகிற செய்திகளால் பலவான்கள் பலட்சயமாகி, தேசம் அசைக்கப்படட்டும். தேவ அபிஷேகத்தால் பட்டணங்களை குலுக்கி, தேசத்தை அசைக்கிறவர்களாய் புறப்பட்டு தேசத்தை கலக்குவோர் இங்கேயும் வந்துவிட்டார்கள் என்று புறஜாதியரை
நம் சுவிஷேச அறிவிப்பால் நடு நடுங்கவைக்க—முதலில்,
வாருங்கள்! போராடுவோம்!!

3-3

போராடுவோம்..... வாருங்கள்:

வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கையிலே
நிரந்தர தோல்விகள் வராமல் தவிற்கலாம் ஆனால்
போராட்டங்களின்றி அது சாத்தியமில்லை.
போட்டி போராட்டத்தில் கலந்து கொள்ளாத யாரும்
ஜெயங்கொண்டதாக எப்படிச்சொல்ல முடியும்?
பலவீனமான மாம்சீக சரீரத்திலேயிருக்கிற நமக்குள்ளே கிறிஸ்து
வர ஆரம்பித்து விட்டாலே– நம் வாழ்வில் ஆவிக்குரிய
போராட்டம் ஆரம்பமாகி விடுகிறது.
நம் இதயத்தில் இயேசு பிறந்துவிட்டாலே பரலோகத்தில் மிகுந்த
சந்தோசம் உண்டாவது போலவே சாத்தானும் மிகுந்த
சஞ்சலத்திற்குள்ளாகி தனது ராஜ்யத்தின் குடிமதிப்புகணக்கை
பார்க்க தொடங்குகிறான்.
தொலைந்து போன ஒரு ஆட்டைத் தேடிக்
கண்டுபிடித்த நல்ல மேய்ப்பனாய், மனந்திருந்தி வந்த
இளயமைந்தனைக் கண்டு பரவசமடைந்த பாசமிகு தந்தையாய்
நின்று பரமன் இயேசு பரவசப்பட்டுக் கொண்டிருக்கும் அதே
வேளையில், வாயில் கவர்ந்து வைத்திருந்த சிறிய கோழிக்குஞ்சை
'தவற விட்டு விட்டு மீண்டும் பிடிக்க பிரயாசப்படும் பொல்லாத
பருந்தாக, குட்டிகளை பறிகொடுத்து பேயாக அலையும் கரடியாக
மீண்டும் நம்மை பிடித்துக்கொள்ள, தான் கற்ற வித்தையெல்லாம்
காட்டுவான்' சாத்தான்.
–யுத்தம் இங்கேதான் ஆரம்பமாகிறது சகோதரனே!
1கொரிந்தியர் 7.17ல் சொல்லப்பட்டபடி
'தேவன் அவனவனுக்கு பகிர்ந்ததெப்படியோ.., கர்த்தர்
அவனவனை அழைத்ததெப்படியோ... அப்படியே
அவனவன் நடக்கக்கடவன்'...

தேவன் நம்மை அழைத்தபடியே நமக்கு பகிர்ந்தளித்தபடியே நமது வாய்ப்பு வசதிகளை தேவன் நம்மிடம் கொடுத்த தாலந்துகளை அவருக்காகவே பயன்படுத்துவதில் உற்சாக மடைவோம். அவரவருக்கு அவரவர் மேற்கொள்ள வேண்டிய போராட்டங்கள் இருக்கிறது. நமது சொந்தவாழ்விலே பாவத்துக்கும் பாவத்தின் காரணிகளுக்கும் விரோதமாக நாம் போராடுவதுபோல் ஊழியத்திலே உற்சாகமாக ஈடுபடும் போது பலவித போராட்டங்கள் நம்மை செயல்படாமற் செய்வதற் காகவும் நாம் தேர்ந்து பெலப்படவுமாக வந்து மோதுகின்றன.

ஊழியப்பாதையில் உற்சாகமாக அடியெடுத்து வைக்கும் அநேகர் தொடர்ந்து வரும் சோர்வுகள், பலவீனங்களில் நின்று நிலைத்துப் போரிடாமல், போரிட பெலமில்லாமல்– இது தேவதிட்டமல்ல என சிலவேளை தவறாக முடிவுகட்டி தங்களுக்கு சௌகரியமான ஊழியபாதைகளை சுகமாய் தெரிந்துகொண்டதால்..... ஊர் பேர் தெரியாமல் நடு வீதியிலிருக்கும் சின்ன குழந்தையாய், போகும் இடம் தெரியாமல் இன்னும் உட்கார்ந்தேயிருக்கின்றனர்.

நாம் இரட்சிப்பை பெற்றுக் கொண்டதினிமித்தம்– மிகவும் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கும் சாத்தான்..... எப்படியாவது நம்மை மாம்சீகத்திலே வீழ்த்த எண்ணித் தோற்றுப்போய், ஆண்டவருக்காக நாம் உற்சாகமாய் உழைப்பதை தடுத்திட, அவன் காட்டுகின்ற எல்லாத் தந்திர வேலைகளையும் நாம் தேவ ஆவியினால் பகுத்தறிந்து அடையாளம் கண்டேயாக வேண்டும். போராட்டமேயில்லையென்றால் ஊழியமில்லை. போராட்டமில்லை யென்றால்– ஒன்று நாம் எதிரியாகிய சாத்தானோடு சம்மந்தங் கலந்துவிட்டோம், சமாதானமாகிவிட்டோம் அல்லது தோற்றுப் போய் குளிர்ந்த நிலையிலிருக்கிறோம் என்பதில் எந்த வித சந்தேகமுமில்லை.

இதுபோன்றதொரு பரிதாபமானச் சூழ்நிலையைத்தான் ஆவியானவர் லவோதிக்கேயாச் சபையாரைப் பார்த்து மிகக்கடுமையாக எச்சரிக்கிறார்.

'உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன் –நீ குளிருமல்ல அனலுமல்ல, நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும்,' 'இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பா யிருக்கிற படியினால் உன்னை என் வாயினின்று வாந்திப் பண்ணிப் போடுவேன் என்கிறார்.' வெளிப்படுத்துதல் 3:15:16

குளிருமற்ற அனலுமற்ற வெதுவெதுப்பானச் சூழல்– இன்று அநேகருக்கு சுகமான சூழ்நிலையாகத் தோன்றலாம். ஆனால் வெதுவெதுப்பான சூழல் என்பது மிகவும் ஆபத்தானது மட்டுமல்ல, வாந்தி பண்ணி போடுவேன் என்ற ஆவியானவரின் எச்சரிப்பை மறவாதிருப்போம். நாம் எந்த சூழ்நிலையில் இருக்கிறோம் எங்கே இருக்கிறோம்! என்பதை மிக நன்றாக சிந்தித்தே சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

இன்னும் மிக நீண்ட நாட்களாய்......
கேரீத் ஆற்றங்கரையிலே சுகமாய்...... பாதுகாப்பாய்....... ஒழிந்து கொண்டேயிருப்போர் எத்தனைபேர்? தண்ணீரெல்லாம் வற்றிப் போனப்பிறகும்...... இன்னும் அப்பமும் இறைச்சியும் வருமென்று– வானத்தை அண்ணாந்து பார்த்து காகத்திற்காக காத்திருப்போர் எத்தனை பேர்?

பானையில் மாவும், கலசத்தில் எண்ணெயும் குறைவேயில்லை யென்று? பழைய கதையை பாடிப்பாடியே..... இன்னும் சாரிபாத் விதவையின் வீட்டிலேயே தங்கி தங்கி தாபரித்து தங்கள் எண்ணெயாகிய தேவஆவியை இழந்து நிற்போர் இல்லையோ?

'நீ பண்ணவேண்டிய பிரயாணம் வெகுதூரம்' என்ற தேவ சத்தத்தை திரும்ப திரும்பக் கேட்டும், சூரைச்செடியின் கீழே படுத்துச் சுகமாய் நித்திரை பண்ணிக்கொண்டிருக்கும் நம் சகோதரர்கள் எத்தனைபேர்? வேதனை! ராஜரீக அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்ட அநேக அண்ணன்மார், குறிசொல்லுபவளின் (சரியற்ற தீர்க்கத்தரிசிகளும் தான்) வீட்டிலேச் சென்று, காத்திருப்பது வேதனை.

எழுந்து புறப்படுவோம்

எழுந்து புறப்படுவோம்! கேரீத் ஆற்றங்கரையிலிருந்து...
போதும்! சாறிபாத் விதவையின் வீடும், சூரைச்செடியும்....
'நாம் செல்ல வேண்டிய பிரயாணம் வெகுதூரம்' என்ற
தேவ சத்தத்திற்கு பணிந்து கீழ்ப்படிவோம்.
நாம் பெற்ற விலையேறப்பெற்ற இரட்சிப்பின் நோக்கமென்ன?
எதற்காக அன்பு கூறப்பட்டோம்? இவ்வளவாய் எதற்காக
ஆசீர்வதிக்கப்பட்டோம்? அபிஷேகம் என்ற அறிய பொக்கிஷம்
நமக்கு– கிருபையாய் அருளப்பட்டிருக்கிறது என்றால்! ஏன்?
வீட்டுவேலைகளெல்லாம் விரைவாக கவனிப்பதற்காகவா?
அலுவலக வேலை அநேகமிருப்பதாலேயோ? அல்லது
ஊரார், சபையாரிடமிருந்து நமது சண்டைச்
சச்சரவுகளிலிருந்து ஜெயங் கொள்ளுவதற்காகவா?

சவுல் ராஜாவாக அபிஷேகிக்கப்பட்டதற்கு ஒரு நோக்கமுண்டு
ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த– தாவீது
அபிஷேகிக்கப்பட்டதற்கு ஒரு பெரிய தேவ திட்டமிருந்தது!
எஸ்தர் என்ற அடிமைப் பெண்ணுக்குக் கிடைத்த
இராஜரீக அபிஷேகத்திற்கு –தான் ராணியாக இருந்தாலும்
தன் உயிரையே ஓர் நாள் யூத ஜனங்களுக்காக
பணயம் வைக்கவேண்டிய உன்னத நோக்கமிருந்தது.
ஆகாபின் சந்ததியை வேரறுக்க அபிஷேகிக்கப்பட்ட
யெகூவால் எப்படி அனலுமின்றி குளிருமின்றி
சுயநலப் போர்வைக்குள்ளே சுகமாய் படுத்துக்கொள்ளமுடியும்.
தாகமுள்ள யாவருக்கும் ஜீவத்தண்ணீரை இலவசமாகத்
தருகின்ற தயவுபெருத்த நேசராம் இயேசு
'மாம்சமானயாவர் மீதும் என் ஆவியை ஊற்றுவேன்' என்று
வாக்குபண்ணிண வல்லமையின் தேவ ஆவியானவர்
உன்னையும் என்னையும் தேவ ஆவியினால்
அபிஷேகித்ததின் நோக்கமென்ன? எழுந்து புறப்படுவோம்.....
சிங்கக்கெபியோ.... அக்கனிச்சூளையோ துணிந்து முன்னேறுவோம்.

3-4
சிங்கக்கெபியும் அக்கினிச்சூளையும் இல்லையேல்...

அபிஷேகம் பெற்றவர்கள், தங்கள் வாழ்க்கையில்
பாடுகளேயில்லாத பரலோக வாழ்வு வந்துவிட்டதாகவும்
மாலை மரியாதை பேர் புகழெல்லாம்
நாம் வெறுப்பவர்களாக இருந்தாலும்– அவைத்தானாய்
வந்து ஒட்டிக்கொள்ளும் – என்று விசுவாசித்து
இனி என்றென்றும் ஆனந்தமே– என்று பாடிக்கொண்டே
பரவசப்பட்டு– எந்த பிரயோஜனமுமின்றி வாழலாம்.
இனி சோதனைகள் வராது, அவற்றை சகிக்க
வேண்டிய தேவையுமில்லை. உலகத்திலேயே உயர்வான
உன்னத நிலை கிருபையாய் நமக்கு கிடைத்திருக்கிறது.
பாலும் தேனும் ஒடுகின்ற கானானுக்கு வந்தபிறகு
நமக்கென்ன கவலை... என்றெல்லாம் எண்ணிக்கொண்டு
அனுதின சிலுவைகளைச் சுமக்காமல்– சுகபோகமாய்
வாழ்ந்ததால் அனலுமின்றி குளிருமின்றி
வெதுவெதுப்பாய் போனவர்கள்– தேவ ஆவியானவரால்
வாந்திபண்ணி போடப்பட்டதால்– இருந்த
தங்கள் ஆவிக்குரிய கண்களையும் இழந்து
பெலிஸ்தியரின் பொல்லாச் சிறையிலே மாவரைத்துக்
கொண்டிருப்போர் எத்தனைபேர்?
ஏதோ பட்டம் பெற்ற நாளை நினைவில் வைப்பது போல்
அபிஷேகம் பெற்ற நாளைச் சொல்லித் திரிவதால்
என்ன பயன்? தான் அபிஷேகம் பெற்றிருக்கிறேன்
என்பதற்க்கு அடையாளமாக– வெறும் அன்னியபாஷைகளை
மட்டுமே பேசிக்கொண்டு– ஆவியின் கனிகளோடு
நற்கிரியைகளைச் செய்வது மூலம் கிறிஸ்துவின்
நற்சாட்சியாகவும் வாழவில்லையென்றால், என்ன பயன்?
இனி நாம் அபிஷேகம் பெற்றவர்களாக சவுலைப் போலிராமல்
அபிஷேகத்தோடேயிருந்த தாவீதைப் போல்......

நம்மை நாமே நேர்படுத்தி, திடபடுத்திக்கொண்டு
நம் அபிஷேகத்தை அனல் மூட்டி எழுப்பி
இதிலும் மேலானவைகளைக் காண்போம்! அல்லேலூயா!

'மனுஷருக்கு வருகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ள வரா யிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப் படுகிறதற்கு அவர் இடங்கொடாமல் சோதனையை தாங்குவதற்காக அதற்கு தப்பிக்கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார்.'
1.கொரிந் :10.13

ஆமாம், சோதனைகள் வராமலிருப்பது கூடாத காரியம். சாதாரண மனிதனுக்கு நேரிடும் சோதனைகள் தான் நமக்கும் நேரிடுகின்றன. நமது தாங்கும் சக்திக்கு மேலாக சோதிக்கப்பட அவர் இடங் கொடுப்பதேயில்லை. அவற்றை தாங்கவும், அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் வழிகளையும் உண்டாக்குகிற தேவன் நமது தேவன்.

சிங்கங்களின் வாயைக்கட்டிய தேவன்

ராஜகுலத்தைச்சேர்ந்த தானியேல், நேபுகாத் நேச்சரால் சிறையாக பாபிலோனுக்கு கொண்டுசெல்லப்பட்ட ஓர் யூதன். ஞானத்திலும் அறிவிலும் விஷேசித்தவனாயிருந்தான். தரிசனங்களைக் கண்டு சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்லும் வரமும் அவனிடமிருந்தது. தேவன் அவனோடிருந்தபடியால் அவன் தேசத்தின் அதிபதிகளில் ஒருவனாக உயர்த்தப்பட்டான்.

தானியேலுக்குள் விசேஷித்த ஆவியிருந்தது என வேதம் சொல்கிறது. ஆனால் தானியேலின் வாழ்க்கையில் தான் செத்துச் சின்னா பின்னமாகிப் போகிறது போன்ற சிங்கக்கெபியில் தூக்கி எரிகிற –அந்தகொடூரமான சோதனை வராவிட்டால்.... தானியேலை மேன்மைப்படுத்த தேவன் வைத்திருந்த அந்த மேலான திட்டத்தில் என்ன சுவாரஸ்யம் இருந்திருக்கும்.

தானியேலை மேலும் மேலும் மேன்மைப்படுத்தவே தேவன் சிங்கக்கெபியில் தூக்கியெரிய அனுமதி கொடுத்தார். நேபுகாத் நேச்சாரே முகங்குப்புற விழுந்து வணங்கிய அதேத் தானியேலுக்கு – சிங்கக்கெபியிலே ஆபத்தான நிலைமை வந்தபோதும்– தானியேல் தேவாதி தேவனை மறுதலிக்கவோ அல்லது தேவனை ஆராதிக்கிறதிலிருந்து பின் வாங்கவோ..... இல்லை சோதனைகளை சகித்தான். இன்னும் பாக்கியவனாயிருக்கிறான்.

சிங்கெபிக்குள்ளே போடப்பட்ட தானியேலிடம் தரியு ராஜா கேட்கிறான்,
'தானியேலே நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னை சிங்கங்களுக்கு தப்புவிக்க வல்லவராயிருந்தாரா?
என்ற கேள்விக்குத் தானியேல்–
'சிங்கங்கள் என்னை சேதப்படுத்தாத படிக்கு தேவன் தம்முடைய தூதனை அனுப்பி சிங்கங்களின் வாயைக் கட்டிப்போட்டார்' என்றான். தானியேல்: **6:22**

ஆனால் தானியேலை குற்றஞ்சாட்டி, அவனை சிங்கக் கெபியிலே போட்டு கொல்ல நினைத்தவர்களையோ...!
ராஜா அவர்களையும், அவர்கள் குமாரர்கள், மனைவிகள் அனைவரையும் கொண்டு வந்து,
சிங்கக்கெபியிலே போட்டு கொன்றான்.
மட்டுமல்லாது, தனது ராஜ்யத்தின் சகல ஜனங்களும் 'தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கி பயப்பட வேண்டுமென்றும், அவர் ஜீவனுள்ள தேவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர், அவருடைய ராஜ்யம் அழியாதது....' தானியேல்: **6:26** என்று 'ராஜ்யத்தின் மக்கள் தேவனுக்கு நடுங்கி பயப்பட வேண்டுமென' தரியு ராஜாவே மக்களுக்கு புதிய தீர்மானத்தை அறிவிக்கிறான்

தானியேலின் வாழ்க்கையிலே ஓர் பயங்கரமான
சிங்கக்கெபி வராதிருந்தால்.....
தேசம் அசைக்கப்பட்டிருக்குமா? பின்மாறிச் சென்றவர்கள்
தேவாதி தேவனின் மகிமையைக் கண்டிருப்பார்களா?
அந்த தேசத்திலே எழுப்புதல் தான் வந்திருக்குமா?
சோதனைகள் வந்து விடுமோ? என அடங்கிவிடாமல்
சோதனைகளை சாதனைகளாக்கி சரித்திரம் படைப்பதற்காய்-
தன் அயலான் முதற்கொண்டு, அயல்வீட்டுக்காரன்,
அண்டை நாட்டுக்காரன் என்ன? எவருக்கும்
சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும்- சுவிஷேசத்தை
இயேசுவே இரட்சகர் என்று முரசுகொட்டி பிரசிங்கிப்போம்.

கர்த்தரின் தயவுள்ள சித்தத்தின் படி அவரது ஆத்தும தாகத்தைத்
தீர்ப்பதற்க்காக- நாம் விசுவாசப் போராட்டத்தில்
உறுதியாக முன்னிருக்கும் போது-
வரும் அற்ப சோதனைகளுக்குள் பொதிந்திருக்கும் பொக்கிஷங்கள்
தேவன் நமக்காகவே திட்டம் பண்ணியிருப்பவை
என்பதில் சந்தேகமில்லை.
பேர் பெற்ற பாபிலோன் பட்டணத்திலே -ஆயிரமாய்
கூடிவந்த ஞானிகளும், ஜோஸ்யரும், ஆராட்சியாளரும்,
சாஸ்த்திரிகளும், குறிசொல்லுவோரும் இருந்த போதிலும்,
எவரும் சொப்பணம் கண்டு கதிகலங்கித் தவிக்கிற மன்னன்
நேபுகாத் நேச்சாருக்கு சொப்பனவிளக்கம் சொல்ல முடியாததால்....
மீளாக்கலக்கத்தில் இருந்த ராஜாவுக்கு-
தானியேலின் விளக்கம் தேவ செய்தியாயிருந்தது.
மன்னன் முகங்குப்பற விழுந்து தானியேலைப் பணிந்ததோடு
'மெய்யாய்...... உங்கள் தேவனே தேவர்களுக்குத் தேவன்,
ராஜாக்களுக்கு ஆண்டவரும், மறைபொருள்களை
வெளிப் படுத்துகிறவருமாய் இருக்கிறார்....... என்றான்.
தானியேல் :2:47
தானியேலின் வைராக்கியம் ராஜாக்களின் இடைக்கட்டுக்களை அவிழ்த்தது.
தேசத்தை அசைத்தது.

தேவன் எங்களை விடுவிக்காமற் போனாலும்........

தேவாதி தேவனை அவன் தேசம் எங்கிலும் அறிக்கை செய்த
மன்னன் நேபுகாத் நேச்சாருக்கு–
அற்புதங்களைக் கண்டு, பணிந்து, விசுவாசித்தும்
பின்மாறிப்போகிற ஒரு பரிதாப நிலைமை வருகிறது.
அந்தப் பரிதாப நிலைமை– அவனை ஓர்
அறுபது முழ உயரமான பொற்சிலையை பண்ணுவித்து,
தேசத்து ஜனங்கள் அச்சிலையைத் தாழ விழுந்து
வணங்காவிட்டால், அவர்கள் எரிகிற
அக்னிச் சூளையிலே போடப்படுவார்கள்' என்று
அரசு உத்தரவு போடச்செய்கிறது.

நடந்தது என்ன?
குறிப்பிட்ட காலத்திலே அனைவரும் வந்து அந்தச்சிலையை சாஸ்டாங்கமாக
விழுந்து வணங்கினார்கள்.
ஆனால்– ராஜ அரண்மனையிலே பிரதானிகளாய்
கௌரவமாய் சொகுசாய் வாழ்ந்து வந்த மூன்று வாலிபர்கள் மட்டும்
சிலையை பணிந்து கொள்ளவில்லையென்ற செய்தி–
மன்னன் நேபுகாத்நேச்சாருக்கு மகா கோபமூட்டியது.

அவர்களை கொண்டு வாருங்கள்' என்ற
அரசு உத்தரவுபடி வந்து நிற்கின்றார்கள்.
சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ
மகா உக்கிரத்தோடு மன்னன் கெர்ச்சிக்கிறான்,
'நான் நிறுத்தியிருக்கிற இந்தப் பொற்சிலையை– நீங்கள்
தாள விழுந்து வணங்காது போனால் – இதோ முன்பு விட
ஏழு மடங்கு அதிகமாய் எரிகிற அக்னிச்சூளையில்
போடப்படுவீர்கள்' என்றான்.

தங்களை எரிப்பதற்காக ஏழுமடங்கு சூடாக்கப்பட்ட அக்னிச்சூளை ஒருபுறம் எரிகின்றது.
இன்னொருபுறம்– தாங்கள் அனுபவிக்கிற சுகமான ராஜபிரதானி பதவி, சுகபோக வாழ்வு, மக்கள் மரியாதை இன்னும் பிற சிறப்புகள், மேன்மைகள்– இவற்றையெல்லாம் கடுகளவும் கண்டுகொள்ளாத அந்த வாலிபர்கள் மன்னன் நேபுகாத் நேச்சருக்கு பிரதியுத்ரமாக
'...இந்த காரியத்தைக்குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை.....'
'நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். அவர் எரிகிற அக்னி சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும், நீங்கலாக்கி விடுவிப்பார், விடுவிக்காமல் போனாலும் நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்வதுமில்லை.'

தானியேல்:3:16:17:18

என்ற மூன்று வாலிபரின் வார்த்தைகளைக் கேட்ட ராஜா கோபமடைந்து –இராணுவத்தில் பெலசாலிகளை அழைத்து– அம்மூவரையும் கட்டி அக்னியிலே எரிந்துவிட உத்தரவிட்டான். அஞ்சாநெஞ்சம் கொண்ட தேவதாசர்களை அக்னியிலே அள்ளிப்போட்டதும்– ராஜா பிரமித்துக் கலங்கினான். ஏன்? அக்னியிலே தூக்கிப் போட்ட பெலசாலிகள் எரிந்து சாம்பலான போதிலும்–
நெருப்புக்குள்ளே வீசப்பட்ட மூன்று வாலிபரோடு தேவபுத்திரனுக்கொப்பாய் ஒருவருமாக–
எரிகிற அக்னியிலே விடுதலையாக நான்கு பேர் உலாவுகின்றார்களே, என்று கண்ட நேபுகாத் நேச்சார் பிரமித்து நின்றான் நடுங்கி. உடன் தானே தேவ சமூகத்தில் சரணடைந்து, சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களே! 'உங்கள் தேவனுக்கு ஸ்தோத்திரம்' என்ற மன்னன் தேசத்து ஜனங்களை–

தேவாதி தேவனுக்கு கீழ்படியுங்கள் என்றும்
இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை
யென்றும் தேசம் முழுவதும் அறிவித்தான்.

இங்கே! இந்த வாலிபர்கள் தங்கள் சரீரங்களை
அக்னிசூளையிலே போட்டுச் சுடுவதற்கும்
ஒப்புக்கொடுத்தபடியால் அன்றோ–
பாபிலோன் பட்டணமே குலுங்கத் தக்கதாக ஒரு
இரட்சிப்பின் செய்தி கேட்டது.

இராஜசபை பிரதானிகளேடு பிராதானிகளாக அரசாங்க
உத்தரவு என்று அதற்கும் கீழ்படிந்து
அரசபதவி, மேன்மைகளை மட்டுமே காப்பாற்றியிருந்தால் இவர்கள்
வாழ்க்கையில் என்ன அர்த்தம் இருந்திருக்கும்?
உடல் பொருள் மேன்மையோடு..... ஜீவனையும் பாராது அபிஷேகமாகிய
அக்னிக்குள் பிரவேசிக்கும் போது மட்டுமே உங்களோடு உன்னதரும்
உலாவுவதை
உலகமே கண்டுவியக்கும்.

ஆமாம் சகோதரா, சகோதரி....
ஆண்டவருக்காக வைராக்கியம் பாராட்டுகிற– அவரது
சித்தங்களை நிறைவேற்ற துடிக்கிற உனக்கு முன்னே
வருகிற அக்னிச்சூளை போன்ற சோதனைக்குள்ளேயிருக்கிற–
பரலோக ராஜா உனக்காக வாக்கு பண்ணியிருக்கும்
அறியனையைப் பார்! ஐயோ என் வாழ்க்கையில்
சிங்கக்கெபி போன்ற சோதனை என்று சோர்ந்து விடாதே!

நீ கடக்கவிருக்கும் சிங்கக்கெபிக்கு பின்னால்
உனக்காகதேவாதி தேவன் வைத்திருக்கும் சிங்காசனத்தைப் பார்.
ஆபத்து காலத்தில் கர்த்தரே உனக்காக யுத்தம் செய்வார்
சிங்கக்கெபியிலும் அக்னிசூளையிலும்– நீ
சோர்ந்து போகாதிருந்தால்– உனக்காகத்தான்
ஜீவகிரீடமும்– சிம்மாசனமும்! ஆமென்.

3-5
கர்த்தரே யுத்தம் செய்கிறவர்.

'கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார் நீங்கள் சும்மாயிருப்பீர்கள்' என்றான். யாத்:14:14.

அநேக வாதைகளாலும், கொள்ளை நோய்களாலும் வாதிக்கப் பட்ட பின்னரும் மோசே மூலமாக சொல்லப்பட்ட தேவ விருப்பத்திற்கு கீழ்படியாத பார்வோன் மன்னன் 'எகிப்திய தலைப்பிள்ளைகள் சங்காரம்' வரை தேவ கோபம் தொடந்த படியால், பயந்து மோசேயின் வார்த்தைகளைக் கேட்டு இஸ்ரவேல் ஜனங்களை விடுதலைக் கொடுத்து அனுப்புகிறான்.

அடிமைப்பட்டுக் கிடந்த தேவ ஜனங்கள் வனாந்திர மார்க்கமாய் கடந்து செல்லும் போது– மீண்டும் பார்வோன் மன்னனின் மனம் கடினப்பட்டு இஸ்ரவேலரை பிடிக்க பின்தொடருகின்றான். மன்னனோடு பலசாலிகளான யுத்த வீரர்களும், இராணுவத்தில் பிரதானமான அறுநூற்றுக்கும் மேற்பட்ட இரதங்களோடும், குதிரைகளோடு குதிரை வீரரும், எல்லா சேனைகளுமாக... எகிப்திய படை அணிவகுத்து வருவதைக் கண்ட– இஸ்ரவேல் ஜனங்கள் கதிகலங்கினார்கள். இனி நம்மை யாராலும் காப்பாற்ற முடியாது என்று கதிகலங்கி நடுங்கி பயந்து மோசேயைப்பார்த்து– '....எகிப்திலே பிரேதகுழிகள் இல்லையென்றா வனாந்தரத்திலே சாகும் படிக்கு எங்களைக் கொண்டுவந்தீர்?'........ யாத்தி:14:11

'நாங்கள் இங்கே வனாந்தரத்திலே சாவதைவிட எகிப்திலே அடிமைகளாகவே வாழ்ந்திருப்போமேயென்று'
விசுவாசம், பொறுமை, எதுவுமில்லாது ஜனங்கள், தங்களை வழிநடத்தி வந்த மோசேயைப் பார்த்து கூக்குரலிட்டார்கள்.

மூன்று பக்கமும் பார்வோனின் சேனைகளால் சூழப்பட்டு மறுபக்கம் சிவந்த சமுத்திரத்தால் வழி மறிக்கப்பட்டிருந்த மிகவும் ஆபத்தான சூழலிலே மோசே ஜனங்களைப் பார்த்து,

'.....பயப்படாதிருங்கள், நீங்கள் நின்று கொண்டு இன்றைக்கு கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள், கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார், நீங்கள் சும்மாயிருப்பீர்கள்' என்றான். யாத்தி :14:13:14

அதுபோலவே கர்த்தரே பார்வோனுக்கு விரோதமாக யுத்தம் செய்ததால் செங்கடலை இரண்டாக பிளந்து வெட்டாந்தரையைக் கடப்பது போல் ஜனங்கள் செங்கடலைக் கடந்து தப்பித்துச் சென்றனர். அதுபோலவே செங்கடலை கடக்க முயன்ற பார்வோனின் எகிப்திய ராணுவம் முழுவதும் குதிரைகளோடு குதிரைவீரரும், முழுராணுவத்தின் ரதங்களையும் தேவாதி தேவன் செங்கடலிலே மூழ்கி மடியச் செய்தார்.

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட தேவபிள்ளைகளின் வாழ்வில் யுத்தங்கள் வராமலிருப்பது கூடாத காரியம்தான். நமக்கு எதிராக பட்டயத்தை உறுவும் எதிரிகள் உண்டு. இரதங்களும் குதிரை வீரருமாய் எதிரி சேனைகள் நம்மை சூழ்ந்து கொள்ளும் நேரங்கள் வரும். சிங்கம் போலச் சீறி மகா சேனையாய் சத்துருக்கள் நொடிப் பொழுதில் பாய்ந்து வரும் சூழ்நிலை வரலாம். தப்பிச் செல்ல வழியேயில்லாத சிவந்த சமுத்திரமாய்.... அறுப்புகாலத்தில் கரைபுரண்டோடும் யோர்தான் நதி போன்றச் சோதனைகள் நம்மைச் சூழ்ந்து வரலாம்.

ஆனால் அவற்றை மேற்கொள்வதோ நம்மால் மாத்திரம் முடியாது. ஆனால் தேவனாலே எல்லாம் கூடும் என விசுவாசத்திலே தரித்து நின்றால்! யுத்தத்திலே வல்லவரான தேவனாகிய கர்த்தர் நமக்காக யுத்தம் செய்வார்.

தேவபிள்ளைகள் மேல் வந்த எண்ணற்ற சோதனைகள், சோர்வுகள், போராட்டங்களில் தங்களுக்காக, கர்த்தரே யுத்தம் செய்த வரலாற்றுச் சாட்சிகளையும் இன்னும் மேகம் போன்ற திரளான சாட்சிகளையும் கண்டு, கேட்டு, அனுபவித்திருக்கிறோம்.

அநேகவேளைகளில் நாம் நம்மை நோக்கி வருகிற பிரச்சனைகள், சங்கடங்கள், வீண்பழிகள், கடன் பாரங்கள், போன்ற இக்கட்டுகளிலிருந்து விடுபட நாமாக பல்வேறு முயற்சிகள் எடுக்கிறோம். பலவேளைகளில் அவற்றை மேற்கொள்ள முடியாமல் திண்டாடுகிறோம். அநேக ஆவிக்குரிய பிள்ளைகள் இதுபோன்ற சூழ்நிலைகளில் தோல்வியுறுவதோடு, தங்களது ஆவிக்குரிய வாழ்விலும் மேலும் பின் தங்கி சோர்வுருவதைக் காணலாம்.

ஏன் இந்தப் பேராட்டம்? ஏன் இந்த சோதனை ? என் தங்களது ஆவிக்குரிய கண்களால் பிரச்சனைகளைப் பாராமல், பல வேளைகளில் தங்களது மாம்சீக பெலத்தோடு நாம் பிரச்சனைகளை அணுகும் போது அவற்றை மேற்கொள்ள முடியாமல் போகிறது. இதுபோன்ற அனுபவத்திலிருக்கும் அன்பர்களிடம் கேட்டால்.

‘என் வாழ்வில் எத்தனையோ இதைவிட பெரிய பிரச்சனைகளில் தேவ அனுகிரகத்தால் வெற்றிபெற்றேன். ஆனால் இந்த சிறிய பிரச்சனையை என்னால் சமாளிக்க முடியவில்லை’ என்பார்கள்.

ஏன் இப்போது மாத்திரம் முடியவில்லை? இதற்கு முன்பும் இப்போதும் வருகின்ற சோதனைகளில் கஷ்டங்களிலும் நாம் யாரிடம் சொல்லி முறையிட்டோம்? யாரை நமது துணைக்கு அழைத்தோம்? யாரை நம்பினோம்? என்பதை நிதானமாக சிந்தித்தே ஆகவேண்டும். முன்பு பலமுறை வெற்றி பெற்ற நாம் இப்போது நம்மை நாமே நம்பி விட்டோமா? அல்லது நம் சுய மாம்சீக காரணிகளான உற்றார், உறவினர், பணம், பொருள், அதிகாரம், ஆகியவற்றை நம்பிக்கொண்டு – நம்மோடு இருந்து–
நம்மை தாங்கி தப்புவித்து ஏந்தி சுமக்கிற தேவாதி தேவனை மறந்தோமா?
அல்லது முன்பு இருந்த அபிஷேகம் தேவ பிரசன்னம்
நம் வாழ்வில் குறைந்துகொண்டே வருகிறதா?
நாம் அனுமதித்தால் கர்த்தரே யுத்தம் செய்வார்.
வெற்றியை நமக்கேச் சுதந்திரமாக்குவார்.

கதிகலங்கிய சவுலும் கொதித்தெழுந்த தாவீதும்

அபிஷேகம் பெற்றவனான சவுல் தேவ சித்தத்திற்கு
விலகிப்போன படியால்– முன்பு போல் வெற்றி பெற முடியாமல்
எதிரிகளை கண்டு அஞ்சுகிறவனாக காணப்பட்டான்.
பெலிஸ்த்திய வீரனான கோலியாத்தை கண்டதும்
சவுலின் முழு இராணுவமே அஞ்சி நடுங்கியது.
இதுபோன்ற இக்கட்டான சூழ்நிலையைக் கண்டபின்னும்– தகப்பனின்
கழுதைகளை தேடித்திரிந்த– தன்னை
'இஸ்ரவேலின் ராஜாவாக்கி வெற்றி சிறக்கச் செய்த'
தேவாதி தேவனைத் தோடாமல், பின்னாட்களில்
சூனியக்காரியைத் தேடிச்சென்று, சீர்கெட்டு
தானும் தன் குமாரருமாக ஒரு முறை பெலிஸ்தியரோடு
நடந்த யுத்தத்தில் செத்து மடிகின்றனர்.

இஸ்ரவேலின் இராஜாவாகிய சவுலின்
மொத்த இராணுவத்தாலும் மடங்கடிக்க முடியாத கோலியாத்தை யுத்தத்தில்
சகோதரர்களின் நலம் விசாரிக்க வந்த
ஆடுமேய்க்கிற இளைஞனான தாவீது,
தேவ ஆவியின் அபிஷேகத்தோடு இருந்ததால்–
கோலியாத் தேவஜனங்களை, தேவனை நிந்தித்து தூஷித்ததைப்
பொறுக்கக்கூடாமல், கொதித்தெழுந்து–
குளிர்ந்து போன சவுலின் படைகளுக்கு முன்னே சென்று மகாவீரனான
கோலியாத்தை– வெறும் கவுண் கற்களால்
கொன்று தீர்த்து– இஸ்ரவேல் ஜனங்களால்
சவுல் கொன்றது 1000, தாவீது கொன்றது பதினாயிரம் என்று
முறை முறையாய் பாடும் படியாக– சரித்திர புகழ் வாய்ந்த வெற்றியை
பெற்றான் தாவீது,

நாம் கர்த்தரோடிருந்தால்.. அவர் நம்மோடிருப்பார்

2 நாளாகமம்:15:1,2ல் ஓதேதின் குமாரனாகிய அசரியா மேல்
தேவ ஆவி இறங்கினதால், அவன் ஆசா ராஜாவுக்கு எதிர் கொண்டு போய், அவனை நோக்கி ஆசாவே! யூதா, பென்யமீன் கோத்திரத்தின் சகல மனுஷரே கேளுங்கள்.

'நீங்கள் கர்த்தரோடிருந்தால் அவர் உங்களோடிருப்பார். நீங்கள் அவரைத் தேடினால்... உங்களுக்கு வெளிப்படுவார். அவரை விட்டீர்களாகில், அவர் உங்களை விட்டு விடுவார்'

என்று ஆசா ராஜாவை எச்சரிக்கிறார் தீர்க்கதரிசி.

காரணம், ஆசா ராஜாவுக்கு எதிராக முன்பு ஒரு முறை எத்தியோப்பியனாகிய சேரா, முன்னூறு ரதங்களோடும் பத்து இலட்சம் சேனையோடும் போரிட வந்து பயமுறுத்திய போது மிகுந்த அச்சம் கொண்ட ஆசா கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு

'கர்த்தாவே பலமுள்ளவனுக்காகிலும், பலனற்றவனுக்காகிலும் உதவி செய்கிறது உமக்கு லேசான காரியம். எங்கள் தேவனாகிய கர்த்தாவே எங்களுக்கு துணை நில்லும்.' 2நாளாகமம்: 14:11

என்று ஆசா ராஜா வேண்டிக்கொண்டபோது – கர்த்தர் அந்த எத்தியோப்பியரை ஆசாவுக்கு முன்பாக முறியடித்தார். எத்தியோப்பியர் உயிர் தப்பி ஓடிப்போனார்கள். இந்த மாபெரும் வெற்றிக்கு பிறகு ஒரு முறை இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா தனக்கு விரோதமாக வந்த போது– இதே ஆசா கர்த்தரோடு செய்த உடன்படிக்கையை மறந்து கர்த்தரைத் தேடாமல் ஆலயத்திலும், அரமனையிலும் இருந்த பொக்கிஷங்களை சீரியா இராஜாவாகிய பெனாதாத் ராஜாவுக்கு காணிக்கையாக கொடுத்து அவனை உதவிக்கு அழைக்கின்றான். தேவனோடிருந்து பெற்ற வெற்றியின் செழிப்பினாலே தேவனையே மறந்தான் ஆசா ராஜா.

தேவாதி தேவனை மறந்து, முதலில் அவரே யுத்தம் செய்து கொடுத்த அதிசய வெற்றிகளை நினைத்து ஆபத்தில் அவரையே நோக்காமல் மனிதனாகிய பெனாதாத் ராஜாவை விக்கிரகமாக

நம்பிச் சென்ற ஆசா ராஜாவுக்கு ஞானதிருஷ்டிக்காரனாகிய அனானி மூலமாக கிடைத்து தேவ எச்சரிப்பு: ஆசா ராஜாவே! '... இந்த விஷயத்தில் மதியில்லாதவராயிருந்தீர், ஆகையால் இதுமுதல் யுத்தங்கள் நேரிடும்,' என்றான். 2 நாளாகமம்: 16.9P

இது போன்ற சூழ்நிலைகள் வருமென்பதற்காகவே தேவன் முன்பே ஆசா ராஜாவை, அசரியா தீர்க்கதரிசி மூலமாக எச்சரித்ததை நாம் நினைவில் கொள்ளுவோம். 'நீங்கள் கர்த்தரோடிருந்தால் அவர் உங்களோடிருப்பார்,
நீங்கள்....... அவரை விட்டீர்களாகில் அவர் உங்களை
விட்டு விடுவார்.' 2 நாளாகமம்: 15:1,2

யுத்தங்களில்லாமல் ஜெயமில்லை, கர்த்தரே யுத்தம் செய்கிறவர்.
எந்த சூழ்நிலைகளிலும், வருகிற எல்லா சோதனைகளிலும்
நமது வாழ்க்கையில் நாம் கர்த்தரையே சார்ந்திருப்போம்.
ஆசா ராஜாவை போன்று முதலில் பெற்ற
ஆசீர்வாதங்களை மறந்து – வாய்ப்பு வசதிகள் பெருகிய பின்

தேவனை மறந்து பிற மனித பெலத்தையோ, உறவினர், பணம், அதிகாரம் போன்ற எதை நாம் நம்பினாலும் அவை அனைத்துமே விக்கிரகங்கள். அப்படியே செய்வதும் ஒரு வகையான விக்கிரக ஆராதனை என்பதை நினைவில் நிறுத்தி எந்த சூழ்நிலையிலும் நாம் கர்த்தரையேச் சார்ந்திருந்து அவருக்கே முதலிடம் கொடுத்து
நல்லப் போர்ச்சேவகர்களாய்–
கர்த்தருடைய யுத்தங்களை நடத்துவோம்.

3-6

நல்லப் போர்ச் சேவகனாய்...

நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்லப்
போர்ச் சேவகனாய் தீங்கனுபவி.. 2 தீமோத்: 2:3
அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் தனக்கு மிகவும்
பிரியமான தீமோத்தேயுக்கு எழுதும் போது இப்படி;
விசுவாச வாழ்க்கையில் வளர்ந்து வரும் எவரும் எளிதில்
மறந்து விடவோ மறுத்து விடவோ முடியாத விஷேசித்த
புத்திமதியைச் சொல்லுகிறார்.

நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்லப் போர்ச்சேவகனாய் தீங்கனுபவி, என்ற மெய்யான வார்த்தைகளில் இயேசு கிறிஸ்துவினிமித்தம் நமக்கு இருக்கும் விசுவாசப் போராட்டத்தை – அந்த போராட்டத்திலே நல்ல போர் சேவகராய் நாம் நிற்க வேண்டுமென்பதை – அதனால் வரும் தீங்குகளை, நிந்தையை, சிலுவையை நாம் சுமந்தாக வேண்டுமென்பதை – மிக அற்புதமாக வலியுறுத்துகிறார் பவுலடியார்.

கிறிஸ்துவுக்கு நல்லப் போர்ச் சேவகனாக இருக்கிறவன் – முதலில் கிறிஸ்துவோடு இருப்பவனாக– அவரது சித்தத்தை–வாஞ்சையை தாகத்தை நிறைவேற்றுபவனாக – அவரது நிந்தையை சுமந்து தன் இதயத்தையே அவருக்காய் திறந்து கொடுத்து – தொலைந்து போன அவரது ஆடுகளை – விசுவாச வீட்டாரைத் தேடி கண்டுபிடிப்பவனாக – காடுகளிலும், மேடுகளிலும் தேசமெங்கிலும் அவரது மந்தைக்குள் வராத ஆடுகளைத் தேடி அவரது மந்தையில் சேர்ப்பவனாக இருப்பதோடு– அதனால் வரும் தீங்குகளை, வருத்தங்களை, வேதனைகளைச் சிலுவையாக அனுதினமும் சுமக்கிற – நல்லப் போர்ச் சேவகர்க்காய் கிறிஸ்து சேனையின் சுவிஷேச போர்முனை எப்போதும் காத்துக் கொண்டிருக்கிறது.

நல்லப் போர்ச் சேவகன் ராஜாவின் விருப்பமறிந்து
செயல்படுவான். நல்லப் போர்ச் சேவகர் யுத்தத்தில்
நில்லாதிருப்பதில்லை. பின் வாங்குவதுமில்லை.
சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் – நல்ல
யுத்த வீரர்கள் முன்னேறிக் கொண்டேயிருப்பர்... யுத்தத்தில்.

ராஜாக்களே! யுத்தத்திற்குப் புறப்படுங்கள்...

இராஜாக்கள் யுத்தத்திற்கு புறப்படும் காலம் வந்த போது
தாவீது யோவாபையும், அவனோடே கூடத் தன்
சேவகரையும் இஸ்ரவேல் அனைத்தையும்
யுத்தத்திற்காக அனுப்பிவிட்டு.... தாவீதோ....
யுத்த காலத்தில் அரமனையிலே தங்கி விடுகிறான் 2சாமு 11:1

அம்மோன் புத்திரரை அழிக்கவும். இரப்பாவை
முற்றிகை போடவும்.... யுத்தத்திலே படை கொண்டு
நடத்த வேண்டிய தாவீது– அரண்மனை பஞ்சு மெத்தைகளிலே
தங்கி தாபரித்ததால்... தேவனுடைய வீட்டில் எங்கிலும்
உண்மையுள்ளவனாக வாழ்ந்த–
தாவீதரசனின் வெற்றி வரலா...ற்...றி...லே!
ஒரு பொல்லாத சாயங்காலம் வருகிறது.

படுக்கையிலிருந்து எழுந்தாலும் – யுத்தத்திற்கு
செல்ல வேண்டுமே என்ற... இதய வாஞ்சையில்லாததால்
படுக்கையிலிருந்து எழுந்த தாவீது–
அரண்மனை உப்பரிக்கையிலே உலாத்திக் கொண்டிருக்கிறான்.
மும்முரமாக நடக்கிற யுத்தப் போர் முகத்தே – நின்று
தேவ ஜனமாகிய இஸ்ரவேலையும், தேவனுடைய பெட்டியையும்
பாதுகாக்க வேண்டிய உன்னத பொறுப்பிற்கு பாத்திரவானாகிய

தாவீது, அரண்மனை உப்பரிகையிலே உலாத்திக் கொண்டிருந்ததால்– ஸ்நானம் பண்ணுகிற, வெகு சௌந்தர வதியாயிருந்த உரியாவின் மனைவி பத்சேபாளைக் காணுகின்றான். அவளோடு விபச்சாரம் செய்துவிட்ட காரணத்தால் – தாவீது அந்நாள் வரை கட்டிக்காத்து வந்த சௌந்தரியமெல்லாம் – கெட்டுச் சீரழிந்து தேவ கோபத்திற்கு பாத்திரவானாகிவிட்டான். யுத்தத்திற்கு செல்ல வேண்டிய தாவீது – அரண்மனையிலேயே தங்கி உப்பரிக்கையிலே உலாத்திய காரணத்தால் கெட்டுச் சீரழிந்தான்.

என்ன வேதனையான சம்பவம். தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற – பிரியமான தாவீது தான்! மும்முரமாய் நடக்கிற போர் முகத்திலே தேவ ஜனங்களாகிய இஸ்ரவேலும் யூதாவும், தேவனுடைய பெட்டியும் யோவாபும் தாவீதின் சேவகர்களும் – இரப்பாவை முற்றுகையிட அம்மோன் புத்திரரோடு மகாயுத்தம் செய்து கொண்டு வில்லுக்கும், வாளுக்கும் அஞ்சாது, தம் ஜீவனையும் பாராது துணிந்து முன்னேறி போர் முகத்திலே நிற்கும் போது
தாவீதோ! அரண்மனையிலே சுகபோகமாய்த் தங்கியதால்... பத்சேபாளை அடைவதற்காக மாபாதகத் திட்டங்களை போட்டு விபச்சாரம், கொலை, கொலை வெறித்துரோகம் முதலான எல்லாப் பாவங்களுக்கும் பங்காளியாகி விட்டான்.

ஏன் இவைகளெல்லாம் சம்பவித்தது. எப்பேர்ப்பட்ட அபிஷேகம் பெற்ற தாவீது! சவுல் மன்னனின் மகா சேனையே அஞ்சி கலங்கித் தவித்த வேளையிலே... வைராக்கிய அனல் கொண்டு மாவீரன் கோலியாத்தை தனி மனிதனாய் முறியடித்த பராக்கிரமசாலி தாவீது! தன்னை எதிர்த்த அனைத்து ராஜாக்களையும் வென்று அவர் தம் பட்டணங்களையெல்லாம் தரைமட்டமாக்கிய மாவீரன் தாவீதின்–இந்த பத்சேபாள் விஷயத்திலே நாம் கற்றுக் கொள்ள வேண்டியதென்ன?

இங்கே தாவீது மகா ரூபவதியான பத்சேபாளைக் கண்டதால் யுத்தத்திற்கு செல்ல வில்லையா? அல்லது யுத்தத்திற்கு செல்லாததால் பத்சேபாளைக் கண்டு பாவம் செய்து கெட்டானா? என்று சிந்தித்தால்

யுத்தத்திற்கு சென்றிருக்க வேண்டிய ராஜா யுத்தத்திற்கு செல்லாததால் இத்தனைச் சீரழிவுகளும் நேரிட்டது என காணலாம்.

உரியாவின் வைராக்கியம்!

அதோடு பத்சேபாளை அடைவதற்காக– அவளது கணவன் உரியாவை! போர் முகத்திலிருந்து அழைத்து வரவழைத்த தாவீது– உரியாவை நோக்கி 'உரியாவே! நீ உன் வீட்டுக்குப் போய், பாதசுத்தி செய்து உச்சிதமான பதார்த்தங்களை உண்டு களித்து உல்லாசமாக இன்று ஓய்வெடுத்துக் கொள்' என்ற போது போர் முகத்திலிருந்து வரவழைக்கப்பட்ட உரியா சொன்ன வைராக்கியமான பதிலால் ஒரு முறை கூட நம்மீதிருக்கும் அபிஷேகம் அனல் கொள்ளட்டும்...!

உரியா தாவீதை நோக்கி, 'பெட்டியும் இஸ்ரவேலும் யூதாவும் கூடாரங்களிலே தங்கி, என் ஆண்டவனாகிய யோவாபும், என் ஆண்டவனின் சேவகரும் வெளியிலே பாளயமிறங்கியிருக்கையில் நான் புசிக்கிறதற்கும், குடிப்பதற்கும் என் மனைவியோட சயனிக்கிறதற்கும் என் வீட்டிற்குள் பிரவேசிப்பேனோ! நான் அப்படி செய்கிறதில்லை என்று உம்முடைய பேரிலும் உம்முடைய ஆத்துமாவின் பேரிலும் ஆணையிட்டுச் சொல்லுகிறேன்' என்றான். 2சாமு: 11:11

ஏத்தியனாகிய உரியா என்ற சாதாரண வீரனைக் கொண்டு தாவீதின் நெற்றிப் பொட்டில் அடித்தாற் போல் தேவன் கொடுத்த போதனையை– புத்திமயக்கத்தில் இருந்த தாவீதரசனால் ஏற்று கீழ்படிய முடியவில்லை. நடந்தது என்ன? தேவனுக்கு மிகவும் பிரியமான தாவீதரசனின் வெற்றி வரலாற்றுப் பக்கங்களிலே... சிலவற்றில் பாவக்கறை 2 சாமுவேல் 12ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட சாபங்கள் அனைத்தும் வந்து பலித்தது.

ஆனாலும் 'எனக்கு உண்டான நெருக்கத்திலே' கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன். தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார். 2 சாமுவேல்: 22.7

என்று தேவனை நோக்கி பணிந்து அபயமிட்ட தாவீது
மீண்டும் தனது வெற்றி வாழ்வை நிறைவேற்றித்
தேவ சித்தத்திற்கு கீழ்படிந்து பெருவாழ்வு வாழ்கிறார்.

இது புறப்பட வேண்டிய காலம்!

போகட்டும். போக்குச் சொல்ல வழி தெரியாது நிற்கும் நமது நிலைமையைக் குறித்து சிந்திப்போம். இளவரசனாக இளவரசியாக இராஜ அபிஷேகம் பெற்ற உன் அக்னி மயமாய் பற்றியெரிய வேண்டிய வைராக்கியம் எங்கே? இராஜாக்கள் யுத்தத்திற்கு புறப்பட வேண்டிய காலம் போல இராஜாக்களும் ஆசாரியரும் என்று பாடிக் கொண்டிருக்கிற நீயும் நானும் யுத்தத்திற்கு புறப்பட வேண்டிய. மிக சரியான காலமிதுவே, என்பதை மறந்து விடாதே சகோதரனே!

யோவாப் சென்றிருக்கிறார், என் ஆண்டவனின் சேவகர்கள் சென்றிருக்கிறார்கள் என்று சாக்கு போக்கு சொல்லிக் கொண்டிருக்கிற நேரமல்ல இது! தேசமெங்கிலும் கிறிஸ்துவின் சுவிஷேசத்திற்கு எதிராக எதிர்ப்புத் தீ கொழுந்து விட்டெறிந்து கொண்டிருக்கிறது. நேபுகாத் நேச்சார் போன்ற தீவிர இயக்கத் தலைவர்கள் பொல்லாத பாபிலோனிய பிரதிநிதிகளாய்... சுவிஷேச எதிர்ப்பார்ப்பாளர்களும், விருத்தசேதனமில்லாத பொல்லாத பெலிஸ்தியனாய் நம்மை விரோதித்து கூவி கொக்கரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

யார் ஜீவனுள்ள தெய்வம்? என்பதை உலகத்திற்கு
வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்காக—

இளமைப் பொங்கும் தங்கள் பொன்னுடலை நேச வைராக்கியத் தினால் அக்கினிக்கு இரையாக சுட்டெரிக்க, வைராக்கியமாய் ஒப்புக் கொடுத்த சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ போன்ற வீர இளைஞர்களின் மேலிருந்த வல்லமையான தேவ அபிஷேகத்தை நம்முன் அனல் மூட்டியெழுப்புவோம்.

இது தான் சரியான காலம். இது தான் நாம் சந்திக்க வேண்டிய போர்க்களம்! புறப்பட வேண்டியது நாம்தான்! என்பனவற்றை தேவனாகிய கர்த்தரின் ஜீவ வார்த்தைகளில் பெற்று வைராக்கிய அனலோடு நல்லப் போர்ச் சேவகனாய் புறப்படுவோம்.

இராஜதானியாய் புறப்படுவோம்!

புறப்படும் புறப்படும் என எதிர்பார்த்து புறப்படாமலேயே நின்று விட்டதால்... உடைத்து நொறுக்கி காயலான் கடையில் தள்ளப்பட்ட இற்றுத் துருப்பிடித்துப் போன மோட்டார் வாகனமாய்... மோசம் போன தலைவர்களையும், கண் செறுகிப் போன வழிகாட்டிகளையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு உன் சுவிஷேச புரட்சிப் பயணம் ஆத்மநேசரோடு புறப்படட்டும்.

ஒடும் ஓடும் என்று – ஓடாத இரயில் எஞ்சின் பின்னால் நின்று வேடிக்கைப் பார்த்தது போதும்! இலக்கை நோக்கி நம்மைக் கொண்டு செல்லுகிற – இரட்சகராம் நம் சிலுவை நாதரின் சித்தமறிந்து – புது வேகத்துடன் புறப்படுகிற ராஜதானியாய் புறப்படுவோம்.

நின்ற இடத்திலே நின்று, கைகளை ஆட்டி
'ஓடுகிறேன், நான் ஓடுகிறேன்' என்று ஓடுவதாக பாவனை செய்து
நேசருக்காக ஒரு அடி கூட எடுத்து வைக்காது– ஞாயிறு தோறும்
வல்லமை தேவை தேவா இப்போ, இன்றேத் தேவை தேவா' வென்று
வெறும் பாடல் பரவசத்தோடு நிறுத்திக் கொள்ளும்
வெற்று ஆராதனை வீரர்கள் மத்தியிலிருந்து இயேசு

நேசருக்காய் உண்மையாய் ஓடுகிற...
விவேகமுள்ள யுவன ஜனமாய்ப் புறப்படு!
உன் பேச்சில் எழுத்தில், நடக்கை மற்றும் செயலில்
ஆவிக்குரிய கனிகள் கிரியைகளாக வெளிப்படட்டும்.
சோர்ந்து போகாமல் நற்கிரியைகள் செய்யப் புறப்படு!
மன்னிக்கவே முடியாதென நீ முடிவு கட்டியிருந்த
மனிதர்களை நீ மன்னித்து அரவணைக்கும் போது
உன்னிடமிருந்து தேவ அன்பு புறப்படுவதை உலகம் அறியட்டும்.

திக்கற்றோர், ஏழைகள் விதவைகள் மீது அன்பு கூர்ந்து, தான தருமங்களால் நீ அவர்களைத் தாங்கும் போது உன் விசுவாசத்தை அவர்களும் பற்றிப் பிடித்து அவர்களும் நம் நேசரின் செட்டைகளின் கீழே வந்து தங்கி பரலோகக் குடிகளாய் மாறுவதைக் கண்டு மகிழலாம்.

ஆவியின் கனிகளால் நீ நிறைந்து வாழும் போது
தேவ பிரசன்னமும், அபிஷேகமும், பாதுகாப்பு கேடகங்களாய்
உன்னைத் தொடர்ந்து பாதுகாக்கும். ஆதலினால்
இதுவே புறப்பட வேண்டிய காலமென்பதைப் புரிந்து
ராஜதானியாய் புறப்படுகிற நல்லப் போர்ச் சேவகன்
உன் கண் முன்னே... அதோ.... அதோ...த்... தெரியுது பார்!
ஒருவரும் பூட்டமுடியாத திறந்த வாசல்!

3-7

ஒருவரும் பூட்ட முடியாதத் திறந்த வாசல்கள்!

'....பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும் தாவீதின் திறவுகோலை உடையவரும் ஒருவரும் பூட்ட கூடாத படிக்கு திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக் கூடாத படிக்குப் பூட்டுகிற வருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது' உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன். உனக்குக் கொஞ்ச பெலன் இருந்தும் என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக் கொண்டபடியினாலே... இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அதை ஒருவனும் பூட்டமாட்டான். வெளி:3:7,8

ஆம்! இருக்கிறவரும், இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர் ஆசியாவிலுள்ள ஏழு சபைகளில் பிலதெல்பியா சபைக்கு சொல்லியவை இவை. ஏழு சபைகளுக்கும் தேவ ஆவியானவர் சொல்லும் போது உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன் என்று சொல்லி லவோதிக்கேயா சபையினரைப் பார்த்து...

'நீ அனலுமல்ல, குளிருமல்ல.... உன்னை என் வாயினின்னு வாந்திப் பண்ணிப் போடுவேன்' என்றும்...
சர்தை சபையைப் பார்த்து – 'நீ உயிருள்ளவனென்றுப் பெயர் கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்....' என்றும்–

சபைகளை எச்சரிக்கிற தேவ ஆவியானவர் பிலதெல்பியா சபையைப் பார்த்து மட்டுமல்ல – இன்று சகோதரனே! உன்னைப் பார்த்தும் கூட இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன் அதை ஒருவனும் பூட்ட மாட்டான் என்று திருவுளம்பற்றுகிறார்.

யாருக்காக திறந்த வாசல்கள் வைக்கப்பட்டிருக்கிறது!
தனக்கு கொஞ்சம் பெலன் இருந்தும் கூட தேவனாகிய கர்த்தரின் நாமத்தை மறுதலியாமல் – தேவ வசனங்களைக் கைக் கொண்டு நடக்கிற – தேவ பிள்ளைகளுக்காக – தேவன் வைத்திருக்கும் திறந்த வாசல்களை எந்த மனிதனால் மாத்திரமல்ல எந்த சக்தியாலும் பூட்ட முடியாது.

தேசத்திலே கொடிய பஞ்சம் உண்டான காரணத்தினால் இருந்த கொஞ்ச மாவில் தனக்கும் தன் குமாரனுக்குமாக அடை சுட்டுச் சாப்பிட்டு செத்துப் போகத் தீர்மானம் செய்து விறகு பொறுக்கிக் கொண்டிருந்த – சாறிபாத் விதவையின் வாழ்க்கையிலே, மகா இக்கட்டான – விரக்தியான சூழ்நிலையில் தேவ மனிதனாகிய எலியா வருகிறான்,

சாகத் துணிந்து விட்ட கொடிதான பஞ்ச சூழ்நிலையிலே இருந்த கொஞ்ச மாவினால் – எலியா என்ற தீர்க்கதரிசிக்கு முதல் அடையைச் சுட்டுக் கொடுத்து தேவ மனிதனின் தேவையை நிறைவேற்றிய சாறிபாத் விதவையானவள் – தனக்கு இருந்த கொஞ்ச பெலனில்– கொஞ்ச மாவினால் தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிந்த படியினாலே அந்த சாறிபாத் விதவையின் வாழ்விலே தேவன் வைத்த திறந்த வாசலை... வேறு யார் பூட்ட முடியும்?

தேசமெல்லாம் பஞ்சத்தால் பரிதவித்துக் கொண்டிருந்த போது அடுத்த வேளை உணவிற்கு எந்த வழியுமில்லாத இந்த ஏழை விதவையின் வீட்டிலே மாத்திரம் கலசத்தில் எண்ணெயும், பானையில் மாவும்– பஞ்ச காலம் முழுவதும் குறைந்து போகவேயில்லை!

சாகக் கொடுத்த மகனையும் தீர்க்கதரிசி மூலமாக
சாவிலிருந்து மீட்டு – மீண்டும் மகனை
உயிரோடே பெற்றுக் கொண்ட பாக்கியம் யாருக்கு கிடைக்கும்? நமக்கு கொஞ்ச
பெலம் இருந்தாலும் அவருடைய
நாமத்தை மறுதலியாமல் தேவ வார்த்தைகளுக்குக்
கீழ்ப்படிந்த சாறிபாத் விதவையின் உத்தம குணத்தை
நம் வாழ்விலும் நடைமுறை சாத்தியமாக்கி
என்றென்றும் குறைவில்லா அபிஷேகமாகிய எண்ணெயும்,
தேவ வார்த்தையாகிய அப்பமும், நம் வாழ்வில்
ஒரு நாளும் குறைந்து போகாத பாக்கியத்தை பெற்று
இழந்து போன நம் உறவுகளை பாவத்திலே
விழுந்து விட்ட நம் குமாரர், குமாரத்திகளை பாவத்துக்கு
மரித்து நீதிக்குப் பிழைத்தவர்களாய்....
நம் தேவாதி தேவனிடமிருந்து புதிய புத்திரராய்
புதுப்பித்துப் பெற்றுக் கொள்ளுவோம்.

குமாரத்திகளையே...
பணயம் வைத்த லோத்து!

தான் வருந்தி கேட்டுக் கொண்டபடியே 'தன் வீட்டிலே இராத் தங்கியிருந்த தேவ தூதர்களை – சோதோம் பட்டணத்து பயங்கர வாதிகளிடமிருந்து பாதுகாப்பதற்காக, இந்த மனிதர்களை ஒன்றும் செய்யாது அதற்கு பதிலாக புருஷனை அறியாத தனது இரண்டு குமாரத்திகளையே தீவிரவாதிகளின் இஷ்டப்படி செய்ய ஒப்புக் கொடுக்க துணிந்த லோத்துவின் உத்தம குணமல்லவா' சோதோம் கொமரா அழிக்கப்பட்ட போது லோத்தையும் அவன் குடும்பத்தையும் காக்க திறந்த வாசலை அவனுக்காகப் பெற்றுத் தந்தது.

சோதோமிலே பரதேசியாய் வந்து தங்கி வாழ்ந்த
லோத்துவுக்கும் தன்னிடம் வந்து தங்கியிருந்த தூதர்களைக்
காக்காமல் விட்டு விடவோ அல்லது அவர்களை
இந்த மனிதர்களை எனக்குத் தெரியாது இன்றுதான் வந்தார்கள்
என்று மறுதலித்து விடவோ – மனதில்லை லோத்துவுக்கு.
அதற்கு பதிலாக வேறெந்த பெலமுமில்லாதச் சூழலில்
தன்னிடமிருந்த கொஞ்ச பெலனாகிய தன் குமாரத்திகளையே
தேவ தூதர்களைக் காக்கும் பணயப் பொருளாய்–
கொடுக்கத் துணிந்த லோத்துப் பெற்றுக் கொண்ட
கிருபையின் திறந்த வாசல் யாருக்குக் கிடைக்கும்?

இன்று எத்தனையோ பேர் மரணதிகில் வந்து தம்மை நெருக்கிய போதிலும் – இனி ஜீவிக்கவே முடியாதென்ற மகா இக்கட்டான வேளைகளிலும் ஆண்டவருக்காய் தமக்கு உச்சிதமான குமாரரை, குமாரத்தியை தேவ ஊழியத்திற்காக ஒப்புக் கொடுத்து தேவனோடு உடன்படிக்கைச் செய்தவர்கள் இன்னும் பிற பொருத்தனைகளைச் செய்தவர்கள். தங்களுக்கு கொஞ்ச பெலமல்ல எல்லா பெலமும் இருந்தும் கீழ்படியாதிருப்போர் எத்தனை பேர்?

எல்லோருமே வாஞ்சிக்கிற ஆசீர்வாதத்தின் திறந்த வாசலை, நாம் வாஞ்சிக்கின்ற அதே வேளையிலே – நாம் நமக்குள்ளேப் பூட்டி வைத்திருக்கும் – நம் இதய வாசல்களை திறந்து விட்டு பார்ப்போம் – தேவன் நமக்காக திறந்தே வைத்திருக்கும் எவரும் பூட்ட முடியாத வாசல்கள் தெள்ளத் தெளிவாய் தெரியும்.

லோத்துவின் வாழ்க்கையிலே – அவன் தனது வீட்டிலே தூதர்களைத் தங்க வைத்து போஷித்ததால் – லோத்துவுக்கும் சோதோம் ஜனங்களுக்கும் வந்த போராட்டத்திலே தேவனே லோத்துக்காக யுத்தம் செய்ததால்– லோத்தை எதிர்த்து வந்த ஜனங்கள் குருட்டாட்டத்தில் அகப்பட்டார்கள். சோதோம் கொமரா அடைக்கப்பட்டு அனைவரையும், தேவனே.... அழித்து சங்கிகரித்த போது

லோத்துவுக்கும் அவன் குடும்பத்திற்கு மாத்திரமே
ஜீவன் தப்பிச் செல்ல திறந்த வாசல் கிடைத்தது.
லேசான பிரச்னைகள், சோர்வுகள், போராட்டங்கள்
என்று வந்துவிட்டாலே உடனே பின் வாங்கி விடுகிற
அநேக ஜனங்களை இன்று நாம் பார்க்க முடிகிறது. ஆனால்
நாம் சோதனைகளை ஜெயிக்கிறவர்களாக வாழ வேண்டும்.
சோதனைகளிலும் போராட்டங்களிலும் நின்று
நிலைக்காதவர்கள் ஜெயங்கொண்டதாக சரித்திரமேயில்லை.
லோத்தின் வாழ்க்கையிலே போராட்டத்தில் நின்று
ஜெயங்கொண்டதால் அல்லவோ! அவர்களது ஜீவன் தப்பியது.

இருந்த கொஞ்ச மாவும், எண்ணையும் எங்களுக்கேப் போதாதே! என சாக்கு போக்கு சொல்லியிருந்தால் அப்போதே சாவதற்கு துணிந்து விட்ட – சாறிபாத் விதவையின் வாழ்வில் என் மகிமை இருந்திருக்கும்? பொல்லாத பார்வோன் மன்னனின் ஈவிரக்கமற்ற ஆட்சியிலே – எகிப்தில் இஸ்ரவேல் ஜனங்களெல்லாம் அடிமைகளாய் நாய்களை விட கேவலமாய், நடத்தப்பட்ட போதிலும், அவர்கள் ஆண் குழந்தைகளையெல்லாம் கொன்று விட பார்வோன் மன்னன் உத்தரவிட்ட போது அதற்கு எகிப்திய தாதிமார் கீழ்ப்படியாமல் இஸ்ரவேலரின் ஆண்குழந்தைகளை மறைமுகமாக காப்பாற்றியதால் அல்லவோ – அந்த தயவுமிக்க தாதிமார் எகிப்தியர் யாருக்குமே கிடைக்காத, தேவ தயவைப் பெற்றுக் கொண்டார்கள்!

தான் ஒரு பெண்ணாகவும், வேசியாகவும் இருந்த பின்னும் தேசத்தை வேவு பார்க்க வந்த யோசுவாவின் ஆட்களை மன்னன் உத்தரவிற்கு அஞ்சாமலும், தயங்காமலுமிருந்து உபசரித்து பாதுகாத்து பத்திரமாய் அனுப்பி விட்ட ராகாபின் துணிச்சல் அல்லவோ அவளையும் அவள் தகப்பன் வீட்டாரையும் இரட்சித்துக் காத்தது.
அரச உத்தரவுகளுக்கு அஞ்சாமல் தாங்கள் பெற்ற அழகுமிக்க ஆண்குழந்தையைக் கொல்லக் கொடுக்காமல் மூன்று மாதத்திற்கு மேல் உயிரைப் போல் – பாதுகாத்த

பெற்றோர் அல்லவோ – மோசேயென்னும் மாபெரும் இரட்சகன் தோன்றக் காரணமாயினர்.

படை கொண்டு நடத்தும் ஆத்தும நேசர்....!

திறந்த வாசல் வேண்டும்! ஜெயங்கொள்ள வேண்டும்!! ஜீவ கிரீடத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் – என்றெல்லாம் வாஞ்சையிருப்பது நல்லது தான் சகோதரனே! வைராக்கிய மெங்கே? நல்ல போர்ச் சேவகனாய் யுத்தங்களை நடத்தாமல்! சாத்தானை விரட்டியடிக்கும் சுவிஷேச போர்முனையில் நின்று போர் பரணி பாடாமல்... ஜெயங் கொள்ளாமல் சொர்க்க வாசல் சொப்பனங்களைக் கண்டு கொண்டிருக்கும் சோம்பேறி கூட்டத்தாருக்கு மரண வாசலேயன்றி வேறென்னத் திறந்த வாசல் கிடைத்து விடப் போகிறது?

அள்ளித்தூவும் விதையாகிய சுவிஷேசத்தைச் சுமந்து கொண்டு கண்ணீரோடே ஒரு கூட்ட இளைஞர்கள் தேசமெங்கிலும் புறப்பட்டுச் சென்று கொண்டிருக்கிறார்கள். காடு மேடு மலை பசி, பட்டினி, நோய், நொடியென்றும் பாராமல் , அடி அவமானம், கட்டுக்காவல் என்றும் பாராமல் எதையும் தாங்கும் இதயத்தோடு ஒரு கூட்ட ஜனம் – கண்ணீரோடு சுவிஷேசத்தை விதைத்துக் கொண்டே செல்கிறது,

போர் முகமாம் மிஷினரிக் களங்களிலே – கட்டிய மனைவியை பறிகொடுத்தோர், கண்மணிபோல் நேசித்த குழந்தைகளை நோய் நொடிக்குத் தாரைவார்த்தோர் – கண்களையே பறிகொடுத்தார் போல் – ஆசைக் கணவர்களை கயவர்களின் கொடுவாளுக்கு பலியாகக் கொடுத்து கதறி அழுது கண்ணீர் கடலாம் கொலைக் களத்திலே நின்று– கண்மணி கணவனின் பொன்னுடலைப் புதைக்கக் கூட ஆள் ஆதரவின்றி கண்ணீரெல்லாம் வற்றிப் போக அழுதாலும்..... எழுந்து!! நானும் வாழ்ந்தாலும்... மடிந்தாலும்... பாசமுள்ள பரிசுத்த நேசருக்காய்... வென்று மடிவேன் என்று வீர சபதம் செய்து கொண்ட பாசமிகு மனைவிமாரின்

– இதய சோகமெல்லாம் சொல்லி முடியுமா சகோதரனே?

ஆத்தும நேசராம் பரிசுத்தர் இயேசு – அறுவடைக் களத்திலே நின்று படை கொண்டு நடத்துகிறார் என்றறிந்த இளைஞர் கூட்டம் இன்று இரட்சண்ய சேனையாகப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறது. தாய் தகப்பன் உற்றார் உடனிருப்போர் பாசமிக்க உறவுகள் தூக்கி வளர்த்த அன்புச் சகோதரிகள் என இரத்தமும் சதையுமாய் ஒட்டிப்பிறந்த நேசமிக்க உறவுகளை யெல்லாம் தொப்புள் கொடியாக வெட்டி எரிந்து விட்டு... நேச மணாளனின் இதய வாஞ்சையறிந்து சுவிஷேசம் பரம்ப, சிங்கக்கெபியோ, ஏழு மடங்கு அக்னிச் சூளையோ எது வந்தாலும் எம் நேசருக்காய் ஏற்றுக் கொள்ளுவோம் என்று நெஞ்சை நிமிர்த்தி புறப்படுகிற உன் அன்புச் சகோதரர்களைக் கேட்டுப் பார்த்தால்!!!

நேச வைராக்கியம்! நேச வைராக்கியமே!!!

மரணத்தை விட வலிய பாதாளத்தை விட கொடிய
நேச வைராக்கியம். எங்கள் நேசர் மீது
அனல் கொண்டு எரிகிற நேசத்தை – திரளான
தண்ணீர்களாலும் அணைக்க முடியவில்லை – ஆதலினால்
புறப்பட்டோம் என்கிற சாட்சியெல்லாம் – எதற்காக?
யாருக்காக சகோதரனே!

ஒரு காலத்தில் சுவிஷேசத்திற்காக–
தலையையே கொடுத்தார்களாம் என்ற போது–
இது என்ன மூடத்தனம்? என்றெல்லாம் பரிகசித்தவர்கள்,
கொடுப்பதற்கு, இன்று தனக்கு ஒரேயொரு தலை தானே இருக்கிறது
என்றெண்ணி – கட்டிய பாசமிகு மனைவியையும் நேசமிக்கப்
பிள்ளைகளையும்... நேசரின்
சுவிஷேச பலிபீடத்திற்காய் எண்ணிக் கொடுக்கிற
மும்முரமான கடைசி காலமிதுவென்பதை

கொஞ்சமும் மறந்து விடாதே சகோதரனே.... சகோதரியே....

'யோவான் ஸ்நானகன் காலம் முதல் இதுவரைக்கும் பரலோக ராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது. பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்கிறார்கள்

மத்தேயு: 11:12

யார் பரலோக ராஜ்யத்தைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள்
என்ற பரமன் இயேசுவின் பகீரெங்க பதிலைக் கேட்டாயா? பலவந்தம் செய்கிறவர்கள்! ஆமாம் சகோதரனே!
பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்து கொள்ளுகிறார்கள்!
அதுவென்ன பலவந்தம் என்கிறாயா? ஒரு வகையான யுத்தம்...

நேச வைராக்கியத்தினால் பற்றியெரிகிற உன் நெஞ்சமெல்லாம் தேவ ஆவியின் அபிஷேகத்தால்... அனல் கொண்டெரியட்டும். கொழுந்து விட்டெரிகிற இந்த அற்புத அனுபவத்தை
ஆர்ப்பரிப்போடு அனல் மூட்டியெழுப்பு –
சத்தமிட்டுக் கூப்பிடு – அடக்கிக் கொள்ளாதே
எக்காளத்தைப் போல் உன் சத்தத்தை உயர்த்தி
அனு தின ஜீவியத்தில் நேசக் கர்த்தருக்காய் நீ
எதையாவது உத்தமமாய்... உண்மையாய்ச்
செய்யத் துவங்கும் போது – பற்றியெறியும் உன்
நேச வைராக்கியத்தின் முன்னால்–
உலகமே ஓர் நாள் கிறிஸ்துவுக்காய் மண்டியிடும்!!!
ஆமேன்... ஆமேன்... ஆமேமேன்...

நேச வைராக்கியத்தினால் மரணத்தை மிஞ்சும் வீரப்புறப்பாடு!

4

முன்பெல்லாக் காலங்களை விடவும்,
இரட்சகரை நேசிக்கிறோம்! அன்பு கூறுகிறோம்
என்ற பாடல்களும், ஆராதனை முழக்கங்களும்,
நேசமிகுந்த உணர்வு பொங்கும் அனுபவங்களும்
மிகுதியாக பெருத்திருப்பது – மிகுந்த மகிழ்ச்சியே...
ஆராதனை மற்றும் ஜெப வேளைகளில்–

அன்புச் சகோதர சகோதரிகள் ....
நேசத்தால் மனமுருகி நேசிக்கிறோம்.
அன்பு செலுத்துகிறோம்.... ஆண்டவரே...
என்று கண்ணீரின் கழிப்பில் அகமகிழும் போது
நம்மெல்லார் நெஞ்சமும்... பஞ்சாய் பறந்து பரவசமடைந்து
தேவ ஆவிக்குள்ளாய் ஆனந்தமடைவது அற்புதமே!

படபடவென முளைக்கிற அநேக விதைகள்
கற்பாறைகளில் விழுந்ததாலோ, என்னவோ!
சடாரென வாடிப் போகின்றதே! ஆனந்த பரவசமெல்லாம்
ஆலயத்தை விட்டு வெளியே வந்ததும் நேசிக்கிற,
நேசிக்கப்பட்ட... நல்ல நேசரை விட்டுத் தூரமாய் போவதேன்?

உலகத்துக்குள்ளே... நமக்குள்ளே... நம்முடனே
நமது தெருவிலேயே... ஊரில்... நாட்டில் உலாவுகிற
அவரை அடையாளம் கண்டு கொள்ளாமல், கண்டாலும்
அவராகவே வருகிற இந்தச் சிறியரில் எவரையும்
நேசிக்க முடிய வில்லையே..... ஏன்?

நேசிக்கிறோம்! நேசிக்கிறோம்!! என்றால்
யாரை நேசிக்கிறோம்? எப்படி நேசிக்கிறோம்? முறையாக
அவரை நேசிக்காத – அன்பு கூறாதவர்கள்! சொல்லி, சொல்லிப் பாடிச்
செயல்படாதவர்கள் மீது அவரும் அன்பு கூறுவாரோ?
எத்தனை காலங்கள் இந்த கண்ணாம்மூச்சு விளையாட்டு?
அன்பு கூறுகிறோம் ஆண்டவரே... நேசிக்கிறோம் ஆண்டவரே என்று மறுபடி
மறுபடிச் செல்லுகிறோமே.... ஏன்?

நேசமென்றால் என்னவென்று தெரியாதோர் யார்?
பெற்றோரை, பிள்ளைகளை, கணவனை, மனைவியை, உறவினரை,
விரும்புகின்றவர்களை, விரும்பியனவற்றை
நேசிப்பது போல் ஆத்தும நேசரை நேசிக்கிறோமா?
உணர்வுபூர்வ ஆராதனை, ஏதோ காணிக்கை,
கிறிஸ்துவரென்று தன்னை அடையாளப் படுத்திக்
கொள்வது மாத்திரமா நேசம்!

ஒன்றை மட்டும் நெஞ்சிலே நிறுத்திக் கொள் சகோதரனே! இந்த
தேசத்திலே, கொடியைக் காப்பதற்காக, மொழியைக் காப்பதற்காக, தேசத்தை–
இனத்தைக் காப்பதற்காக,
உடமைகளை, உடலுருப்புகளை, உயிரையே விட்டோர்
அநேகமாயிரம் உண்டென்பதை அறிந்திருக்கிறோம். போகட்டும் அது.
கல்வாரி சிலுவையிலே நமக்காக ஜீவனை விட்டு,
இன்றும் நம்மோடு இருந்து– நம்மை உயர்த்தி பாதுகாக்கிற,
இமைப் பொழுதும் கை விடாது காக்கும் பரலோக ராஜாவாம்
நம் ஆத்தும மணாளனுக்காக....
பற்றியெரியும் நேசம் உன்னைப் பற்றிக் கொண்டால்,
நேச வைராக்கியம் உன்னில்; அனல் கொண்டால்..
மரணமே உன் கூர் எங்கே! பாதாளமே உன் ஜெயமெங்கே!! என மரணத்தை
விஞ்சி புறப்படும் உன் வெற்றிப் பயணத்தை
யார் தடுத்து நிறுத்த முடியும்!
வா! மணவாளியே....... நம் நேசரோடு வயல்வெளிச் செல்வோம்...

4-1
வயல்வெளிக்குச் செல்லுவோம்...

இராக்காலங்களிலே என் படுக்கையிலே....
என் ஆத்தும நேசரைத் தேடினேன். தேடியும் நான்
அவரைக் காணவில்லை. நான் எழுந்து நகரத்தின்
வீதிகளிலும், தெருக்களிலும் திரிந்து – என் ஆத்தும நேசரைத்
தேடுவேன் என்றேன். நகரத்திலே திரிகிற
காவலர்கள் என்னைக் கண்டார்கள். என் ஆத்தும நேசரைக்
கண்டீர்களா? என்று அவர்களைக் கேட்டேன்.

நான் அவர்களை விட்டு கொஞ்ச தூரம் கடந்து
போனவுடனே என் ஆத்தும நேசரைக் கண்டேன்........
விடாமல் பற்றிக் கொண்டேன். உன்னதப்பாட்டு3:1–4

'நான் நித்திரை பண்ணினேன் என் இதயமோ
விழித்திருந்தது. கதவை தட்டுகிற என் நேசரின்
சத்தத்தைக் கேட்டேன்! என் சகோதரியே!
என் பிரியமே! என் புறாவே! என் உத்தமியே!
கதவைத் திற; என் தலை பனியினாலும், என் தலை
மயிர் இரவில் பெய்யும் தூரலினாலும் நனைந்திருக்கிறது என்றார்'.

'என் வஸ்திரத்தைக் கழற்றிப் போட்டேன்; நான் எப்படி
அதைத் திரும்பவும் உடுப்பேன். என் பாதங்களைக் கழுவினேன்,
நான் எப்படி அவைகளைத் திரும்பவும் அழுக்காக்குவேன் என்றேன்'.

'என் நேசர் தமது கையைக் கதவு துவாரத்தின்
வழியாய் நீட்டினார். அப்பொழுது என் உள்ளம்
அவர் நிமித்தம் பொங்கினது. உன்னதப்பாட்டு: 5:2.3.4,

இரவின் பனித்தூரலிலும், மழைத்தூரலிலும் வந்து
எத்தனையோ முறை என் பிரியமே, என் புறாவே
என்று நேசர் கதவைத் தட்டும் போதெல்லாம்
'நான் நித்திரை செய்கிறேன், உடையை கழற்றி விட்டேன்,
எப்படி திரும்ப உடுப்பேன், பாதங்களை கழுவி படுக்கை மேல்
ஏறி விட்டேன், எப்படி இறங்கி கதவை திறப்பேன் என் கால்
அழுக்காகுமே! என்றெல்லாம் வரட்டுத்தனமாய், நிர்விசாரமாய் பதில்
சொன்ன போதிலும் – தயவு பெருத்த நேசர் மீண்டும் முயற்சித்து
கதவுத் துவாரம் வழியாகவும் விரலை நீட்டி என்னை அழைத்து
நேசித்த போது – என் உள்ளம் அவர் நிமித்தம்
ஆனந்தக் கடலில் மகிழ்ச்சி அலைகளாய் பொங்கியது! தேடிக்
கண்டேன் ஆத்தும நேசரை, விடாமல் பற்றிக் கொண்டேன்.

'நான் என் நேசருடையவள் அவர் பிரியம் என் மேலிருக்கிறது!
வாரும் என் நேசரே! வயல் வெளிக்குப் போய்
கிராமங்களில் தங்குவோம். அதிகாலையிலே
திராட்சை தோட்டங்களுக்குப் போவோம்! திராட்சை கொடித் துளிர்த்து
அதன் பூ மலர்ந்ததோ என்றும்
மாதளஞ் செடிகள் பூப் பூத்ததோ என்றும் பார்ப்போம்– அங்கே
என் நேசரின் உச்சிதங்களை உமக்குத் தருவேன்.

உன்னதப்பாட்டு: 7: 10,11,12

ஆமாம். நான் என் நேசருடையவள் என்றும் – அவர் பிரியம்
என் மேலிருக்கிறது என்றும் தெரிந்து கொண்டேன்.
என் பிரியமே! என் ரூபவதி!! என் மணவாளியே என்று
நேசத்திலே என்னை, திக்குமுக்காடச் செய்த
என் நேசருடைய நேசத்தை இரம்மியமான பகல் பொழுதுகளில்
மட்டுமல்லாது, நிலவு காய்கிற நளினமான இராப் பொழுதுகளிலும்
கூட கண்டு, கேட்டு, யாசித்து–வாசித்து, வாசித்து–யாசித்து....
என் நெஞ்சமெல்லாம் நேச அக்கினியால் பற்றியெரிந்து
நானே என்னை மறந்து பரவசப்பட்டு போய் நின்ற போது

'என் பிரியமே... என் ரூபவதியே எழுந்து வா! என்ற
என் நேசரின் சத்தம் கேட்டு – கீழ்படிந்து
எழுந்து போகாமல் எப்படியிருக்க முடியும்?

என் நேசரின் பிரதான விருப்பப்படியே...
வாரும் என் ஆத்தும நேசரே!
வயல்வெளிகளில் போய்
கிராமங்களில் தங்குவோம் என்றேன்.

'இதோ வயல் நிலங்கள் இப்போதே அறுப்புக்கு
விளைந்திருக்கிறதே என்று, உங்கள் கண்களை
ஏறெடுத்துப் பாருங்கள், என நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன்.' யோவான்:4:35

என ஆவலோடுச் சொன்ன எம் அன்பின் மணாளனே!
வாரும் ஆத்தும அறுவடைக்காக விளைந்திருக்கும்
வயல்வெளியில் போய் கிராமங்களிலேயே தங்குவோம்
மட்டுமல்ல – அதிகாலையிலே
திராட்சை தோட்டங்களுக்கு போவோம்,
திராட்சைக்கொடிகள் மெய்யான திராட்சை செடியாகிய
உம்மில் நிலைத்திருக்கின்றனவா என்றும் – அவற்றின்
பூமலர்ந்ததோ கனி கொடுக்கிறதோவென்றும் பார்ப்போம்!

ஆத்தும நாயகனாகிய உமக்கு அங்கே வயல்வெளியில் அறுவடையான
ஆத்துமாக்களையும், அவைக்
கொடுக்கிற உமக்குப் பிரியமான கனிகளையும்
என் நேசரின் உச்சிதங்களாய் உமக்கு தருவேன்

4-2
எருசலேம் குமாரத்திகளே!

எருசலேம் குமாரத்திகளே! என் இனிய சகோதரர்களே!
கேளுங்கள்! நம் நேசரின் நேசம் எப்படிப்பட்டதென்று!!
'...நேசம் (Love) மரணத்தைப் போல் வலியது
நேசவைராக்கியம் பாதாளத்தைப்போல் கொடியதாயிருக்கிறது..
அதின் தழல் அக்னிச்சுழலும் அதின் ஜுவாலை
கடும் ஜுவாலையுமாயிருக்கிறது.
திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்க மாட்டாது,
வெள்ளங்களும் அதைத் தணிக்கமாட்டாது; ஒருவன்
தன் வீட்டிலுள்ள ஆஸ்திகளையெல்லாம் நேசத்துக்காகக்
கொடுத்தாலும் அது முற்றிலும் அசட்டை பண்ணப்படும்.

உன்னதப்பாட்டு :8:6P:

என் அன்பு சகோதரனே வா! இதயத்தின் ஆழத்தில்...
தூசிவிழுந்தால் கூட, துடித்துப்போகிற – அந்த
உணர்வு பொங்கும் இரம்மியமான பகுதிகளிலுருந்து–
நேசமென்றால் என்ன? நேசிப்பதென்றால் எப்படி? என்று
இராப்பகலாய் தியானிபோம்.

ஓ... என்ன அற்புதமான நேரம்! இரத்த நாளங்களெல்லாம்
துள்ளிக்குதிக்கிறதே! நரம்புகளுக்குள்ளே ஒரு அபிஷேக ரத்தம்
சிக்லாக்கை வென்று திரும்பிய தாவீதின் உள்ளம் போல்
ஆனந்தக் கூத்தாடுகிறதே!
நேசரின் அன்பை பேசுவதென்றால் – பகலெல்லாம் மட்டுமல்ல
இரவெல்லாம் விழித்திருக்கமுடிகிறதே!

சற்று நேரம் யாரும் நம்மை தொந்தரவு செய்ய விடாதிருப்போம்
எருசலேம் குமாரத்திகளே! எனக்குப் பிரியமானவளுக்கு

மனதாகு மட்டும் நீங்கள் அவளை விழிக்கப் பண்ணாமலும், எழுப்பாமலுமிருக்கும்படி வெளி மான்கள் மேலும் வெளியின் மறைகள் மேலும் உங்களை ஆணையிடுகிறேன்.' உன்னத:3:5

ஆமாம்! என் நேசருக்கு பிரியமானவளுக்கு
என் அன்புச் சகோதரர்களுக்கு மனதாகிக்
கொண்டிருக்கிற அற்புதமான வேளையிது...
கெட்டுப் போகிறவர்களுக்கு பயித்தியமாகவும் – தேவ

ஆவியில் தேறுவோருக்கு தேவ பெலனாயிருக்கிற நேசமிது.
சிந்தித்துப் பார்ப்போம் சகோதரனே! சகோதரியே!!

உலகத்தில் நம்மீது நேசம் பாராட்டி நாமும் நேசித்து
நம்மை நட்டாற்றில் விட்டவர்கள் எத்தனை பேர்?

நாம் நேசிக்கிறவர்கள் நம்மை
நேசிக்கமாட்டார்களாவென்று, நீ தூங்காமல் துடித்த
இராப்பொழுதுகள் எத்தனை? எத்தனை?

எனக்கு இவர் இருக்கிறார், எனக்கு அவர் இருக்கிராறென்று
நீ நம்பி நேசித்து நாற்றமெடுத்துப் போனவர்கள் எத்தனை?

ஓ... உனக்கு இனி ஒரு குறைவுமில்லை – என உன்னைத்
தேற்றி போற்றியவர்கள் திடீரென உன்னை
நடுத்தெருவில் விட்டதால் உன் இதயத்தின்
ஆழத்திலிருக்கும் ஆறாத வடுக்கள் எத்தனை?

உலக நேசத்தின் முடிவு இதுதான் என்பதில் –என்ன
சந்தேகமிருக்கிறது... சகோதரனே! சகோதரியே!!

ஆனால் முள்ளுகளுக்குள்ளே லீலிபுஷ்பம்
எப்படியிருக்கிறதோ...... அப்படியே குமாரத்திகளுக்குள்ளே நேசருக்கு
பிரியமான நீயிருப்பதைக் கண்டு,

உன்னை இரட்சிப்பதற்காக நம்நேசர் பரிதவித்துப்
பார்த்துக் கொண்டிருந்த பொழுதுகள் எத்தனை.
என் சகோதரியே! என் மணவாளியே!! என்று
உன் இதயத் தோட்டத்தில் வந்து
அவர் காத்திருந்த பொழுதுகள் எத்தனை?

வெண்மையும் சிவப்புமான நேசரின் தலைப்பனியினாலும்
தலைமயிர் இரவில் பெய்யும் தூரலினாலும் நனைந்திருக்க
சுகமான நித்திரை செய்து கொண்டிருந்த உன்னருகில் வந்து
என் பிரியமே! என் புறாவே!! என் உத்தமியே!!! உன் இதயக்
கதவைத் திறவென்று அவர் தட்டிய இரவுகள் எத்தனை?
உளையான சேற்றில் கிடந்த உன்னை, உன் கனவனை
உன் பிள்ளையைத் தூக்கியெடுத்து இவ்வளவாய்
இரட்சித்து தப்புவித்து பாதுகாத்தது யார்?
இவன், இவள் வாழ்க்கை இதோடு முடிந்ததுவென்று
ஊரார், உற்றாரெல்லாம் வேடிக்கைப் பார்த்தபோது,
நீ நினைத்துப் பாராத உயரத்தில் உன்னை உயர்த்தி
உட்காரவைத்து அழகுபார்த்தது யார்?

தப்பிச்செல்லமுடியாத ஆபத்து இனி பிழைக்கவே
முடியாதென்ற நோயின் கொடூரங்களில் வீழ்ந்து
தோற்றுப் போய் விடுவோமோ என்று நீ
நடுங்கிக்கொண்டிருந்த வேளைகளிலெல்லாம்
உன்னைக் காப்பாற்றி உனக்கு ஜெயங்கொடுத்தது யார்?

கேட்கிற காதுகளையும், உணர்வுள்ள இருதயத்தையும்
பெற்றவர்களின் இருதய ஆழத்திலிருந்து ஓர் சத்தம்;
'எருசலேம் குமாரத்திகளே! என் நேசரை கண்டீர்களானால்
நான் நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன்' என்று
அவருக்குச் சொல்லும்படி உங்களை ஆணையிடுருகிறேன். உன்னத:5:8
அவர் நம்மீது கட்டிய அன்பை, பரிவை, நேசத்தை தியானிக்க தியானிக்க
கரைபுரண்டு வரும் கண்ணீரால் இதயமேக் கரைந்து போகிறது. ஆமாம் நான்
நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன்
எருசலேம் குமாராத்திகளே என் நேசரைக் கண்டீர்களானால்......

4-3
நம் நேச மணாளனுக்காய்...

இத்தனை பெரிதான நேசம் தானே, தனது ஒரேப் பேரான குமாரனை, நம்மை மீட்கும் பொருளாக சிலுவையிலே ஜீவபலியாய்த் தந்தது இத்தனை பெரிதான இரட்சிப்பு, ஜெயம் விடுதலை எல்லாமே, நம் நேசர் கோரச் சிலுவைப்பாடுகளின் வழியே நமக்கு பெற்றுத் தந்த பொக்கிஷமல்லவா? இந்த கல்வாரி நேசம் மட்டுமே நின்று நிலைக்கும் நேசம், உலக மனிதர்கள், உலக செல்வங்கள், உலக மேன்மைகள் அனைத்துமே ஓர் நாள் கைவிட்டுக் கைமாறிக் காணாமல் போகும்.

இத்தனை நேசங்களை சிலாக்கியங்களை அவரிடமிருந்து பெற்றுக் கொண்ட நாம் 'உனக்காக நான் மரித்தேனே! எனக்காக நீ என்ன செய்தாய்' என்ற ஓர் ஜீவசத்தம் இன்றும் கல்வாரி சிலுவையி லிருந்து அவர் மூலமாய் தொனித்துக் கொண்டேயிருப்பது உன் காதில் விழவில்லையா சகோதரனே! சகோதரியே!! ஆமாம். உன்னைத்தான் கேட்கிறார்.

எனக்காக நீ என்ன செய்தாய்? என் ஆடுகளை மேய்ப்பாயா? யார் எனது காரியமாய் போவான்? யாரை நான் அனுப்புவேன்? என்றெல்லாம் சொல்லி தாகமாயிருக்கிறேன்! என் தாகத்தைத் தீர்ப்பாயோ? என்று நல்ல மேய்ப்பனாக மந்தையில், இன்னும் வந்து சேராத ஆடுகளுக்காக பரிதவிக்கிற நம் நேச மணாளனுக்காக நீயும் நானும் செய்த தென்ன? செய்யப் போவதென்ன? வென்பதை சிந்தித்தே ஆகவேண்டும்.

'மனுஷனே, நம்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார். நியாயம் செய்து இரக்கத்தை சிநேகித்து உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தை கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார் மீகா:6:8

இதே வார்த்தைகளை பின் பற்றி, அப்போஸ்தலர் **10.38ல்–** நசரேயனாகிய .இயேசுவை தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையால் அகப்பட்ட யாவரையும் குணமாக்கு கிறவறாயும் சுற்றித்திரிந்தார்'.

'இப்படியே இயேசுவின் வழியிலே நாமும் நடந்து நன்மை செய்கிறவர்களாய் பிசாசின் வல்லமையால் அகப்பட்டு பாவத்தில் வீழ்ந்துகிடக்கும், பாவத்திலிருந்து விடுபடவிரும்பியும், விடுபட முடியாமலிருக்கும் விக்கிரங்களின் கட்டுகளினாலே சிக்கிச் சீரழிந்து வாழ்ந்துகொண்டிருக்கும் ஜனங்களை அசுத்த ஆவியின் பிடியில் உள்ளோரை– இயேசுவை பற்றி சற்றேனும் கேள்விபட்டிராத ஜனங்களை சந்தித்து அவர்களை இயேசுவின் விலையேரப்பெற்ற நாமத்தால் விடுவித்து மீட்க வேண்டும்' என்பதே அவரது பிரதான விருப்பம். ஒரு பாவி மனம்திரும்புவதன் மூலம் பரலோகத்திலே.... நம் நேசமணாளனின் இராஜ்யத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாகிறது என்று சொல்லப்பட்டபடியே நேசமணாளன் இம் மண்ணுலகிற்கு வந்து பட்ட பாடுகளின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக காத்திருப்போம்! பதிவிருப்போம் தூங்காமல் விழித்திருப்போம்!! லூக்கா:14:21:23ல் சொல்லப்பட்டபடி

'நீ பட்டணத்தின் தெருக்களிலும், வீதிகளிலும், சீக்கிரமாய் போய் ஏழைகளையும், ஊனரையும் சப்பாணிகளையும், குருடரையும் இங்கே கூட்டிக் கொண்டுவா...

'...நீ பெருவழிகளிலும் வேலிகளருகிலும் போய் என் வீடு நிறையும் படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்தி கூட்டிக்கொண்டு வா' என்ற நம் நேசரின் பிரதான கட்டளைக்குச் செவிகொடுப்போம்.

அழைக்கப்பட்டோர் அநேகர், இம்முக்கிய காரியத்தில் சாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டிருந்து,

வீட்டு எஜமானாகிய நம் நேசருக்கு கோபமூட்டுவதும்,
தாங்கள் போக வேண்டிய வழித்தெரியாமல் போனதும்
உனக்குத் தெரியாத காரியமல்ல.... சகோதரனே! சகோதரியே!!

வா, உன் உலக காரியமான வலையையும், படகையும்
சற்று ஓரங்கட்டிவிட்டு உனக்கு இருக்கும் கொஞ்சபெலத்தில்
உனக்கிருக்கும் கொஞ்ச நேரத்தில், இயன்றதையாவது செய்ய
இறைமகனாம் நம் நேசருக்காய் இன்றேத் துவங்குவோம்.

நம் உறவினர், அயலகத்தார், தெருவாசிகள், உற்றார்,
ஊரார் எனத் தெருத் தெருவாய் ஊர் ஊராய் முடிந்தால்
பிரதேசங்களை கடந்து சென்று முடிந்தவரை பரிந்து பேசு இயேசுவின் சுவிஷேசத்தை!.

நீ கையிலெடுத்திருக்கும் இரட்சிப்பின் பாத்திரமும்
உன் போக்கும் சிலருக்கு பரியாசமாகத் தெரியலாம் சகோதரனே!
நீ பெறப் போகிற ஆசீர்வாதங்களும் இம்மைக்கும்
மறுமைக்குமுள்ள மேலான பொக்கிஷங்களும்
நீ பெற்ற, பெறப் போகிற விலையேறப் பெற்ற அபிஷேகமும்,
வாடாத ஜீவகிரீடமும் நித்திய ராஜ்யமும்
அவர்களுக்கு எங்கேத் தெரியப்போகிறது?

ஆமாம் நம் நெஞ்சமெல்லாம் பரவசமடைந்து நம்
எலும்புகளுக்குள் பற்றியெரியும் ஆத்மநேசரின் நேச அக்னி
முடிவு பரியந்தம் அவியாமல் எரிந்துகொண்டேயிருக்கட்டும்.

4-4
எலும்புகளுக்குள் பற்றி எரியும் நேச அக்கினி

பர்வதங்களை மெழுகு போல் உருகச் செய்கிற, நம் நேசரின் வார்த்தையாகிய அக்கினி ஒரு மனிதனுக்குள் வந்துவிட்டால் அவன் தனது சுயமும்–பாவக் கிரியைகளும் சுட்டெரிக்கப்படுவதை உணர்ந்து உன்னதரின் மெய்யான ஒளியால் பிரகாசிக்கத் தொடங்குகிறான்.

அதனால் தான் தேவனாகிய கர்த்தர். எரேமியா :23:29ல்
'என் வார்த்தை அக்கினியைப் போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப் போலும் இருக்கிறதல்லவோ?' என்கிறார்
அசையாத கன்மலை போன்ற மனிதர்கள், அவரது வார்த்தையாகிய அக்கினிக்கு முன்னால் மெழுகுபோல் உருகுவதோடு பற்றி எரியத் தொடங்கிவிடுகின்றனர்.

இதைத்தான் லூக்கா: 12:49ல்
'பூமியில் மேல் அக்கினியைப் போடவந்தேன். அது இப்போதே பற்றியெரிய வேண்டுமென்று விரும்புகிறேன்' என்றார்.
நமக்குள்ளேப் போடப்பட்ட, நம் இரட்சகரின் ஜீவ வார்த்தையாகிய அக்கினி அனலுமின்றி, குளிருமின்றிப் போய் விடாமல் பற்றியெரிய வேண்டும். மரக்காலின் கீழேயுள்ள விளக்காய் அல்ல, மலை மேலுள்ள பட்டணமாக நாம் பிரகாசிக்க வேண்டும்' என்றே தேவன் விரும்புகிறார்.

பலீபிடத்தின் மேல் அக்கினி எப்படியெரிய வேண்டும் என தாசனாகிய மோசேக்குத் தேவன் சொல்லும் போது
'பலிபீடத்தின் மேலிருக்கிற அக்கினி அவியாமல் எரிந்து கொண்டிருக்க வேண்டும். ஆசாரியன் காலை தோறும் அதன் மேல் எரியும்படி கட்டைகளைப் போட்டு அதன் மேல் சர்வாங்க தகனபலியை

வரிசையாக வைத்து அதன் மேல் சமாதான பலிகளின் கொழுப்பைப் போட்டுத் தகனிக்கக் கடவன்.'

'பலிபீடத்தின் மேல் அக்கினி எப்போதும் எரிந்து கொண்டேயிருக்க வேண்டும் –அது ஒருபோதும் அவிந்து போகலாகாது.
லேவியராகமம்: 6;12:13 என்று சொல்லப்பட்டபடியே.....

ராஜாக்களும், ஆசாரியர்களுமாகிய நாம் எப்படி–
பரிசுத்தமா யிருக்க வேண்டிய நம் இருதய பலிபீடத்திலே
அக்கினி அனைந்து போகாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.
காலைதோறும் எரிகிற கட்டைகளாய் எப்படி
வேதத்தை தியானிக்க, ஸ்தோத்திர பலியை ஏறெடுக்கவேண்டும்.
கொழுப்பை தகனிப்பது போல் நம் சுயத்தை
எப்படி சுட்டெரிக்க வேண்டும்? என்பதை வேதம்
நமக்குத் தெளிவாக விளக்குகிறது.

'உயரத்திலிருந்து என் எலும்புகளில் அக்கினியை அனுப்பினார். அது அவைகளில் பற்றியெரிகிறது. புலம்பல் :1:13

'...அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைப்பட்டு எரிகிற அக்கினியைப் போல் என் இருதயத்தில் இருந்து அதை சகித்து இளைத்துப் போனேன். எனக்குப் பொறுக்கக் கூடாமற் போயிற்று. எரேமியா:20:9P

ராஜாக்களுக்கும், இஸ்ரவேல் ஜனங்களுக்கும், எரேமியா
தீர்க்கதரிசி மகா எச்சரிப்பான தேவ வார்த்தைகளைச்
சொல்லும் போதும் ஏற்பட்ட தனிமை, சிறை,
காவல்கூடம், பாழும்கிணறு போன்ற
வேதனையான அனுபவங்களை கண்டு,
மகா துயரமும் வேதனையயும் அடைந்தபோதிலும்,

தேவனாகிய கர்த்தர் உயரத்திலிருந்து எரேமியாவின்
எலும்புகளுக்குள் அனுப்பிய அக்கினியானது அவரது

வார்த்தைகளை, எத்தனை சோதனைகள், வேதனைகள் வந்தாலும் தன்னால் பிரஸ்தாபம் பண்ணாமல் இருக்கமுடியவில்லை என்பதை மிக அழகாக விளக்குகிறார் எரேமியா தீர்க்கதரிசி.

உன்னதரின் அழைப்பையும், அபிஷேகத்தையும் அவரது புத்திர சுவிகார ஆவியையும் பெற்றிருக்கிற சகோதரனே! சகோதரியே!! உனக்குள்ளே ஒரு நேச அக்கினி பற்றியெரிகிறதா?

கோரக்கல்வாரி சிலுவையிலே வாரினாலும் சவுக்கினாலும்
அடித்து நார் நாராய் கிழிக்கப்பட்ட உடலோடு
உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த மகாத் துயர சூழ்நிலையிலும்
'உன்னையும் என்னையும் யுக ஜனங்களையும் நினைத்து, 'தாகமாயிருக்கிறேன்'
என்ற அவரது கதறலின் நேசம்
உனது உலர்ந்த உணர்வுகளை உயிரடையச் செய்யட்டும்.
அவரது உண்மையான தாகத்தை புரிந்து கொள்ளாதோர்,

அவரது தாகத்திற்காக–கடற்காளான் காடியை அவருக்குக்
குடிக்கக் கொடுத்து–தங்கள் கண்களை தாங்களேக்
கெடுத்துக் கொண்டவர்களைப் பற்றி சிந்தித்து சோர்ந்து போகாதே!
உன் இதய பலிபீடத்து அக்கினி ஆவியால்
அனல் கொள்ளட்டும். உற்றார்,

உறவினர், ஊரார், தேசத்தார் என்று அக்கினிமயமான
தேவ வசனங்களை எல்லோரும் அறிந்துகொள்வதற்காக
உன் சுயமென்கிற பானையை உடைத்துவிட்டு
பட்டயமாகிய வேத வசனத்தை கையிலேந்தி
சுவிஷேசமாகிய தீவெட்டியை பிடித்து...
புதிய யெருபாகாயாய் நீ... புறப்படுகிற வேகத்தில்
பட்டணங்கள் குலுங்கப்போகிறது...
தேசங்கள் அதிர்ந்து நடுங்கி அசையப்போகிறது.

நீ உறுவ நடக்கிற தேசத்தின் வீதிகளெல்லாம்
உன் முன்னே தேவாதி தேவனைப் பணிந்துகொண்டு
உன்னோடே மாத்திரம் தேவன் இருக்கிறாறென்று எண்ணி
உன் வார்த்தைகளினாலே... உன் ஆத்தும நேசரைப்
பின்பற்றுவதை உன் கண்களேக் காணப்போகிறது.
உன்னைக் காண்கிறவர்கள்–நேசரைக்கண்டு
உலகத்தைக் கலக்குவோர்
இங்கேயும் வந்துவிட்டார்களென்று அஞ்சி நடு நடுங்கி
உன் முன்னே வீழ்ந்து பணிவார்கள். நம் நேச இரட்சகரை!
இராஜாக்களும் ஆசாரியருமாக நீ நின்று
உன் இருதய பலிபீடத்திலே இந்நேச அக்கினி
அணைந்து போகாமல் எரிந்து கொண்டிருப்பதைப் பார்த்துக்கொள்.
சுய மாம்சிகமென்கிற கொழுப்பை நீ
தகனித்த மாத்திரத்திலே
நகைப்பு, பரியாசம், அடி, அவமானம் அனைத்தையும் மீறி
உன் எலும்புகளுக்குள் ஒரு அபிஷேக அக்கினி
பற்றியெரிந்து பொங்குமாங்கடலைப் போன்று
தேவ வல்லமை மிக்க அபிஷேகத்தோடு நீ எழுந்து
புறப்படுவதை எந்தக் கொம்பனாலும்,
பலவானாலும் தடுத்து நிறுத்த முடியாது.

4-5
என் பிரியமே! எழுந்துவா!!

தனி மனிதனாகவோ! அல்லது பெரிய படை பரிவாரமாகவோ...
நாமாக சென்று எதையும் சாதித்து விட முடியாது!
ஆனால் உலர்ந்த எலும்புகளையும் உயிரடையச் செய்து
மகா சேனையாய் எடுத்து நிறுத்துகிற கர்த்தரின்
வல்லமை மிக்க கரம் நம்மோடு இருக்குமானால்— நம்மால்
செய்யமுடியாத காரியம் ஒன்றுமே கிடையாது.

நாம் கர்த்தரோடு இருந்தால் அவரும் நம்மோடிருப்பார்.
நாம் அவரை விட்டு விட்டால் அவரும் நம்மை விட்டு விடுவார். கர்த்தர் நம்மோடிருக்கும் போது நாம் தாவீதைப்போல
கொஞ்ச ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தாலும் சரி...
உலகமாகிய பாபிலோன் அரண்மனை கைதிகளாக தானியேலைப் போல் கொண்டு செல்லப் பட்டிருந்தாலும் சரி, உற்றார், உடன்பிறந்தோரால் குழியிலே எறியப்பட்ட யோசேப்பைப் போன்றிருந்தாலும் சரி, தேவதாசர்களைப் போன்று நாமும் தேவனோடிருந்தால்

அவரது நேசத்தை உணர்கின்ற அவரது சத்தத்தை கேட்கிற
'அவர் இடது கை என் தலையின் கீழ் இருக்கிறது, அவர் வலதுகை என்னை அணைத்துக்கொள்கிறது.' **உன்னத:2:6**
என்றெல்லாம் அவரது நேசத்தை அனுதினமும் உணருகிற
நாம் அவரது சத்தத்தில் பிரதிபலிக்கும் சித்தத்தை அறிந்துகொள்வோம்.

'என் நேசர் என்னோடு பேசி, என் பிரியமே! என் ரூபவதியே! எழுந்துவா! இதோ மாரிகாலம் சென்றது, மழைபெய்து ஒழிந்தது. பூமியிலே புஷ்பங்கள் காணப்படுகிறது. குருவிகள் பாடும் காலம் வந்தது. காட்டுப் புறாவின் சத்தம் நமது தேசத்திலே கேட்கப் படுகிறது.

'திராட்சை தோட்டத்தைக் கெடுக்கிற குழி நரிகளையும் சிறு நரிகளையும் நமக்குப்பிடியுங்கள், நம்முடைய திராட்சை தோட்டங்கள் பூவும் பிஞ்சுமாயிருக்கிறதே. உன்னதப்பாட்டு **:2:10:11:12:15**

என் பிரியமே! என் உத்தமியே!! என்று நேசத்தோடு அழைத்து
இதுதான் சரியானகாலம், தேசம் திறந்து கிடக்கிறது
எழுந்துவா! பூவும் பிஞ்சுமாயிருக்கும் நேசரின் திராட்சைத் தோட்டங்களை கெடுக்கும் குழிநரிகளைப் பிடியுங்கள்,

மெய்யான திராட்சை செடியாகிய நம் நேசரோடிருந்து
கனிகொடுக்கிற கொடிகளை கனிகொடாமல் தடுக்கிற
சுவிஷேசம் தேசமெங்கிலும் பரவ தடையாக இருக்கிற
எந்த சக்தியானாலும், அது எந்த ரூபத்தில் வந்தாலும்
அது குழிநரியாகவோ, குள்ள நரியாகவோயிருந்தாலும்
அவற்றையும் பிடித்து அவற்றின் வாலிலேயும்
சுவிஷேசமாகிய பந்தத்தை வைத்துக்
கொழுத்தி விடுவோம். வலி பொறுக்காது ஓடியாவது,
பெலிஸ்தியரின் வெள்ளாண்மையாகிய
சுவிஷேசவிரோத மூடநம்பிக்கைகளை
அவை கொழுத்தட்டும்.

ஆமாம்! சகோதரனே!! இது சரியான காலம்!!!
மாரிகாலம் சென்று, மழை ஒய்ந்து
பூத்துக் குலுங்கும் புஷ்பங்களும்,
பாடும் குருவிகளும், சத்தமிடும்
காட்டுப் புறாக்களுமாக
தேசம் கலகலத்துக் கொண்டிருக்கிற
மிகச்சரியான காலமிது,

என் பிரியமே! எழுந்து வாவென்று
நேசரின் சத்தம் கேட்டு, அடைக்கப்பட்ட
தோட்டமாகிய உனக்குள்ளிருந்து
நம் நேசருக்காய் நற்கனிகள் உண்டாகட்டும்
மறைவு கட்டப்பட்ட உனக்குள்ளிருந்து
இரட்சிப்பின் ஊற்றுகள் உற்பத்தியாகட்டும்.
முத்தரிக்கப்பட்ட கிணறாகிய உனக்குள்ளேயிருந்து
ஜீவதண்ணீர் பொங்கி பொங்கி வழியட்டும்.
தெற்கத்தி வெள்ளங்களைத் திருப்புவது போல் தேசத்தின்
ஜனங்களின் சிறையிருப்பை திருப்ப திறப்பிலே நிற்கிற
ஆத்தும நேசரோடு எழுந்துப்புறப்படுவோம்

4-6

கெம்பீரத்தோடே அறுப்போம்!

இப்போதெல்லாம் அநேகர் ஆண்டவனின் அழைப்பை ஏற்று, எழும்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டவர் பணி செய்வதற்காய்.. பாவம் பெருகுகிற இடத்திலே கிருபை பெருகும் என்ற படி தேசத்திலே அநேக அக்கிரமங்களும், துன்மார்க்கங்களும், சுவிஷேசத்திற்கும், தேவபிள்ளைக்கு எதிராக எதிர்ப்புகளும், வன்முறைகளும் பெருகிக்கொண்டிருந்தாலும் எந்த சக்தியாலும், எந்த அரசாங்கத்தாலும், தீவிர இயக்கத்தாலும் தேவனுக்காக வைராக்கியமாக புறப்படுகிற பிள்ளைகளைத் தடுத்து நிறுத்தவே முடிவதில்லை.

சுவிஷேச எதிரிகளெல்லாம்..., ஏன் இவர்களை ஜெயிக்க முடிய வில்லை எனத் தெரியாமல் குழம்பி குருட்டாட்டத்தில் திரிகிறார்கள்.

எலிசா தீர்க்கதரிசியைப் பிடித்துவிட வேண்டுமென்று– சீரியா ராஜா குதிரைகளையும், இரதங்களையும், பலத்த இராணுவத்தையும் அனுப்பியும் மலையிலே இருந்து தீர்க்கதரிசியை
பிடிக்கப் போனவர்கள் குருட்டாட்டத்தில் அகப்பட்டார்களே ஒழிய எலிசாவை பிடிக்கமுடியவில்லை.

இஸ்ரவேலின் தேவனை மறந்துபோன அசரியா ராஜாவை 'நீ ஏறிய கட்டிலிலிருந்து இறங்காமல் சாகவே சாவாய்' என்று
எலியா தேவ வார்த்தைகளைச் சொல்லியதால், எலியாவைப் பிடிக்கப்போன ஐம்பது ஐம்பது போர் வீரர்களும் சென்றபிறகும் அனைவரையும் வானத்து அக்கினியால் பட்சித்து சுட்டெரித்து எலியா தீர்க்கதரிசியை காப்பாற்றியது யார்?

ஆமானின் அதிகார, ஆணவ ராஜதந்திர பிடிகளிலிருந்து
சாதாரண மொர்தேகாயைக் காப்பாற்றி– அசாதாரண பேர், புகழ், பதவிகளைக் கொடுத்து உயர்த்தியது யார்?

தேவ ஜனங்களை மீட்பதற்காக 'செத்தாலும் சாகிறேன்' என்று புறப்பட்ட எஸ்தருக்கு–வரலாற்று சிறப்புமிக்க மேன்மைகள் வரக்காரணம் என்ன?
அன்புச் சகோதரனே! ஆண்டவருக்காக நீங்களும் நானும் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் முன்னும் நூறு அடிகளை எடுத்து வைத்து, நம் சேனாபதியாம் தேவன் நமக்கு முன்னே சென்று கோணலானவைகளை நேராக்குவதை நாம் காணலாம். நாம் அவர் நிமித்தமாகவும், சுஷேசத்தின் நிமித்தமாகவும் வைராக்கியத்துடன் செயல்படும் போது நமக்குள்ளே பெருகியிருக்கிற விசுவாசத்தை அனல் மூட்டி உன்னதருக்காய் உயிருள்ள கிரியைகளாய் வெளிப்படுத்தும் போது நமக்கு எதிரான போராயுதங்கள் வாய்க்காதே போகும்! எதிரிளுக்கு குருட்டாட்டம் பிடித்து, நமக்கு எதிரானத் தேசத்தின் சட்டங்களும், அதிகாரங்களும் அர்த்தமற்றதாய்ப் போகும்!.

உண்மையையும் உத்தமத்தையும் தேவ வைராக்கியத்தோடு காத்துக் கொண்ட விசுவாச வீரர் எவரையும் ஆமானல்ல, எந்தக் கோமானும் வென்றதாக சரித்திரமே கிடையாது. ஆண்டவருக்காய் உத்தமத்தோடு செயல்படத் துடிக்கிற அநேக வாலிபர்களை, உலக மேன்மை, ஆசா பாசங்கள் அணை போட்டு தடுப்பதை அநேகர் நன்குணர்வர். ஒன்றுமட்டும் நிச்சயம் சகோதரனே! சகோதரியே!! மெய்யான மேன்மை சந்தோஷம், சமாதானம், பேர், புகழெல்லாம் நாம் தேவனோடு இருந்தால் மாத்திரமே முழுமையாகப் பெற்று அனுபவிக்க முடியும்.

நீ அவருக்காக எதைக் கொடுத்தாலும் அதை வானத்திற்கும், பூமிக்கும், சமுத்திரத்திற்கும், அதிலுள்ளவைகளுக்கும் மொத்தச் சொந்தக்காரரான ஐசுவரிய சம்பண்ணர் அவற்றை திரும்பிக் கொடுக்காமல் கடனாளியாகி விடமாட்டார். மாற்கு: 10:28:29:30ல் பேதுரு நாங்கள் எல்லாவற்றையும் விட்டு

உம்மை பின்பற்றினோமே! என்று கேட்டதற்கு இயேசு,
'விட்டவைகளை நூறத்தனையாகவும் அதோடு நித்திய
ஜீவனையும் பெறுவீர்கள் என்று நேரடியாகவே பதிலளித்தார்.

ஆமாம். சகோதரனே! சகோதரியே!!
நாம் எதை விதைத்தோமோ அதைத்தான்
அறுவடை செய்து கொள்ள முடியும்! ஈசாக்கு விதை விதைத்தான்.
நூறுமடங்கு ஆசீர்வதிக்கப்பட்டான்– அவரது தந்தை ஆபிரகாம்,
தனது ஒரேப் பேரான குமாரன் ஈசாக்கையே... விதையாக
விதைக்கத் துணிந்து மோரியா மலையிலே பலியிடச் சென்றவர்
தனது ஒரே புத்திரனையே தேவனுக்காய் பலிபீடத்தில்
பலியிடத் துணிந்தமையால் – நூறு ஆயிரம் மடங்கல்ல
கடற்கரை மணலத்தனையாய் –எண்ணமுடியாத
வானத்து நட்சத்திரங்களையொத்த எண்ணிறைந்த ஜாதிகளுக்கு
தகப்பனானானே எப்படி?

கிரியை மிகுந்த விசுவாசம்.... காலமெல்லாம் வெறும்
ஆடல் பாடல் பரவசத்தோடு விசுவாச வாழ்வு நின்றுவிடாமல். தேவன்
பேரிலிருந்த பற்று பாசத்தினால் அவரது சித்தத்திற்கு கீழ்படிந்த ஆபிரகாமைப்
போல்–நாமும் நமது விலையேறப் பெற்ற ஈசாக்குகளை பலிபீடத்தில்
சமர்ப்பிப்போம்.
பொங்குகிற கடலைப் போன்று பொங்கியெழும்
நம் நேச வைராக்கியத்திற்கு எதிராக.... எதுவந்தாலும்
நாம் பின்னிட்டுப் பாராமல்– பரமன் இயேசுவின்
ஆத்தும அறுவடைப் பணியில் முன்னேறுவோம்!
அவர் இவர் என்று சாக்குபோக்கு சொல்லாமல்...
விசுவாசிகள் அத்தனைபேரும் சுவிஷேச வேலை செய்து தேவராஜ்யத்தை
ஆத்துமாக்களால் நிரப்பவேண்டிய
பொன்னான வேளையிதுவென்பதை மறந்துவிடாதிருப்போம்.

விதைப்போம் – நம் முதற்பேறுகளை,
விதைப்போம் – நம் ஒரேப்பேரான ஈசாக்குகளை,
விதைப்போம் – நமக்குள்ள எல்லாவற்றையும்

ஜீவனையே விதைத்தாவது ஜீவாதிபதியாம் நம் நேச மணாளனைப் பெற்றுக் கொள்வதற்காய் ஆயத்தமாவோம். எழுந்து புறப்படுவோம். உலக மாம்சீக உறவு மேன்மை யெல்லாம் மறந்து–அதோ வாசற்படியில்–நேச மணாளன்–யோசித்தால்–நின்றால்–நடந்தால் முடியாது.... ஓடியேபோய் விடுவோம்.

4-7
என் நேசரோடு ஓடிப்போகாமல் இருக்க முடியவில்லை...

எனது உலக பூர்வமான வாழ்க்கையில், நான் மிகவும் சந்தோஷமாக இருந்த காலம். நூறுமடங்கு ஆசீர்வதிக்கப் பட்டிருந்த நேரம் அது. வீடு, மனைவி, மக்கள், சொத்து, தொழில், அரசியல், உலகமென மிக அதிகமாக மகிழ்ந்த காலம். நிஜமாகவே என் வாழ்க்கையில் கனவிலும் நான் நினைத்துப் பார்க்காத வசதியான சூழ்நிலையில் இருந்தேன். எனது 40ஆம் வயது வேளை அது. இரவுபகலாக உழைக்கும் குணம் கொண்ட நான் ஒரே நேரத்தில் அரசுபணி, லாபகரமான தொழில், அரசியல் வழக்கறிஞர் பணியென முன்னேறிக் கொண்டிருந்தேன். மாதந்தோறும் 8 நாளில் 16 மாவட்டங்களுக்கு மூலிகை மருத்துவ பிஸினஸ் செய்ததால் மாதம் அரை லட்சம் வரை வந்த வருமானம் விரைவில் இலட்சத்தை தாண்டும் வாய்ப்பிருந்தது. அரசு போக்குவரத்து கழகத்தில் கம்யூட்டர் ஆடிட் பிரிவில் சந்தோஷமான பணி செய்துவந்த எனக்கு வழக்கறிஞர் கல்வி கற்றிருந்ததால் விசாரணை அதிகாரியாகும் வாய்ப்பிருந்தது. எனது வீட்டிலுள்ள எனது வழக்கறிஞர் மற்றும் அரசியல் அலுவலகத்தில் பேசிமுடிப்பது, சமரசம் செய்தல், காவல்நிலையம் செல்லுதல் போன்ற வகைகளில் கோர்ட்டுக்கு போகாமலே வழக்கறிஞர் பணி சந்தோஷமான அனுபவத்தையும் கௌரவத்தையும் தந்தது. அதோடு அரசியல் கட்சியில் இருந்த நான் உயர் பதவிகளுக்கு

வரவேண்டும் என்பதற்காகவே வழக்கறிஞர் கல்வி கற்றேன். அரசியலில் நான் நடத்திய நிகழ்ச்சிகள்– காண்போர் ஆச்சரியப்படும் அளவில் தினசரி நாளிதழ்களில் எனது போட்டோவுடன் வெளிவந்தது. நுற்றுக்கணக்கில் இருப்பதுடன் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் பிரச்சாரத்திற்காக நான் ஒரு மணிநேரம் பேசிய 1000 ஆடியோ கேசட்டுகள் வெளியிட்டேன். கடந்த சட்டமன்ற தேர்தலிலே எனக்கு எம்.எல்.ஏ. (M.L.A) சீட் வேண்டுமென சென்னை கட்சி அலுவலகத்தில் பணம் கட்டினேன் தொடர்ந்து அரசியலிலும் முன்னேறுவேன் என 100% நம்பி செயல்பட்டேன்

சுறுசுறுப்பு விரைவு ஒய்வின்மை ஒரளவு புத்திசாலித்தனத்தோடு மேற்கண்ட நான்கு வேலைகளையும் ஒரே பொழுதில் நான் செய்துவந்தது இன்னும் என்னோடிருக்கிற பல நண்பர்கள் நன்கு அறிவர். கடுகளவு கூட எந்தவிதத்திலும் கவலையில்லாமலும் உலக மேன்மை சொத்து பணம் தொழில் என எவ்வளவுக்கெவ்வளவு எனது சூழ்நிலை உயர்ந்து கொண்டிருந்ததோ அவ்வளவுக்கு நம் நேசக்கர்த்தர் எல்லோரிடமும் போல் என்னிடமும் தேவ வசனங்களால் இடைபட ஆரம்பித்தார்.

மெல்ல மெல்ல சிந்திக்க ஆரம்பித்தேனன். ஒன்றுக்கும் உதவாத ஹோட்டலில் மாவரைத்து தண்ணீர் எடுத்து வாழ்ந்த என்னை என் ஆத்தும நேசர் எதிலும் எவரிடமும் தோற்றுப்போகாதபடி நேசித்து நேசித்து உயர்த்திய நேசத்தை நினைத்து நினைத்து என் நெஞ்சமே நேசத்தால் கொழுந்துவிட்டெறிய ஆரம்பித்தது.
“என் நேசர் என்னோடே பேசி என்பிரியமே என் ரூபவதியே எழுந்துவா இதோ மாரிக்காலம் சென்றது மழை பெய்து ஒழிந்து பூமியிலே புஷ்பங்கள் காணப்படுகிறது குருவிகள் பாடும் காலம்

இனி என்ன செய்ய வேண்டும்?
சுயகௌரவங்களைச் சுட்டெரித்து–அரசியல், வழக்கறிஞர் பட்டம், மிக்க ஆதாயம் தந்த தொழில் அனைத்தையும் விட்டு விட்டு இறுதியில் எனது சந்தோஷமான அரசுபணியையும்
'உலக இரட்சகராம் இயேசுகிறிஸ்துவின் சுவிஷேசத்தை உலகமெங்கும் அறிவிப்பதற்காகவே ராஜினாமா செய்கிறேன்' என்று எழுதி போட்டுவிட்டு அனைத்தையும் நஷ்டமும் குப்பையுமென்றெண்ணி இன்றைய காலகட்டத்தில் அநேக பிரச்சனைகளும் துன்பங்களும் உள்ள மாநிலமான ஒரிசா மாநிலத்தை நோக்கி மிஷனரி ஊழியம் செய்வதற்காக முதலில் எனது A/c SANTRO காரை விற்று எடுத்துக்கொண்ட பணத்தோடு மேலும் ஆகும் மிஷினரி பணித்தள செலவிற்காக சொத்தில் சில பகுதியை விற்று சுமார் 30 லட்சம் ரூபாயை ஆண்டவருக்காக செலவிட வேண்டும் என்ற தீர்மானத்தோடு ஒரிசா மாநிலத்திற்கே புறப்படலானேன். வேரெல்லா முடிவுகளை எடுக்கும் போதும் சற்றேனும் கவலைப்படாத என் அன்பு மனைவியும் உறவினர்களும் என் பிரிவை தாங்காது மிகுதியாக அழுதனர்.

புறப்பட, புறப்பட அழுகை! கண்ணீர்!! எந்த ஆறுதலும் என்னால் சொல்லமுடியாத சூழலில் என் கண்கள் கண்ணீரால் நிரம்பியது.
'மரணத்தைவிட வலிய, பாதாளத்தைப் போல் கொடியதான என் நேச வைராக்கியத்தினால் என்னால் பொறுத்திருக்க முடியவில்லை' என்ற சூழ்நிலையில், 'என்னால் முடியவில்லை...' 'நான் என்ன செய்வேன்... என்னால் புறப்படாமல் இருக்க முடியவில்லை' என்று சொல்லி என் அன்பு நெஞ்சங்களை நேசரின் பொறுப்பில் விட்டு, விட்டு மும்முரமான யுத்த காலத்தில் குடும்பத்தாரிடமிருந்து விடை பெறும் யுத்த வீரனாய் அதேச்சமயம் போகிற இடத்தை முன்பின் பார்த்திராத ஒரிசாவின் ரூர்கேலா பகுதிக்கு ஆத்துமநேசராம் இயேசுவின் கரங்களைப் பற்றிக் கொண்டு

புறப்பட சிறுபிள்ளையாய் வந்து சேர்ந்தேன்.
எனது அன்பு நண்பர்கள் உறவினர்கள் அனைவரும் இந்த திடீர் மாற்றத்தை, இரட்சிப்பின் புறப்படுதலைக் குறித்து காரணம் கேட்டார்கள். என்ன சொல்லுவேன், உண்மையாய் ருசித்தவர்களுக்கு மட்டும் அந்த அன்பைப்பற்றி தெரியும்.

மரணத்தைபோல் வலியதும் பாதாளத்தைபோல் கொடியதுமான ஆத்தும நேசரின் நேசவைராக்கியம் என்னைப் பற்றிப்பிடித்ததாலே என்னால் இருக்கமுடியவில்லை சாப்பாடு தட்டு முதற்கொண்டு ஸ்டவ்அடுப்பு வரையிலும் மூட்டைக்கட்டி என் தோழிலே சுமந்த படியே அருமை நண்பர்கள் Dr.Y.R.மனேக்ஷா, சுவிஷேசகர் பாபுஜேக்சிங், அன்பு சகோதரர் ரெமி ஆகியோர் வழியனுப்ப முதல்முறை என்னோடு புறப்பட்ட சகோதரர் S.S.ராஜ் அவர்களோடு ரயில்வண்டி ஏறி குடும்பத்தாரின் கண்ணீரையும் மீறி என் ஆத்மநேசரோடு ஒரிசாவுக்கே ஓடிவந்துவிட்டேன்

எதையெல்லாம் இழந்தாலும், எந்த சூழ்நிலையென்றாலும்—ஒரு நூறு பாசமிக்கத் தாய்மடிகள் தரமுடியா நேசத்தை—
உண்மை சந்தோஷத்தை நேசமணாளனின் நேசத்தால் பெற்று நம் நேசருக்குள் மகிழ்ந்து மகிழ்ந்திருக்கிறேன்.

பரலோக ராஜ்யத்தைப் பலவந்தப்படும் தீவிரம்! 5

யோவான் ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோக ராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது. பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள். மத்தேயு: 11:12

மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபத்திருக்கிறது
என்று பிரசிங்கித்து வந்த, நமது அருமை இரட்சகர் இயேசு,
யார் பரலோக ராஜ்யத்தை பெற்று பிடித்துக் கொள்ள முடியும், என்றொரு பகீரங்கமான விளக்கம் தருகிறார்,
பரலோக ராஜ்யம் எதற்கு ஒப்பானது? பரலோக ராஜ்யம்
என்றால் என்ன? அது எப்படி ஜோடிக்கப்பட்டிருக்கும்?
அதற்கு சுதந்திரவாளிகள் யார்? என்றெல்லாம்
சுவிஷேச புத்தகங்களிலே அற்புதமான விளக்கங்களை
தருகிற, அருள் நாதர் இயேசு தருகிற இந்த விளக்கமும்
மிக ஆழமாய் சிந்திக்க வேண்டியதே!

பரலோக ராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது.
பரலோக ராஜ்யத்தை யார்? எப்படி? பலவந்தம்
செய்கிறார்கள்? எப்படி பிடித்துக் கொள்கிறார்கள்?
அதற்காக நாம் என்ன செய்வது?

இங்கே யோவான் ஸ்நானனைப் போன்று நாமும்
நம்மோடிருக்கும் ஜனங்கள் மற்றும்
தேசத்து ஜனங்களின் இதயங்களில் இரட்சகராம் இயேசு பிறக்க– வந்து தங்க வழியை ஆயத்தப்படுத்த, பாதைகளை செவ்வைப்படுத்த அழைக்கப்பட்டவர்கள் என்பதில் சந்தேகமில்லை

5-1
பலவந்தப்படுத்துவோர்:

இங்கேதான் வேதத்திலே சொல்லப்பட்ட –
நல்ல போராட்டத்தைப் போராடு!
சர்வாயுத வர்க்கங்களைத் தரித்துக் கொள்.
நமது போராயுதங்களும், போராட்டங்களும் எத்தகையது? நமது எதிரியானவன் எப்படிப் பட்டவன்? இராஜ்யம், சேனை, யுத்தம், ஜெயம், ஜீவகிரீடம், சிங்காசனம் போன்ற மேலான பாக்கியங்களைக் குறித்து ஆழமாய் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

மகிமையின் இராஜாவாம் நம் நேசர் இயேசு, உட்பிரவேசிக்க வழியை ஆயத்தப்படுத்த – பாதையை செவ்வைப்படுத்த, பள்ளங்களெல்லாம் நிரப்பப்பட்டு, மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்பட்டு, கோணலானவைகளும், கரடானவைகளும் சீராக்கப்பட வேண்டுமே!
சீர் கெட்ட ஆத்துமாக்களை... உறுவ குத்தாமல், நொறுங்கச் செப்பனிடாமல், காடுகளையும், கோணலையும் சீராக்காமல்– அதற்கு ஒரு பலவந்தம் – தீவிரம் - பலாத்காரம் ஒன்று சேர்ந்த ஓர் ஆவிக்குரிய வைராக்கியமின்றி – ஜனங்களை சாத்தானின் கோரப்பிடியிலிருந்து எப்படி விடுவிக்க முடியும்?
அந்த–காரலோகாதிபதியாகிய சாத்தானோடும், அவன் சேனையோடும் போராட்டமென்பதும், ஒரு தீவிர யுத்தமே! என்பதை மறுக்க முடியாது!
ஒரு மெய்யான பலவந்தமும், தீவிரமும் யோவான் ஸ்நானன் ஊழியத்திலே காணப்பட்டது. அதனால் தான்
'ஞானஸ்நானம் பெற வந்த திரளான ஜனங்களை நோக்கி விரியன் பாம்பின் குட்டிகளே! வரும் கோபத்திற்கு தப்பிக்கொள்ள உங்களுக்கு வழி காட்டினவன் யார்?' லூக்கா:3:7 என்று ஜனங்களை பார்த்து 'விரியன் பாம்பின் குட்டிகளே! என்றும் வரும் கோபத்திற்கு தப்பிக்கொள்ள உங்களுக்கு வழி காட்டினவன் யார்?' என்றும், எச்சரித்தது –எவ்வளவு மகாத் தீவிர வார்த்தைகள்! தொடர்ந்து, வரி வசூலிப்பவரும், காவலரும், அரச சபை சார்ந்தோரும், தேவாலய நிர்வாகிகளும் கூடியிருந்த கூட்டத்தை பார்த்து–.

'இப்பொழுதே கோடாரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது. ஆகையால் நல்ல கனி கொடாத மரங்களெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலேப் போடப்படும்' என்றான். லூக்கா: 3.9

யாதொருவன் மனந்திரும்புதலுக்கேற்ற நல்ல கனி கொடா திருந்தால்.... வேரருகே இருக்கின்ற கோடாரியால், மரத்தைப் போன்று வெட்டப்பட்டு அக்கினியிலேப் போடப்படுவான். என்று அறை கூவல் விட்டு பலவந்தமான எச்சரிப்பின் குரலாக செயல்பட்டான் யோவான் ஸ்நானன்.
அப்படியானால் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்ட, ஆயக்காரரையும், போர்ச்சேவகரையும், அந்தஸ்து மிக்கவர் களையும் பார்த்து, இரண்டு அங்கிகளையுடையவனும், ஆகாரத்தைவுடையவனும், இல்லாதவனுக்கு கொடுக்கக் கடவன், என்று நற்கிரியைகளை செய்ய அறிவுருத்தியதோடு, அவர்கள் செய்து வரும் பாவங்களை கடுமையாக சுட்டிக்காட்டி, அவர்கள் இருதயத்தில் உறுவகுத்துவது போல் உணர்த்திக் காட்டினான்.

அதோடு, என்னிலும் வல்லவராய் எனக்குப் பின்னே வருகிறவர், கோதுமைப் போன்றோரை, அவரோடு சேர்த்துக் கொண்டு, கீழ்ப்படியாத பதரைக் போன்றோரை அவியாத அக்கினியில் சுட்டெரிப்பார், என்று பிரசங்கித்ததோடு தேசாதிபதியாகிய ஏரோது செய்த விபச்சார பாவத்தை அவன் அதிகாரமிக்க தேசாதிபதியென்றும் பாராமல் தீவிரமாக அவன் இரகசிய பாவங்களை வெளிப்படுத்தி தனது ஊழியத்தில் மிகத் துணிச்சலான காரியங்களைச் செய்தான்.
இங்கே யோவான் ஸ்நானன் பிரசங்கங்களிலே....
ஒருத் தீவிரமும் பலவந்தமுமான அணுகுமுறை காணப்படுகிறது.
ஜாதிப் பெயரைச் சொல்லிப் பேசுவதும், மகளிர் மனதை புண்படுத்தும் படியாகப் பேசுவதும் – மிகக் கடுமையாக தண்டிக்கப்படுகிற இக்கால வழக்கம் போல்–

அக்காலத்திலும் ஜனங்களைப் பார்த்து–
விரியன் பாம்பின் குட்டிகளே! என்றும், கோதுமைப் பதர் என்றும்
அக்கினியினாலே சுட்டெரிக்கப்படுவீர்கள், கோடாரியினால்
மரம் போன்று வெட்டிச் சாய்க்கப்படுவீர்கள், என்றும்
தேசாதிபதியைப் பார்த்து– நீர் விபச்சாரக்காரர், என்றும்
எச்சரிப்பது எவ்வளவு பலமான தீவிரவாதச் செயல்?
விரியன் பாம்பின் குட்டிகளே என்றும்! வெட்டிச் சாய்க்கப்படுவீர்கள், சுட்டெரிக்கப்படுவீர்கள் என்றும் எச்சரிப்பது
மன்னராட்சிக் காலங்களிலே... சாதாரணத் தீவிரவாதமல்ல....!

அதனால் தான் உலகமும் யோவான் ஸ்நானனை
தீவிரவாதி போல் சிறையில் தள்ளி, தலையையே வெட்டியெடுத்தது. இளமைப் பருவத்திலேயே ஸ்நானகன், இவ்வுலக வாழ்வை
இழந்தாலும்–

'ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை...
மத்தேயு: 11:11

என்று இயேசு கிறிஸ்துவாலே நற்சாட்சிப் பெற்று
இராஜாவாகிய அவர் வருகைக்கான, பாதையைச்
செவ்வையாய் செப்பனிட்டவனாகவும்,
'பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப்பிடித்துக் கொள்ளுகிறார்கள்'
என்ற பேரு பெற்ற வரிசையிலே முதற் பேருமானான்....
பரலோகத்தையே பலவந்தப்படுத்திய யோவான் ஸ்நானன்.

5-2
பெற்றுக் கொள்ளும் தீவிரவாதிகள்:-

இஸ்ரவேலர் சித்தீமிலேத் தங்கியிருக்கையிலே...
ஜனங்கள் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனமும் செய்து
அந்நிய தேவர்களைப் பணிந்து, அப்பலிகளை புசித்து
விருந்து கொண்டாடினார்கள். அதனால் சீர் கெட்ட இஸ்ரவேலர்
மீது தேவ கோபம் மூண்டது. வாதையினால்
அநேக ஜனங்கள் செத்து அழிந்துகொண்டிருந்தார்கள்.

'அப்போது மோசேயும் இஸ்ரவேல் புத்திரராகிய
சபையார் அனைவரும், ஆசாரிப்பு கூடார வாசலுக்கு முன்பாக
அழுது கொண்டு நிற்கையில், அவர்கள் கண்களுக்கு முன்பாக
இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் ஒரு மீதியானிய ஸ்திரியைத்
(விபச்சாரத்திற்காக) தன் சகோதரரிடத்தில் அழைத்துக்
கொண்டு வந்தான்'.
"அதை.... பினெகாஸ் கண்டபோது, அவன் நடுச்சபையிலிருந்து
எழுந்து, ஒரு ஈட்டியைத் தன் கையிலே பிடித்து
இஸ்ரவேலனாகிய அந்த மனிதன் வேசித்தனம் பண்ணும்
அறையிலே அவன் பின்னாலே போய் – இஸ்ரவேல் மனிதனும்
அந்த ஸ்திரியுமாகிய இருவருடைய வயிற்றிலும்
ஈட்டி உறுவிப் போக அவர்களைக் குத்திப்போட்டான்.
அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரில் உண்டான வாதை
நின்று போயிற்று, அந்த வாதையால் செத்தவர்கள்
இருபத்து நாலாயிரம் பேர்" எண்ணாகமம்: 25: 6 to 9

இங்கே கர்த்தரின் கோபம் மூண்டதால் – சீர்கெட்ட
இஸ்ரவேலர் செத்துக்கொண்டிருக்கிறார்கள். மிகப்பெரிய
தேவமனிதனாகிய மோசேயும் சபையாரும்
அழுதுகொண்டிருக்கிறார்கள்.

தேவ கட்டளைக்கு கீழ்ப்படியாது பாவம் செய்த மக்களால்
தேவ கோபம் மூண்டு ஜனங்கள் செத்து மடிகிறார்கள்.
அதே பொழுதில் அவர்கள் கண்களுக்கு முன்னே,
அந்தஸ்தில் கூடிய இருவர் விபச்சாரத்திற்காக செல்லுகின்றனர்.
தேவ வல்லமையினால் இராஜாக்களையும் இராஜ்யங்களையும்
கலங்கடித்த மோசேயும் சபையாரும் அழுது கொண்டு தான் இருந்தனர்.
ஆனால் நடுச்சபையிலிருந்து பினெகாஸ் என்பவன்
எவரிடமும் கருத்துக் கேட்கவில்லை.
யாரிடமும் என்ன செய்யப் போகிறேன் என்று சொல்லவில்லை,
எவர் அனுமதியும் கேட்கவுமில்லை... பலவந்தமாக
தீவிரவாதி போன்று எழுந்து, ஈட்டியை கையிலெடுத்தவன்
ஓடோடிச் சென்று அந்த விபச்சாரிகளை ஒரேக்குத்தாக
ஈட்டியால் குத்திக் கொன்று போட்டான். உடன் தானே
இருபத்து நாலாயிரம் பேரைக் கொன்று குவித்த
வாதை அத்தோடு நின்று போயிற்று.
இந்த பினெகாஸின் வைராக்கியமான செயலினால்
பரலோகமே பலவந்தம் செய்யப்பட்டதோ
என்னவோ? ஜனங்கள் மீது கோபத்திலிருந்த
பரலோக தேவனானவர், இருபத்து நாலாயிரம் பேரைக்
கொன்று குவித்துக் கொண்டிருந்த வாதையை உடனே
நிறுத்தியதோடு, உடன் தானே மோசேயை அழைக்கின்றார்.

பார்த்தாயா மோசே!
'நான் என் எரிச்சலில் இஸ்ரவேல் புத்திரரை நிர்மூலமாக்காத படிக்கு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ், 'என் நிமித்தம் அவர்கள் நடுவில் பக்தி வைராக்கியம் காண்பித்ததினால் இஸ்ரவேல் புத்திரர் மேல் உண்டான என் உக்கிரத்தைத் திருப்பினான்' எண்ணாகமம்: 25:11

என்று மோசேயிடம், பினெகாஸை மெச்சி பாராட்டியத்
தேவன், பினெகாஸோடு சமாதானத்தின் உடன்படிக்கைச்
செய்வதாகக் கூறி, பினெகாஸுக்கும் அவனுக்கு பிறகு பிறக்கும்
சந்ததிக்கும் நித்திய ஆசாரிய பட்டத்திற்குரிய

பேருபெற்ற சிலாக்கியத்தைக் கட்டளையிட்டார்.
அனலுமற்ற குளிருமற்ற அநேகர் வெறுமனே அழுதுகொண்டே யிருப்பர். பினெகாஸைப் போன்ற நீ எழும்ப வேண்டிய நேரத்தில், மோசே போன்ற பேரு பெற்றவர்கள் கூட சில சமயங்களில் அமைதியாகவோ, அழுது கொண்டோயிருக்கலாம். ஆனால்.... அனலோடு வைராக்கியத்தோடு இருப்பவர் எவரும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பதில்லை.
நம் தேவாதி தேவன் கோபத்தோடும்... எரிச்சலோடும் தாகத்தோடும்... தவிப்போடுமிருக்கின்ற பொழுதுகளில்... புதிய உடன்படிக்கையின் பினெகாஸை போன்ற யாரும் செத்த சிங்கமாக ஜீவிக்க முடியாது?
தேசம் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை! ஜனங்கள் சீர்கெட்டால் நமக்கென்ன?
தேவகோபம்; வாதைகளால் மக்கள் ஆத்மீக மரணமாவ தெல்லாம் நடக்கத் தான் செய்யும், நமக்கென்ன? இது கடைசி காலம் நாம் நமது பரிசுத்தத்தை காத்துக் கொண்டால் போதுமென்றிருக்கலாமோ சீஷர்களே!
நெஞ்சிலே கை வைத்துச். சொல்லுவோம் நாம் இயேசு கிறிஸ்துவின் சீஷர்களா? இல்லையென்றால் யாருடைய சீஷர்கள்? உலகமெங்கும் போய் அல்லது சொந்த ஜனங்களையாவது சீஷராக்கும் பணியிலே ஈடுபடாதவர்கள் எப்படி கிறிஸ்துவின் சீஷர்களாக நீடிக்க முடியும்?
10, 20 அல்லது முப்பது வருடமாக விசுவாசியாக இருக்கிறேன் இன்னும் கிறிஸ்துவின் சீஷனாகவில்லையெனச் சொன்னால்– உங்கள் விசுவாசத்தில் ஏதோ கோளாறு இருக்கிறது என்பதில் எந்த சந்தேகமுமில்லை.

பிசாசுகளின் பிடியிலிருந்த, கேடு கெட்டத் தோற்றத்தோடு காணப்பட்ட லேகியோன்– கிறிஸ்துவால் பிசாசுகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டவுடன்....
தெக்கபோலி என்ற பத்து பட்டணங்களுக்கு சுவிஷேசம் சொல்லப் புறப்பட்டு சென்றானே!

நாம் எங்கேயிருக்கிறோம்!
லேகியோன் விட்டுச் சென்ற அனலுமற்ற குளிருமற்ற–
கிரியையற்ற, கனியுமற்ற கல்லறைகளைக்
கட்டிக் காத்துக் கொண்டிருந்தது போதும் சகோதரனே!
உன்னோடும் உன் சந்ததியோடும் நித்திய ராஜரீக
உடன்படிக்கைச் செய்ய பரலோக ராஜா காத்துக் கொண்டிருக்கிறார்.

ராஜாக்களும் நாங்களே! ஆசாரியரும் நாங்களே என
வெற்று வாய்ப்பாட்டுகளைக் பாடிக் கூஜாக்களுக்குள்ளேக்
குடியிருந்து குளிர்ந்து போனவர்கள் போகட்டும்... ஆனால் நீ
பினெகாஸாக எழும்ப வேண்டியவன் என்பதை மறந்து விடாதே!
பலவந்தம் பண்ணுகிறவர்கள் பரலோக ராஜ்யத்தை பிடித்துக்
கொள்ளுகிறார்கள்! என்ற ராஜாவின் வார்த்தைகளை நெஞ்சிலே
நிறுத்திக் கொள்.
நம், மண்வெட்டிகளை பட்டயமாகவும் அரிவாள்களை
ஈட்டிகளாகவும் அடிப்போம்!

சீர் கெட்டுக்கிடக்கிற தேசத்திலே – பட்டயமாகிய வேதத்தைக்
கையிலெடுத்து – தேவவல்லமை அபிஷேகமெனும் ஈட்டியுடன்
பலவீனனும் தன்னை பலவானென்றும், நூறு வயதுள்ளோரும்
தன்னை வாலிபனென்றுச் சொல்லிக் கொண்டு – உன் தலைமையிலே
ஒரு இரட்சிப்பின் படை தீவிரமாகப் புறப்படட்டும்.
இருக்கிறோமோ இறந்து விட்டோமோ, என்பது தெரியாமல்
இருந்து கொண்டேத் தூங்குவோரின் நடுச்சபையிலிருந்து
எழுந்து புறப்படுவோம் பினெகாஸைப் போன்று! இனி பிறக்கும்
சந்ததிக்கும் தெய்வீக சிலாக்கியங்களைத் தேடி வைப்போம். ஆமென்.

5-3
பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்...

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! ஏசாயா 45:1ல் கோரேஸை அபிஷேகித்த அதே தேவனாகிய கர்த்தர் உன்னையும் தெரிந்து கொண்டு அபிஷேகித்திருக்கிறார். மாம்சமான யாவர் மீதும் என் ஆவியை ஊற்றுவேன் என்றும் கேட்கிற எவனும் பெற்றுக் கொள்ளுகிறான், என்றும் வாக்களித்த நம் வாக்குமாறாத தேவன், நம்மையும் அழைத்து கோரேஸைப் போல் அபிஷேகித்து–

நமக்கு முன்பாக வாசல்கள் பூட்டப்படாதிருக்க– கதவுகள் திறந்தே வைக்கும் படிக்கும் – நமக்கு முன்னேச் சென்று கோணலானவைகளைச் செம்மையாக்குகிறார். வெங்கலக் கதவுகளோ! இருப்புத் தாழ்ப்பாள்களோ தேவப்பிள்ளைகளுக்கு முன்பாக முறிக்கப் பட்டுப் போகும் அதோ. அதோ! பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்கள்... எங்கே நம் சகோதரிகள்?

மாளிகைகள் மற்றும் கூடாரங்களின், திறவுகோல்களைக் கையிலே வைத்திருக்கிற அன்புச் சகோதரிகளே! பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை பெற்றுக் கொள்ளுவதற்காய் நீங்களும் புறப்பட வேண்டிய தக்கத் தருணம் இதுவென்பதை மறந்து விடாதீர்கள்! ஆசைக் கணவரின் கரங்களைப் பற்றிக் கொண்டே கணவர் வீட்டில் புகுந்தது போலவே.. பரலோக ராஜ்யத்திற்கும் பங்காளியாக, கணவனின் கரங்களைப் பற்றிக் கொண்டால் மாத்திரம் போதாது.

'ஒரே படுக்கையில் படுத்திருக்கும் இரண்டு பேரில்
ஒருவர் எடுத்துக் கொள்ளப்படுவார் ஒருவர் கைவிடப்படுவார்.
(லூக்கா: 17:34) என்று நம் நேசமணாளன் பக்குவமாய்
நம் காதிலேச் சொல்லி வைத்திருக்கிற பரம காரியத்தை
நினைவில் நிறுத்துவோம்.
ஆமாம், அன்புச் சகோதரியே...
கூடாரங்களிலும், பேரீட்ச மரங்களண்டையிலும் இருந்த
காலங்கள் போதும்! உன்னை நீயே தயார் படுத்திக் கொள்.
இத்தனைப் படிகளை, இத்தனைப் பக்கங்களைத் தாண்டி
வந்திருக்கிற நீ தான் தெபொராள் என்பதில் எந்த சந்தேகமுமில்லை.
தேவ சத்தம் கேட்டும் கீழ்ப்படியாத – எத்தனையோப்
பாராக்குகள் – வீட்டிலும் வீதியிலுமாக வாலிபம் இருப்பதை
மறந்து– பல்லும் சொல்லும் போன ஆவிக்குரிய
கிழவர்களாய் ஓய்ந்திருப்பதை பார்.

ஆமாம் சகோதரியே! இது தான் சரியான காலம்!!
உன் முக்காட்டை சற்றே விலக்கி, உன் கூடாரத்தின்
பலகணியைத் திறந்து பார்!
சிசெரா போன்ற சுவிசேஷ விரோதிகள் சாத்தானின்
சேனைகளாய்.... தொள்ளாயிரம் இருப்பு ரதங்களோடு
தேசமெங்கிலும் சுற்றித் திரிவதைப் பார்.
ஓ... அந்தத் தெபொராளின் மேலிருந்த தேவ ஆவி உன்னைப்
பற்றிப் பிடித்து எழுப்பட்டும்...
சிங்கம் போன்று புறப்பட்ட தெபொராளாக மாறவேண்டிய
நீ தான்... பாராக்குகளை எழுப்ப முடியும்!
பதுங்கிக் கொண்டிருக்கிற பாராக்குகளை – தேவ திட்டப்படியே எழும்பி, படை
கொண்டு நடத்தப் புறப்படச் சொல்!

:

அதற்கு பாராக் (தெபொராளை நோக்கி) 'நீ என்னோடேக் கூட வந்தால் போவேன். என்னோடே கூட வராவிட்டால் நான் போக மாட்டேன்,' என்றான். –நியாதிபதிகள்: 4:8

பாராக்குகள் இப்படித்தான் சொல்லுவார்கள்!

இப்போது நேசருக்காக ஏதாவது செய்ய வேண்டுமென
நீ நினைப்பதே... புறப்பட்டது போலாயிற்றே!...
ஆதலினால் எழுந்து புறப்படச் சொல் பாராக்குகளை!
சிசெரா சக்திகளுக்கு விரோதமாக அவர்களைப் புறப்படச்
செய்வது மாத்திரமே உன் கடமை.

'கர்த்தர் சிசெராவையும் அந்த எல்லா ரதங்களையும், சேனையனைத்தையும் பாராக்குக்கு முன்பாகப் பட்டய கருக்கினாலேக் கலங்கடித்தார்...? நியாதி : 4:15

'வானத்திலிருந்து யுத்தம் உண்டாயிற்று; நட்சத்திரங்கள் தங்கள் அயனங்களிலிருந்து சிசெராவோடே யுத்தம் பண்ணின' நியாதி : 5:20

ஆமாம்! சகோதரனே! சகோதரியே!!
ஊழியத்தை – யுத்தத்தை அவர் சித்தப்படித் தொடங்க
வேண்டியது நம் பொறுப்பு. அதை நடத்துபவரும்
வெற்றி சிறக்க எதிரிகளைக் கலங்கடிப்பவரும்
நம் சேனாபதியாம் நேசக் கர்த்தரே.
நான் தெபொராள் விசுவாசிக்கிறேன்.... யார் பாராக் என்று
இதய ஆழங்களிலிருந்து ஓர் சத்தம் கேட்கிறது, சகோதரியே!

உங்கள் கணவரோ! சகோதரனோ! உடன் பிறந்தவரோ
அல்லது அயல் வீட்டு அன்பு நண்பரோ! நீங்கள் பெற்றெடுத்த
உங்கள் நேசக்குமாரனோ? – யாராக இருந்தாலும்,
கிதியோனைப் போன்று எழும்பினவர்களை வாழ்த்தி விட்டு
புறப்படாமலிருக்கும் பாராக்குகளைப் புறப்படச் சொல்லுங்கள்!
பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களைக் கொடுப்பதற்காய்
முதலில் தேவன் அவர்களுக்காய் திறந்தே வைத்திருக்கும்
சுவிஷேச ஊழிய வாசல்களில் பிரவேசிக்கட்டும்.
தாமதமோ! சாக்குப் போக்கோ!! பாராக்கின் மகிமையை
யாரோவொரு யாகேல் பெற்றுக் கொண்டது போலே,
தப்பிவந்த எதிரி சிசெராவுக்கு, யாகேல் தங்க இடமும்
ஒழிந்திருக்கப் போர்வையும் கொடுத்து – ஆதரிப்பது போல்,
தாகத்திற்கு தண்ணீர் கேட்ட அவனுக்கு, பாலைக் குடிக்கக்

கொடுத்து – அயர்ந்து தூங்கிய சிசெராவின் நெற்றிலே....
கூடார ஆணியை வைத்து சுத்தியால் ஓங்கியடித்துக் கொன்றுக்
கூடாரப் பெண்களிலே ஆசீர்வதிக்கப்பட்டவளானாள்.... யாகேல்!
ஆமாம், அன்புச் சகோதரனே! நீ பெற வேண்டிய மகிமையை
யாரோவொரு யாகேல் பெற்றுக் கொள்ள விட்டு விடுவாயோ?
தேவ சத்தத்திற்கு கவனமாய்க் காத்திருந்தவர்களும்
காலமெல்லாம் காத்தேயிருந்து விடாமல்... சரியான வேளையில்
அவர் சித்தமறிந்து – புறப்பட்டவர்கள் மாத்திரமே...
தீவிர சுவிஷேசகர்களாய்... தேவ ஊழியர்களாய்.... வானத்து
நட்சத்திரங்களாய் ஜொலித்துக் ஜெயங்கொண்டிருக்கிறார்கள்
தெபொராளும், பாராக்குமாக யுத்தக் களத்திலே நின்ற போது–
அனேக கோத்திரத்தார் தங்கள் சொந்த வேலைகளைப்
பார்த்துக் கொண்டிருந்த போது–
செபுலோனும் நப்தலியும் போர்க்களத்து முனையிலே
தங்கள் உயிரையெண்ணாமல் மரணத்துக்குத் துணிந்து நின்றார்கள்
நியாதிபதிகள்: 5:18
நல்லவொரு தெபொராள் எழும்பியதினிமித்தமே...
போர் முனையிலே தங்கள் உயிரையும் எண்ணாது துணிந்து நிற்கிற செபுலோன், நப்தலி, பாராக் போன்றவர்கள் எழும்பினார்கள். தெபொராள் புறப்படுகிறாள்.... என்றதுமே வானலோகம் அசைந்தது. யுத்தம் வானத்திலிருந்து உண்டாகி, நட்சத்திரங்கள் தெபொராளுக்காக, பாராக் மற்றும் தேவ ஜனங்களுக்காக வானத்திலிருந்து யுத்தம் செய்தது.
தெபொரளாக நீ எழும்பும் போது மரணத்தை விஞ்சி நிற்கும் யுத்த வீரர்கள் உன்னோடெழும்புவார்கள். தேசம் அசைக்கப்பட சிதறப்பட்டோரின் சிறையிருப்பை திருப்ப விழி! விழித் தெபொராளே விழி! பாட்டுப்பாடு, பாராக்கே எழும்பு, அபினோகாமின் குமாரனே! உன்னை சிறையாக்கியவர்களைச் சிறையாக்கிக் கொண்டு போ?
நியாதிபதிகள்: 5:12
உனக்காகவே... பரலோக ராஜ்யத் திறவுகோல்கள்! ஆமேன்.

5-4
பரலோக உத்தரவுகள்...

தேவ ராஜ்யத்திற்கு சொந்தக்காரர்களாய், ஜீவ கிரீடத்தைப் பெற்றுக் கொள்ளும் படியாய்... வைராக்கியமாக ஓடிக் கொண்டிருக்கும் தேவ பிள்ளைகளுக்கு சோதனை காலங்களில் கிடைக்கிற தேவ உத்தரவுகள் தான் அவர்களைத் தேற்றி வழி நடத்தும் மேக, அக்னி ஸ்தம்பங்களாகின்றன.
தெபொராள் பாராக்கை எழுப்பி யுத்தத்திற்குச் சென்றதும்... எதிரி படைகளோடும், சேனாதிபதி சிசெரா என்ற எதிரியுடனும்... 'வானத்திலிருந்து யுத்தம் உண்டாயிற்று; நட்சத்திரங்கள் தங்கள் அயனங்களிலிருந்து சிசெராவுடனே யுத்தம் பண்ணின. நியாதிபதிகள்: 5:20

தேவப்பிள்ளைகள் தேவ உத்தரவுகளுக்குக் கீழ்படிந்து
தேவனுக்காக வைராக்கியமான காரியங்களில் ஈடுபடும் போது வருகிற, எந்த இக்கட்டான, தப்பிச் செல்ல வழியேயில்லாத சூழ்நிலைகள் வந்தாலும் – நமக்காக வானம் அசைந்து
திறக்கப்பட்டு, வல்லமையான தேவ கிருபை
நம்மைச் சூழ்ந்து கொள்ளுவதைக் காணலாம்.

இங்கே தேவனுக்குப் பயந்த, உத்தமமான ராஜாவாகிய
எசேக்கியாவுக்கு விரோதமாக மாபெரும் சேனையாக–
அசீரிய ராஜாவாகிய சனகெரிப்பும் அவன் தளபதியாகிய
ரப்சாக்கேயும் இருப்பு ரதங்கள்,
குதிரை வீரர்கள் என பெரிய சேனையோடே ஆயத்தமாகின்றனர்.
ரப்சாக்கே பேசிய மகாக் கேவலமான வார்த்தைகளைக் கேட்டு இராஜபிரதானிகளும், எசேக்கியா ராஜாவும் தாங்கிக் கொள்ள
முடியாமல், தங்கள் வஸ்திரங்களைக் கிழித்து–
இரட்டு உடுத்திக் கொண்டு கண்ணீரோடே தேவ சமுகத்தில்

வேண்டுதல் செய்தபோது– நடந்தது என்ன?
பரலோகம் அசைந்து திறந்தது – தேவாதி தேவனானவர் வானத்திலிருந்து தனது ஒரேத் தூதனை அனுப்பி
எசேக்கியா ராஜாவின் எதிரிகளைச் சங்கரித்தான்.

'.....கர்த்தருடைய தூதன் புறப்பட்டு, அசீரியரின் பாளையத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம் பேரைச் சங்கரித்தான். அதிகாலமே எழுந்திருக்கும் போது, இதோ அவர்கள் எல்லோரும் செத்தப் பிரேதங்களாய்க் கிடந்தார்கள்.' 2 ராஜாக்கள்: 19:35.

என்னவொரு மகத்தான வெற்றி பாருங்கள்.
நம் தேவனாகிய கர்த்தரிடத்திலிருந்து வந்த ஒரே தூதன்,
1,85,000 பேராகிய முழு இராணுவத்தையும் சங்கரித்து
தேவ மனிதனாகிய எசேக்கியா இராஜாவுக்கு அற்புதமான
வெற்றியைத் தேடித் தர முடிகிறது.

யார் இந்த எசேக்கியா ராஜா? இவர் எப்படிப் பட்டவர்?
வேதம் சொல்லுகிறது. 2 ராஜாக்கள் 18:5ல்

'அவன் (எசேக்கிய ராஜா) இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்
மேல் வைத்த நம்பிக்கையிலே... அவனுக்கு பின்னும் அவனுக்கு
முன்னும் இருந்த யூதாவின் இராஜாக்களிலெல்லாம்
அவனைப் போல் ஒருவனும் இருந்ததில்லை.'
என்னவொரு அற்புதமான, உத்தமமான, வைராக்கியமான
தேவ மனிதன் பாருங்கள்.
உத்தமத்தோடு பரமனின் சித்தமறிந்து வாழுகின்ற
தேவப்பிள்ளைகளுக்காக பரலோக உத்தரவுகளும், பரலோகத்
தூதர்களும் காத்திருக்கிறார்கள் என்பது தான் உண்மை.
தன் யூத ஜனங்கள் அழிக்கப்படப் போகிறார்களே... அவர்களை
அழிவிலிருந்து இரட்சிக்க வேண்டுமே என்று தேவ சமூகத்தில்
வேண்டுதலும், உபவாசமும், விண்ணப்பமுமாக இருந்து–
ஆமானுக்கும் அவன் அதிகாரத்திற்கும் அஞ்சாமல் துணிந்து நின்ற

சாதாரண மொர்த்தேகாய்க்காக, தேவன்–
127 நாடுகளின் மன்னனான ஆகாஸ்வேறுவை,
'மொர்தேகாய்க்கு ஒரு ராஜ மேன்மை கொடுக்க வேண்டும்,'
எனத் தீர்மானிக்கும் வரை தூங்கவிடவில்லை.

தேவ ஜனங்களைக் காப்பதற்காக, செத்தாலும் சாகிறேன்
எனச் சொல்லிப் புறப்பட்டவர்களுக்கும்,
பரலோகத்தையே பலவந்தப்படுத்துமளவில், தங்கள்
ஒரேப் பேரான ஈசாக்குகளையேக் கொண்டு
பலிபீடத்திலே சமர்ப்பித்தவர்களுக்கும்,
மன்னர்களையும், அவர் படை பரிவாரங்களையும் எதிர்த்து
யார் ஜீவனுள்ள தெய்வம் என்பதை நிரூபிக்கத் துடித்து
கர்மேலிலும், அக்னிச் சூளையிலும் குதித்தவர்களுக்காவும்...
வானத்திலிருந்து உத்தரவுகளும். அக்கினியும்
புறப்பட்டு வந்து அவர்களை வெற்றிச் சிறக்கச் செய்திருக்கிறது.

உலக அரசாங்கங்களிலே பணி செய்வோருக்காக
மத்திய மாநில அரசுகள் எத்தனையோ பாதுகாப்புத்
திட்டங்களைத் தரும்போது....
தேவ ராஜ்ய பங்காளர்களுக்காய்.... ஊழியர்களுக்காக
பணிவிடை செய்ய இரா முழுதும், பகல் முழுதும்
ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரர்களாய்–
தேவ தூதர்கள் காத்திருக்கிறார்கள்.
ஆமாம்.... சகோதரனே....

'கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல்
நோக்கமாயிருக்கிறது'. சங்கீதம்: 34:15

நீதிமான்களின் விண்ணப்பத்திற்கு கர்த்தரின் செவிகள்
திறந்தேயிருக்கிறது.

5-5
செம்மையாக்கப் பட வேண்டிய ராஜபாதை...

சோம்பேறியின் வழி முள்வேலிக்குச் சமானம்,
நீதிமானுடைய வழியோ ராஜபாதை. நீதி: 15:19
'தன் வழியைச் செவ்வைப்படுத்துகிறவனுக்கு தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துவேன்.' சங்கீதம்: 50:23
தங்கள் வழியைச் செவ்வைப்படுத்துகிற யாவரும், தேவனுடைய மகா மேன்மையான இரட்சிப்பையும், ராஜ பாதையையும் கண்டடைகின்றனர். அந்த மேலான ராஜபாதையோ வென்றால் நம் நேசரோடு, அவரின் பரலோக ராஜ்யத்துக்கு நேராய் நம்மை வழி நடத்துகின்றது. கர்த்தரை தெய்வமாகக் கொண்ட ஜனம் பாக்கியமுள்ளது என்று சொல்லப்பட்டபடியே... நாம் பாக்கியவான்களாகவும், ஆசீர்வதிக்கப்பட்டுமிருக்கிறோம்.
ஏன்? எதற்காக சகோதரனே! சகோதரியே!!
ஏன். உனக்கு மாத்திரம் இத்தனை தாலந்துகள், இத்தனைக் கிருபைகள், உனக்கு மட்டுமேன் இவ்வளவு பெரிதான அன்பும் ஆசீர்வாதமும் இரட்சிப்பின் சந்தோஷமும் இவ்வளவாய் நீ அன்பு கூறப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதன் நோக்கம் என்ன?
'.....இவ்வளவுப் பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம்.' எபிரேயர்: 2:4

'கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்குப் பாதைகளைச் செவ்வை பண்ணுங்கள்'.. லூக்கா: 3:3
ஆம் இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருக்க முடியாது. கர்த்தருக்கு வழியை ஆயத்தம் செய்ய வேண்டியது நம் பிரதான கடமை. நாம் இரட்சிக்கப் பட்டதும் ஆசீர்வதிக்கப்பட்டதும்... நம்மைப் போன்ற அநேகரை இரட்சிப்புக்கேற்றபடி நடத்தவும், ஆசீர்வதிக்கவுமே என்பதை நம் நெஞ்சில் நிறுத்துவோம்.

நாம் பெற்றுக் கொண்டத் தாலந்துகளைப் பயன்படுத்தி
ஆத்துமாக்களைக் கொள்ளைப் பொருளாக சம்பதிப்போம்.
மாட்டுத்தொழுவங்களாய் சீரழிந்து கிடக்கிற–இந்த
தேசத்தின் மனித இதயங்களில் – நம்
மன்னவர் இயேசு பிறக்கட்டும்.

பிறக்கப்போவது மகாராஜாவென்று தெரியாமல் – இந்த
மடமையான உலகம் சத்திரத்திலும் இடமில்லையென்கிறது.
சுவிஷேசத்திற்கு விரோதமான மடமைகளைக் கொழுத்துவோம்.
மனித இதயமெல்லாம் இயேசு மகாராஜாவின் பிறப்பை,
இரட்சிப்படைவதின் மூலம் பெற்றுக்கொள்ளட்டும்.

இரட்சண்ய காரணரான நம் இராஜா வருகிறார்.
ஆயத்தப்படுவதோடு நின்றுவிடாமல் ஆயத்தப்படுத்துவோம்.
பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப்பிடித்துக் கொள்ளுகிறார்கள்
என்ற – இயேசு மகாராஜாவின் வார்த்தைகளின் படியே
பெற்றுக்கொள்ளும் தீவிரவாதிகளாகப் புறப்படுவோம்!
குடும்ப ஜெபங்களிலே தரித்திருக்கும் நேசமணவாட்டிகள்
குடிசைபகுதிகளுக்கும், குடியிருப்புகளுக்கும் சென்று
அவர்களும் குணப்பட, கீலேயாத்தின் பிசின் தைலமாம்
நேசர் இயேசுவை நேசத்தோடு அறிமுகப்படுத்துவோம்.
சங்கங்களுக்குள்ளும், சபைகளுக்குள்ளுமிருக்கும் பராக்கிரமசாலிகள்–
புதிய கிதியோனாய் புறப்பட்டு
கிராமங்களுக்கும் பட்டணங்களுக்கும் பரமன் இயேசுவை
பறை சாற்றுவோம்.

சோம்பேறிகளின் வழியோ முள்வேலி– ஆனால்
நீதிமான்களின் வழியோ ராஜபாதையென்று சொல்லப்பட்டபடியே.,
நம் மகிமையின் இராஜா மனித இதயங்களில் பிரவேசிக்க–.
இராஜபாதையைச் செம்மையாக்க –
வீறுகொண்டெழுந்துப் புறப்படுவோம் இளைஞர் படையாய்....

5-6
வீறுகொண்டுப் புறப்படும் இளைஞர் படை..

ஆகாப்–யேசபேலின் அரசாட்சியிலே.. தேசம் சீர்கெட்டது.
எலியாவின் சாபம் பலித்து – தேவ கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாத ஆகாப்–யேசபேல் சந்ததியைக் கருவறுப்பதற்காக–
ஆகாபின் மகன் யோராமின் ராஜ்யபாரத்திலே – சேனாபதியாக இருந்த யெகூ, அபிஷேசிகிக்கப்படுகிறான்...

"நீ உன் ஆண்டவனாகிய ஆகாபின் குடும்பத்தை அழித்துவிடக்கடவாய்..." (I ராஜாக்கள் : 9:7.)

என்ற தேவ உத்தரவோடு அபிஷேகிக்கப்பட்ட யெகூ, சுற்றியிருந்தோரை ஆயத்தப்படுத்திவிட்டு – இரதத்தின் மேலேறி சிங்கமெனப் புறப்படுகின்றான். காற்றைக்கிழித்துக் கட கட வென்றோடிய யெகூவின் ரதம் அதிவேகமாக வருவதைக் கண்ட கோபுரஜாமக்காரன்., கதிகலங்கிய யோராம் ராஜாவிடம்– எதிர் கொண்டுப்போன குதிரை வீரர்களைக் காணவில்லை, ஏதோ அசம்பாவிதம் போலத் தெரிகிறது.
ஏதோ சதியின் காரணமோ என்னவோ– எதிர்கொண்டுவரும் இரதத்தின் ஓட்டம் மகா இறைச்சலாயிருக்கிறது.

"இரதத்தை ஓட்டுகிறது, நிம்சியின் குமாரனாகிய யெகூ ஓட்டுகிறது போல் இருக்கிறது. அதிவேகமாக ஓட்டுகிறான். என்றும் சொன்னான்" (2 ராஜாக்கள் : 9:20.).
உடன் தானே, ஆகாபின் குமாரனாகிய யோராம், தனது ரதத்தையும் ஆயத்தப்படுத்தி.. எதிர்கொண்டு புறப்பட்டு.. "யோராம், யெகூவைக் கண்டவுடனே, "யெகூவே சமாதானமா" என்றான் அதற்கு யெகூ, "உன் தாயாகிய யேசபேலின் வேசித்தனங்களும், அவளுடைய பில்லி சூனியங்களும், இத்தனை ஏராளமாயிருக்கையில் சமாதானம் ஏது? என்றான்".

(2ராஜாக்கள் : 9:22)

அனல் கொண்டு புறப்பட்ட யெகூ, தேவ உத்தரவுபடி
யோராம் ராஜாவை அங்கேயேக் கொன்று, வென்று, புறப்பட்டு
ராஜகெம்பீரத்தோடு இஸ்ரவேலுக்கு வருகின்றான்.
அரண்மனை கொலுமண்டபத்திலே... மகிமை போயிற்றென்றுத்
தெரியாமல், கண்களுக்கு மையிட்டு- தலையை சிங்காரித்து
ஜன்னல் வழியே எட்டிப்பார்த்த யேசபேலையும்
கீழே விழத்தள்ளி கொன்றுபோட உத்தரவிட்டான் யெகூ.

அதோடு பாகாலின் பலிபீடமனைத்தையும் சுட்டெரித்து,
அனைத்து பாகால் தீர்க்கதரிசிகளையும் ஒருவரும் தப்பிவிடாமல்
அனைவரையும் கொன்றுபோட்டான் யெகூ.
பார்த்துக்கொண்டிருந்ததா... பரலோகம்! பரலோக உத்தரவு
என்ன இந்திய தபால்த்துறை மூலமாகவா, வரும்? உடன்தானே,
"கர்த்தர் யெகூவை நோக்கி, என் பார்வைக்குச் செம்மை
யானதை நீ நன்றாகச் செய்து, என் இருதயத்தில்
இருந்தபடியெல்லாம், ஆகாபின் குடும்பத்துக்குச் செய்த
படியினால், உன் குமாரர் இஸ்ரவேலுடைய சிங்காசனத்தின்
மேல், நான்கு தலைமுறையாக வீற்றிருப்பார்கள்" என்றார்.
(2 ராஜாக்கள் : 10:30.)
என்னவொரு அற்புதமான பரலோக உத்தரவு பாருங்கள்.
ராஜ்யத்தை பிடுங்கவேண்டியவர்களிடமிருந்து பிடுங்கி,
ராஜபாதையைச் செவ்வையாக்கும்–அதிவேக ஓட்டக்காரர்
கையிலே அவர்தம் சந்ததிக்குமாக கொடுக்கிறவர், கர்த்தர்.

இப்போதும் சகோதரனே நேசவைராக்கியத்தினால் அனல் கொண்டு
பரலோக ராஜ்யத்தையே பலவந்தப்படுத்தும்– உன்
விரைவு ஓட்டம் தொடங்கட்டும்.. நேசரின் சித்தப்படி,
வீறுகொண்டுப்புறப்பட்ட யெகூவின் கூட்டமாய்– உன்னோடு
விழித்தெடுந்து புறப்படட்டும் இளைஞர் படை
"யெகூ ஓட்டுகிறது போல் இருக்கிறது, அதிவேகமாக ஓட்டுகிறான்".
என்று ஜாமக்காரர்கள் சொல்லியபடியே., உன் அதிவேக

விரைவு ஓட்டத்தைக் காணுகிறவர்கள்! உனக்குள்ளேயிருக்கிற
அபிஷேகத்தைக் கண்டுகொள்ளட்டும். கெம்பீரப் புரவியாய்...
நீ எழுவதைக் கண்டு, புத்தியில்லா ஸ்திரிகளாய் போன
இளைஞர் படை— புது அனல்கொண்டு ஆர்ப்பரித்து எழும்பட்டும்!
பொங்குமாங் கடலைப் போன்று பொல்லாத பெலிஸ்தியர் கூட்டம்
உனக்கெதிராக வந்தாலும்... செங்கடலையும் இரண்டாகப்
பிளக்கும் தேவ வல்லமை உன்னோடிருப்பதால்—
ஒருவன் துரத்த ஆயிரம் பேரும், ஐந்துபேர் துறத்த— அனைவரும்
ஓடிப்போவார்கள் என்பதை மறந்துவிடாதே!.

தளபதி யெகூ என்றாலே.. பாகாலுக்கும் எல்லா பாகால்
தீர்க்கதரிசிகளுக்கும் கூடச் சிம்மசொப்பனம்,
ஆமாம். அனல் கொண்டிருக்கிற யெகூவாகிய உன்னைக் கண்டு
சாத்தானின் சர்வ சேனையும் கதிகலங்கி— பன்றிக் கூட்டத்திலேப்
புகுந்து, கடலிலே வீழ்ந்து மாண்டுமடிவதில் சந்தேகமில்லை.

இரதம், குதிரை, குதிரை வீரர் எது இருந்தாலும்—நீ
அணிந்திருக்க வேண்டியது சர்வாயுத வர்க்கமென்பதையும்,
நீ பெற்று பாதுகாக்க வேண்டியது தேவ அபிஷேகம், என்பதையும்
ஒருபோதும்— ஒருபொழுதும் மறந்துவிடாதே!
நல்லப்போர்ச் சேவகனாய் நீ வீறுகொண்டு புறப்படும் போது
எதிர்த்து வருகிற எந்த இயக்கமும்— எந்த் மனித ஜாதியும்
பாய்ந்துவரும் ஆற்றைப்போன்றோ! பற்றியெறியும்
அக்கினிபோன்றோ வந்தாலும் அவை உன்மீது— பற்றுவதுமில்லை!
புரளுவதுமில்லை உன்னை மேற்கொள்ளுவதுமில்லை.
அதோ... மகா பலமாக எக்காள சத்தம். போர்முரசு ஒலிக்கின்றது..
படைகொண்டு நடத்துகிறார் நம் ஜெயங்கொள்ளும் சேனாபதியாம்
நேசக்கர்த்தர். யுத்த வீரனைப் போன்று வைராக்கியமூண்டு
புறப்படும் அவரோடு, முழங்கி கெர்ச்சித்துப் புறப்படட்டும்.
நமது கிறிஸ்து இயேசுவின் நற்செய்திப்படை.
நாம்தான் ஜெயங்கொள்ளுவோம்.... நமக்காகத்தான்
ஜீவகீரிடம். ஆமேன்! அல்லேலூயா.

உலகத்தின் அதிபதியை வீழ்த்த சிலுவை சுமக்கும் நெஞ்சுறுதி ... 6

ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக ஏசாயா 25:8ல் சொல்லப்பட்ட படி,... அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்... என்ற நம் நேசக்கர்த்தர், இருளில் நடக்கிற ஜனங்களுக்கு பெரிய வெளிச்சமாகவும், மரண இருளில் தேசத்திலே குடியிருக்கிறவர்களின் மேல் பிரகாசித்து ஏசாயா: 9:2 ன் படி இருண்டு, அடிமைப்பட்டு, இடுக்கமாய், ஈனமாய் நடத்தப்பட்ட ஜனங்களின், பாவசாப நுகத்தடிகளையும், அவர்கள் தோளின் மேலிருந்த மிலாற்றையும், அவர்களை கொடுமையாய் நடத்தின ஆளோட்டிகளின் கோலையும் முறித்துப் போட்டார். உலகமே கொடூரமாய், பாவமாய் அவமான சின்னமாய்ப் பார்த்தச் சிலுவையை... நமது பாவங்களுக்காக... அவரே அதைச் சுமந்து... மகாப்பாடுகளோடே... மரணமே உன் கூர் எங்கே? பாதளமே உன் ஜெயமெங்கே? என்று சிலுவையிலே வெற்றிச் சிறந்து... மரணத்தை ஜெயித்தெழுந்தார். யூதருக்கு ராஜாவாக பிறந்திருக்கிறவர் எங்கேயென்று சாஸ்த்திரிகளும் உலகமும் தேடியது போல– வஞ்சக சாத்தானும் அதுமுதல் நம் நேசரைத் தேட ஆரம்பித்து – சிலுவையின் மரணபரியந்தம் போராடித் தோற்றுப் போனான். மூன்று மணிநேர அந்தகார இருளின் மகாப்போராட்டத்திலே... துரைத்தனங்களும் அதிகாரங்களும் உரிந்துகொள்ளப்பட்டது. நமக்கு எதிராக இருந்த நடுச்சுவரும், கையெழுத்தும் குலைத்துப் போடப்பட்டு... தேவாலய திரைச் சீலை இரண்டாக கிழித்தெரியப்பட்டது.

'முன்னே தூரமாகயிருந்த (நாம்) நீங்கள் இப்போது கிறிஸ்து இயேசுவுக்குள், கிறிஸ்துவின் இரத்தத்தாலே சமீபமானீர்கள்.' எபேசியர் : 2:13

தேசாதிபதியாகிய பிலாத்து நினைத்திருப்பான் – தான் கைகழுவிய தோடு, இந்த இயேசுவின் கதை முடிந்தது என்று... இயேசுவை சிலுவையில் அறையுங்கள். என்று ஓங்கிச்சத்தமிட்ட பிசாசின் உலகம் நினைத்திருக்கும். இயேசுவை இனி எவரும் காப்பாற்ற முடியாதென்று... பிரதான ஆசாரியரும், போர்ச்சேவகரும் கூட – இயேசுவின் சகாப்தம் இனிச் சத்தமில்லாது போய்விடுமென்றும். நினைத்திருப்பர்.

ஆனால் – அந்தக் கோரச் சிலுவையிலேதான் நம்நேசர் வெற்றி சிறந்தாரென்றும்... அவர் சிலுவையில் சிந்திய இரத்தமே... உலகத்தை மீட்கிற விலையேறப்பெற்ற பொக்கிஷமென்றும், அவரே மரணத்தை ஜெயித்து பின் மூன்றாம் நாளிலே உயிர்த்து. பரமபிதாவின் வலது பாரீசத்தில் வீற்றிருந்து மகிமைபெறுவா ரென்றும் – தாங்கள் செய்வது இன்னதென்று தெரியாமல் செய்த பிரதான ஆசாரியர்– பிலாத்து போன்றோருக்கெங்கே தெரியும். ஆனால் – அன்புச் சகோதரனே சகோதரியே – இன்றும்...

'சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்கு பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது.'
I கொரி : 1:18

சிலுவையைப் பற்றிய உபதேசமே நமக்குத் தேவ பெலனாயிருக்கிறது. அனுதினமும் தன்சிலுவையை எடுத்துக் கொண்டே நாம் நம் நேசமணாளனைப் பின்பற்றி நடந்து அவர்தம் சிஷனாக வாழ்வோம். சிலுவை சுமக்காத எவரும் உலகத்தின் அதிபதியாகிய சாத்தானை வீழ்த்துவதென்பது முடியாத காரியமே! மரணத்தை விஞ்சுகிற நேசத்தினால்– நமது இதயத்திலிருந்து புறப்படுகிற...... ஒரு ஆவிக்குரிய வைராக்கியமே நமக்கு சிலுவை சுமக்கும் நெஞ்சுறுதியைத் தரமுடியும்.

'கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும்– அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்.' கலாத்தியர் : 5: 24

தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்துவிட அஞ்சி நடுங்கிய அநேகர், தெரிந்தோ தெரியாமலோ... கிறிஸ்துவையேச் சிலுவைக்கு ஒப்புக்கொடுத்து விடுகின்றனர். அல்லது தாங்களே, தங்கள் நேசரை சிலுவையிலறைகின்றனர். உலக மாம்சீக ஆசாபாசங்களை நாம் சிலுவையில் அறையும் போது தான் நாம் சத்துருவை மேற்கொள்ளும் தேவபெலனைப் பெற்றுக் கொள்ளுகிறோம்.
இந்த அற்புதமான சுத்தாங்கத்திற்கு பிறகு வரும் தேவ பெலன் மாத்திரமே உலகத்தின் அதிபதியாகிய சாத்தானையும் அவன் சர்வசேனையையும் நிர்மூலமாக்குகின்றது.
மகாக் கொடிதான சிலுவைப் பாடுகளுக்கு முன்னால், இயேசு. 'ஆகிலும் என் சித்தத்தின் படியல்ல உம்முடையச் சித்தத்தின் படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்.'

மத்தேயு : 26:3

அதுபோலவே அவரது அடிச்சுவடுகளைப் பின் பற்றுகிற நாமும் கிறிஸ்துவின் சித்தத்தின் படியே... செயல்படும்போது வருகிற எல்லாப்பாடுகள், சோதனைகள், உபத்திரங்களில் உறுதியாக விசுவாசத்தில் நிலைத்திருந்து – அனுதினமும் நமது சிலுவையை நாமேச் சுமக்கும் போது தான் நாம் நல்லப்போராட்டம் போராடுகிறவர்களாகவும் ஜெயங்கொள்ளுகிறவர்களாகவும் வாழ்ந்து சிறக்க முடியும்.

உபத்திரவங்களையும், சோதனைகளையும் தாங்கி நின்றுப் போராடுகிற நெஞ்சுறுதி நமக்குயிருக்குமேயானால் – நாம் நம்மை கடுமையாக சபித்தவர்களை, பகைத்தவர்களை பரியாசம் செய்து வேதனைப்படுத்தியவர்களை மன்னித்து ஆசிர்வதிக்க முடிகிறதா?

அவர்களின் ஆபத்தில் பரிவோடு பாசம் காட்ட முடிகிறதா?
ஒன்றை எடுத்துக் கொள்ள பலவந்தம் செய்கிறவனுக்கு
இன்னொன்றையும் விட்டுக் கொடுக்க மனம் வருகிறதா?
அடித்துக் காயப்படுத்தியவர்களையும் திருப்பி அடிக்காது
மறுகன்னத்தையும், திருப்பிக்காட்டி பாடுகளைச் சுமக்கிற
இதய வலிமையே, தாங்கும் சக்தியே... சிலுவை சுமக்கும்
நெஞ்சுறுதி. இதுபோன்ற ஆன்மபெலமிக்க ஆத்மநேசரின்
அருங்குணங்களைத் தேவபிள்ளைகளிடமேக் காணும்போது தான்..
சாத்தான் கதிகலங்கி வீழ்ந்து தோற்றுப்போகிறான்.
நமது முன்னனி வீரர்கள்... வீரபுருஷர்கள்–
சிங்கக்கெபிக்கும் அக்கினிச் சூளைக்கும் துணிந்து நின்றதுமே–
யோவான் ஸ்நானகன் எலியா போன்றோர் – தேசங்களுக்கும்
மன்னர்களுக்கும் அஞ்சாது தேவவார்த்தைகளைச்
சொல்லத் துணிவோடு புறப்பட்டதுமே......

... மகாராணியாக இருந்தபிறகும், தேவஜனங்களை காக்கச்
செத்தாலும் சாகிறேன் என எஸ்தர் புறப்பட தீர்மானித்ததுமே...
சதிகளின் பிறப்பிடமாகிய சாத்தானின் பெருஞ்சேனைச்
செத்துச் சீரழிந்தது.
தாங்காவாண்ணா சோதனை, வேதனை, பரியாசம், அடி, அவமானம்
அத்தனைப் பாடுகளுக்கும் முன்னால் – நம் இரட்சகர் இயேசு
தேசாதிபதியாகிய பிலாத்து முன்னால் அஞ்சிக்கலங்காமல்
தேவபிரசன்னத்தோடு... நிமிர்ந்து நின்ற அவரது நெஞ்சுறுதியால்–
ஆடிப்போனது பிலாத்துமட்டுமல்ல... அவன் சேனாபதி சாத்தானும்தான்.
பாரச்சிலுவையை நம் பரமன் நமக்காக தோளில் ஏற்றதுமே...
கொலை நடுங்கிச் போனச் சாத்தானுக்குத் தெரியும்
முடிவில்லாத மரணம் யாருக்கென்று.
நமது சிலுவை பாடுகளை, இயேசுவினிமித்தம் வரும்
நிந்தைகளை, வேதனைகளை நாம் சுமந்த படியே...
அவரது சித்தம் நிறைவேற்ற புறப்பட்டதுமே..
கிறிஸ்து இயேசுவுக்குள் நமது வெற்றிப் பயணம் தொடங்குகிறது.
வீழ்த்துவோம் சாத்தானை. ஜெயம்பெறுவோம்... இயேசுவின் நாமத்தால்!

நேசரோடு பாடுபடுவோம், அவரோடு ஆளுகை செய்வோம்.... 7

ஏன் இத்தனைப் பாடுகள்?

இரவுப் பகலாக கண்விழித்து கஷ்டப்பட்டு உழைக்கும்
ஏழைத் தாயாரைக் கேட்டால் – என்பிள்ளைகளை வளர்த்துக்
காப்பதற்கே கஷ்டப்படுகிறேன் என்பார்கள்.
ஏன் ஐயா, இப்படி நோயால் பாதிக்கப்பட்ட பிறகும்
மண்சுமந்து கஷ்டப்படுகிறீரென்று, ஒரு நல்ல தகப்பனைக்
கேட்டால் எனது கடைசி மகளைத் திருமணம் முடித்துக்
கொடுப்பதற்காகவே கஷ்டப்படுகிறேன். என்பார்.
திருமணம் கூடச் செய்யாமல் படாதப் பாடுபட்டு
உழைக்கின்றாயே.. என்று ஒரு நல்ல சகோதரனை கேட்டால்
என் தாய் தகப்பனை இழந்து நிற்கும் என் அன்புச்
சகோதரிகளை கரைசேர்ப்பதற்கே கஷ்டப்படுகிறேன் என்பான்.
நண்பனின் பெரிய கடனை தான் ஏற்றுக் கொண்டதால்
காலமெல்லாம் கஷ்டப்படும் நண்பர்களுமுண்டு.
நமக்கு நித்திய ஜீவனைத் தருவதற்காக – நம் நேசரே
பாடுபட்டு, கோரச் சிலுவையை ஏற்றுக் கொண்டார்.

'நாம் பாவத்துக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு
அவர்தாமே தம்முடைய சரீரத்திலே நம்முடைய
பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்... Iபேதுரு : 2.24

ஆம் மகாப்பாவிகளாகிய நாம் பிழைத்திருக்கும் படிக்கு
அவரே நமது பாவ சாபங்களைச் சுமந்து – அதற்கான
அடிகளையும் அவமானத்தையும் வேதனைகளையும் தாங்கி–
நாம் நிற்கவேண்டிய நியாயாசனத்தின் முன்பு அவரே நின்று
நாம் சுமக்க வேண்டிய சிலுவையை நம் நேசரே சுமந்து

கொடுங்கொல்கதா வரைச் சென்றாரே... ஏன்?
யூதராக சிங்கமாய் பிறப்பெடுத்த நம்தேவக்குமாரனாம்
நம் நேசர், வையப்படும் போது பதில் வையாமலும்,
அடித்து நொறுக்கப்படும் போது பயமுறுத்திச் சபிக்காமலும்...
கோரச் சிலுவையை ஏற்றுக் கொண்டாரே ஏன்?

உலக சரித்திரத்தையே, தம்பிறப்பால் மாற்றியமைத்த
நம் மகாமன்னவராம்... மாசற்ற நம் நேசமணாளன்,...
காடெல்லாம் மேடெல்லாம் சுற்றித்திரிந்து...
குருடரையும், செவிடரையும், முடவரையும், ஊனர்
சப்பாணிகளையும் குணமாக்கி – அவர்தம் கண்ணீரைத்
துடைத்து காத்த – நம் கருணாமூர்த்தியின்
கைகளிலும், கால்களிலும், உயிரோடே இரத்தம்
பீரிட்டு வழிய வழிய... ஆணிகளாலே கடாவப்பட்டது ஏன்?

ஏன் அவருக்கு மரணபரியந்தம் வலிவேதனைப்
பரியாசம் பரிகசிப்பு..... ஏன்? நாதியற்றவரைப்போல்
அந்த நடுச் சிலுவை? இடிக்க, அடிக்க – குத்த குத்த
குருதியெல்லாம் சிந்த மகாப்பாடுகளெல்லாம் எதற்காக?
ஐயகோ! என் அன்புச் சகோதரா சகோதரி...
உன்னையும் என்னையும் உலகத்தையும்
மீட்டு இரட்சிப்பதற்காக நீயும் நானும் உலகமும்
அடையவேண்டிய வேதனைப்பாடுகளை...
கோரச்சிலுவையிலே எம் மாசற்றத்தங்கம்
ஆத்தும தேச மணாளன் பரிவோடு ஏற்றுக் கொண்டார்.

நம் நேசரின் பாடுமரணத்தின் மூலமாக – நாம்
பெற்றுக் கொள்ளும் சிலாக்கியங்களைப் போல் நாம்
கற்றுக் கொள்ள வேண்டியதென்ன?
'நாம் அவரோடேக் கூட மரித்தோமானால்
அவரோடேக் கூட பிழைத்துமிருப்போம்'.

'அவரோடே கூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேக் கூட ஆளுகையும் செய்வோம். நாம் அவரை மறுதலித்தால் அவரும் மறுதலிப்பார்.' 2 தீமோ: 2:11,12

ஆமாம் சகோதரனே!
அவரோடேக் கூட பாடுகளைச் சகிக்கவும். அவரோடக் கூட மரிக்கவும், மறுதலிக்காதிருக்கவும் துணிந்து அவரின் சித்தத்திற்கு கீழ்படிவோமானல் அவரோடே ஆளுகை செய்யும் பரமபாக்கியத்திற்கு சொந்தகாரராவோம்

'நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் பரலோக ராஜ்ஜியம் அவர்களுடையது.' –மத்தேயு: 5:10

அவரது கட்டளைகளை ஏற்றுக் கொண்டு,
நீதியாகி அவரது வார்த்தைகளுக்கு கீழ்படிந்து
இயேசுவின் நாமத்தினிநிமித்தம் – சுவிஷேத்தினிமித்தம்
நாம் துன்பப்படுவோமானால் – நாம் பாக்கியவான்களாய்
பரலோக ராஜ்ஜியத்திற்கும் சொந்தக்காரர்களாயிருப்போம்.

'ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்.' எபிரேயர்:10:35

வையகத்து மனிதரெவரும் கண்டிராத
மகாமகிழ்ச்சியும்– ஆடல்பாடல் சத்தத்துடனே
சர்வசதா காலமும் சந்தோஷமும் பொங்கும்
ஆனந்தமான ஆயிரம் வருட அரசாட்சியோடே...
ஓர் வெண்ணங்கி, ஓர் பொன்முடி, ஓர் ஜெயக்கொடி
ஓயா இன்பம் எனக்குண்டு மோட்சத்தில் – என
நீயும் நானும் ஆடிப்பாடி மகிழும் பாக்கியத்தை – நமக்கு
நம் ஆத்தும நேசர், தம் சிலுவைப் பாடுகளின் வழியே
தான் பெற்றுத்தந்தாரென்பதை ஒருபோதும் மறவாதிருப்போம்!!

அதேக் கல்வாரி நேசர் – நம்மைப்பார்த்து உனக்காக
நான் மரித்தேனே!. எனக்காக நீ என்ன செய்தாய்? என்று கேட்கும்
இந்த அதி மகத்துவமான கேள்விக்கு– இந்த
அற்புதமான வேளையிலே.. அநேக சகோதர சகோதரிகள்...
அப்பாப்பிதாவே
'நாங்கள் என்ன செய்ய வேண்டும்.?
நாங்கள் என்ன செய்ய வேண்டும்?... என்று
நேசத்தால் அணல் கொள்ளுவதைக் காண்கிறேன்!

'அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி
வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக்
கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள்
புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி
பிதாகுமாரன் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானங் கொடுத்து
நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் – அவர்கள்
கைக்கொள்ளும் படிக்கு அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்..'
மத்தேயு : 28,18,19,20

'பின்பு இயேசு அவர்களை நோக்கி : நீங்கள் உலகமெங்கும் போய்
சர்வ சிருஷ்டிக்கும் சுவிஷேசத்தை பிரசங்கியுங்கள். மாற்கு : 16:15

ஆம், சகோதரனே! சகோதரியே!!
இராஜாதி இராஜாவின் இராஜரீக அபிஷேகத்தைப் பெற்று
இளவரசனாய் இளவரசியாய் புத்திர சுவீகாரத்தோடு
மரணத்தைப் போல் வலிய அவரது நேச வைராக்கியத்தினால்
தொடப்பட்டு, குணப்பட்டு ஆனந்த தைலத்தால் அபிஷேகிக்கப்பட்ட
நீ எங்கேயிருந்தாலும்... எக்காள சத்தத்திற்கு செவிகொடுத்து
போர்முனை எது? பொக்கிஷ சாலை எதுவெனத் தெரியாமல்
குருட்டாட்டத்திலிருக்கும் உலகமாகிய
பின்னே இழுக்கப்பார்க்கிற பதுங்கு குழிகளை விட்டு

புறப்படு, நம் ஜெயங்கொள்ளும் சோனபதியோடு
சிங்கமும் பாலசிங்கமும் போல் முழங்கிகெர்ச்சித்து
வெங்கல கதவுகளை உடைத்து இருப்பு தாழ்பாட்களை முறித்து
உலகத்தை கலக்குவோராய் ... தேசத்தை அசைப்பவராய்.
எழுந்து புறப்படுவோம்!

ராஜபாதையை செவ்வையாக்கும் ராஜரீகபணிக்கு!!
சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும்
திருவசனத்தை ஜாக்கிரதையாய்ப் பிரசங்கிப்போம்.
நம் தெருக்களிலும், சந்திகளிலும், சாலையருகிலுமிருப்போரை
வருந்தியாவது அழைப்போம்.. ராஜாவின் விருந்துக்கு!

ஊனர், முடவர், குருடர் எவரானாலும் – ஒரே ஆத்துமாவால்
பரலோகத்தை மிகுந்த சந்தோஷத்தால் நிரப்புவோம்.
சேர்ப்போம்!! நமது பொக்கிஷங்களை பரலோகத்தில்
கட்டுவோம். கட்டுபவை பரலோகத்திலும் கட்டபட..........
விதைப்போம்!! நம் முதற்பேருகளை கர்த்தருக்காய்
வைப்போம்!. நம் ஈசாக்குகளைப் பலீபீடத்தில்!
நல்ல போராட்டத்தைப் போராடி... ஜீவனையே
விதைத்தாவது ஜீவாதிபதியைப் பெற்றுக் கொள்ளுவோம்.

'ஆகிலும் நீ, மரணபரியந்தம் உண்மையாயிரு– அப்பொழுது
ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்' – வெளி: 2:10பி

'நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே
அவரோடே கூட உட்கார்ந்தது போல... ஜெயங்கொள்ளுகிறவ
னெவனோ, அவனும் என்னுடைய சிங்காசனத்தில்
என்னோடே கூட உட்காரும்படி அருள்செய்வேன்.' வெளி :3:21

----ஆமென், அல்லேலூயா----

ரிஷியா மிஷன் ஒரிசா:

கர்த்தருக்குள் பிரியமானவர்களே!

அன்பராம் இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். தேசமெங்கிலும் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க வேண்டும். பல மொழி, பல இன மக்கள் நம் நேசரின் கல்வாரி அன்பை ருசித்து, உண்மை இரட்சிப்பில் களித்து– ஆர்ப்பரித்து இந்த தேசத்தை சுவிஷேசத்தால் கிறிஸ்துவுக்கே சொந்தமாக்க வேண்டுமென்ற தரிசனத்தில் தொடங்கப்பட்ட இந்த 'ரிஷியா மிஷன்' என்ற மிஷினரி ஸ்தாபனம்– இளைஞர்கள், மாணவர்கள் மத்தியில் மாபெரும் எழுப்புதலை அனல் மூட்டி அவர்களை கிறிஸ்துவின் சீஷராக்கி– மிஷினரி பணியில் விசேஷித்த இலக்குகளைத் தொடரவேண்டுமென்ற நோக்கில்..

இந்த ஆண்டு ஆயிரம் இளைஞர்களுக்கு (இருபாலாரும்) ஒரு வருட கம்யூட்டர் பயிற்சி மற்றும் ஈராண்டு நர்சிங் பயிற்சி போன்ற பயிற்சிகளை முற்றிலும் இலவசமாகக் கொடுத்து அவர்களை ஆதரித்து கிறிஸ்துவின் சீஷர்களாக மாற்றுதல்.

வாலிப ஆண்கள், பெண்களுக்கான முகாம்கள், பயிற்சி வகுப்புகள், ஆராதனைகள் நடத்துதல்.

குக்கிராமங்களில் ஹெல்த் சென்டர், மருத்துவ முகாம்கள் மூலமாக பயன் மிகுந்த மருத்துவ சேவை புரிந்து இயேசுவின் அன்பினால் ஜனங்களை நேசித்து நற்செய்தி அறிவித்தல்.

இந்த ஆண்டிலே சுமார் ஆயிரம் ஆதிவாசி மற்றும் பின் தங்கிய வகுப்பினருக்கு கிறிஸ்துவின் ஆழமான நற்செய்தியோடு, அவர்களுக்கு வெளிமாநில வேலை வாய்ப்பைக் கொடுத்து, முழுக்குடும்பத்தையும் ஆவி ஆத்துமா சரீர பிரசாரமாகத் திடப்படுத்துவது.

ஆவிக்குரிய புத்தகங்கள், **DVD, VCD** வெளியிடுதல், நற்செய்தி கூட்டங்கள், வேதாகமப் பள்ளிகள், மூலம் கிறிஸ்துவுக்காய் பறப்படும் ஓர் மாபெரும் இரட்சண்ய சேனையை உருவாக்குதல். நற்செய்தி அறிவித்தலும்... சபைகளை ஸ்தாபிப்பதுமே

'**ரிஷியா மிஷன்**' மிஷினரி இயக்கத்தின் பிரதான நோக்கம்.
'ரிஷியா' என்பதற்கு நம் தேவாதி தேவனுக்காக சாதிப்பதற்கு தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்பது பொருள்.

கிறிஸ்துவுக்குள் வாழும் எல்லா தேவப் பிள்ளைகளும்
கழுகுகளைப் போல் எழும்பும், காண்டாமிருகத்துக்கொத்த
பலமிக்க, சாதிப்பதற்கு தெரிந்து கொள்ளப்பட்டவர்களே!
இந்த புத்தகத்தின் ஹிந்தி, மலையாளம் பதிப்புகளுக்காகவும் விரைவில் வெளிவர இருக்கிற '***தேசத்தை கலக்குவோராய் எழும்புவோம்,***' என்ற எனது அடுத்த புத்தகத்திற்காகவும் தேசத்தின் எல்லா மிஷினரி மற்றும் அனைத்து வகை உத்தம ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள். இந்த புத்தகத்தை வாசித்த பின் உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். 'ரிஷியா மிஷன்' எல்லா ஊழியங்களுக்காகவும்– தவறாமல் ஜெபியுங்கள்!
கர்த்தர் உங்களோடிருப்பாராக..... ஆமென்! அல்லேலூயா!!

கிறிஸ்துவுக்குள் உங்கள்
A.ரவி ஆபிரகாம்.
ஸ்தாபகர்– இயக்குனர்.

'ரிஷியா மிஷன்'
14 A, ஞானாயி தெரு,
நாகர்கோவில்–629001
கன்னியாகுமரி மாவட்டம்
தமிழ்நாடு. இந்தியா.

'ரிஷியா மிஷன்'
153, Sakthi Nagar
Rourkela, Orissa.

Ph: 09777995498, 09438139439
09994419101, 04652-235039

e-mail: riziamission2001@gmail.com
riziamission2001@yahoo.com

சுவிசேஷத்திற்காக... தலையைக் கொடுத்தார்களாம்!

ரிஷியா மிஷன் - ஓரிசா: விளையாட்டு வீரனாய், சமூகசேவகனாய், மேடைப் பேச்சாளனாய், வழக்கறிஞர் பட்டம் பெற்ற அரசியல் வாதியாய், அதேச் சமயம்,மிக்க லாபம் தந்த மருந்து தொழிலை நடத்தியதோடு, அரசு ஊழியனாகவும் வாழ்ந்து, எங்கும் எதிலும் வெற்றியோடு... வாழ்வில் நூறு மடங்கு ஆசீர்வதிக்கப் பட்டிருந்த காலம்.

ஆத்தும நேசரின் அழைப்பை ஏற்று அனைத்தையும் உதறி விட்டு அக்கினியாய் எரிந்து தகித்த இரட்சிப்பை என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை! நேசரோடு புறப்பட்டேன் ஓரிசாவுக்கு.

ரிஷியா மிஷன்- தொடர்ச்சியான கலவரங்களையும், மதமாற்றத் தடைச் சட்டத்தையும் கொண்ட மனிதாபிமானமற்ற வன்கொடுமைகளின் பிறப்பிடமான ஓரிசாவை தலைமையிடமாக கொண்டு சுவிசேஷம் அறியப்படாத பகுதிகளில் அறிவிக்கும் நோக்கோடு ஏழை, எளியோர், தரித்திரர், திக்கற்றோருக்கு மருத்துவ உதவி, இலவச நர்சிங் பயிற்சி, கம்ப்யூட்டர் கல்வி, பிற மாநிலங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருதல் போன்ற இன்னும் பிற நற்கிரிகைகளோடு.... பெருவாரியாக வாலிபர்களை ஊக்குவித்து, ஆதரித்து, அறிவித்து, சீஷராக்கி சபை நாட்டும் மிஷினரிப்பணியை தேற்றரவாளனாம் தேவ ஆவியானவரோடிருந்து.... செலவு பண்ணவும், செலவு பண்ணப்படவுமாக... செய்துவருகிறோம்.

இயேசுவின் நாமமே மகிமைப்படட்டும்!

ஒரு காலத்தில் சுவிசேஷத்திற்காக தலையைக் கொடுத்தார்களாம்...- என்றறிந்த போது இது என்ன மூடத்தனம் என்று பரிகசித்த அநேகர்.

இன்று தீவட்டியாய் எரிகிற தங்கள் இரட்சிப்பினால்... எம் நேசருக்காய் கொடுப்பதற்கு ஒரே ஒரு தலை தானே இருக்கிறதென்று பரிதவித்து பாசமிக்க தங்கள் மனைவியோடு நேசக் குழந்தைகளையும் எண்ணிக் கொடுக்கின்றனர் சுவிசேஷ வேள்விக்கு!

இது போன்ற அற்புதமான நேச வைராக்கியத்தை எங்களுக்குள்ளும் அனல் மூட்டி இவ்வளவு பெரிதான இரட்சிப்பை தந்த பாசமுள்ள நேசமணவாளனாம் ஆத்தும நேசர் இயேசுவின் திருப்பலி பீடத்தில் குழந்தைகளோடு... எங்களையும் இச்சிறிய புத்தகத்தையும் சர்வாங்க தகன பலியாய்... பரிவோடு சமர்பிக்கிறோம்.

நேசரின் திருப்பாதத்தில்...
A.ரவி ஆபிரகாம்-
வில்ஸ் அமுதாரவி
ரிஷியா மிஷன்-ஓரிசா